

பெண்மை

என்பதைக் காப்பாற்ற வேண்டும்

ஸ்த்ரீ தர்மம் பற்றி ஸ்ரீ மகா பெரியவா கூறிய கருத்துக்கள்



தொகுப்பு : ரா. கணபதி



பெண்மை

என்பதைக் காப்பாற்ற வேண்டும்

जय जय शंक.
हर हर शंक.



ஸ்த்ரீ தர்மம் பற்றி

ஸ்ரீ மகா பெரியவா கூறிய கருத்துக்கள்

தொகுப்பு : ரா. கணபதி

First edition : Deepawali, 2000
Second edition : Deepawali, 2011
Published by : **Garuda Features**
1, Church Street, Puzhudiwalkam, Chennai - 091
Mobile : 99405 52516

Price : **Rs. 50 /-**

Printed at : **Meera Offset**
Triplicane, Chennai - 5
94442 43031 / 72001 99963

Copies available at :

SRI SURABHI JAGADGURU SATAPTHI PUBLICATIONS
No. 158/12, Lake View Road
West Mambalam
Chennai - 600 033

GIRI TRADING AGENCY
3, Sannidhi Street, Mylapore
Chennai - 600 04

AGASTHIAR PUBLICATIONS
Clives Building
9A, Nandhi Koil Street
Teppakulam, Trichy - 620 002

SRI CHAKRA TRADERS
7, Ponnambala Vadhyar Street
Mylapore, Chennai - 600 004

CHANDRA BOOK SHOP
5, Ther Veedhi, Salem

SHYAMALA BOOK DEPOT.
150, S.N. High Road
Tirunelveli - 627 001

VIJAYA PATHIPPAGAM
20, Raja Veedhi, Coimbatore -1

MARKANDEYA BOOK
42,43,44, Kumbeswarar Temple
Kumbakonam

ARUL NANDHI PUTHAGA NILAYAM
49-A, Kannamman Koil Street
Tirunelveli - 627 01

GANAPATHY BOOK CENTRE
Near Anjaneyar Temple
Ram Nagar, Nanganallur
Chennai - 600 061

RADHAMANI STORES
137, Raja Veedhi, Coimbatore -1

SHANMUGA VILASAM BOOK STALL
Subramanya Swami Koil
Tiruchendur - 628 215

MANI TRADERS
57, Kailasapuram
Sangeeta Sabha Road
Tirunelveli Junction - 627 001

MALLIGAI BOOK CENTRE
11, West Veli Street
Opp. Railway Station
Madurai - 1

OPPILIAPPAN AUDIO & VIDEO
Oppiliappan Sannadhi Street
Tirunageswaram - 612 204

உள்ளே . . .

பதிப்புரை

வாசகர்களுக்கு வணக்கம்.

ஸ்த்ரீ தர்மம் பற்றி ஸ்ரீ மகா பெரியவா கூறியுள்ள கருத்துக்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலில் உள்ள இந்த விஷயங்கள், ஸ்ரீ ரா. கணபதி அண்ணாவால் தெய்வத்தின் குரல் ஏழாம் பாகத்துக்காகத் தொகுக்கப்பட்டவை. சில காரணங்களால் இந்தப் பகுதி மட்டும் அந்த நூலில் இடம்பெறாமல் போய்விட்டது. ஏதோ தெய்வ சங்கல்பம் போலும், 'பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்' என்ற தலைப்பில் நான் இந்தப் பகுதியைத் தனி நூலாக வெளியிட்டேன்.

எனது சூழ்நிலை காரணமாக, நூல் விற்பனைக்கு நான் பெரிதாக எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. எனவே, இதுபோல ஒரு நூல் வெளியானதே பலருக்குத் தெரியாது. எனினும் சில பத்திரிகைகளில் நூல் விமர்சனம் வெளிவந்தது. அவற்றைத் தொடர்ந்து இந்த நூலைப்பற்றி விஷயம் கேள்விப்பட்ட சில அன்பர்கள் என் வீடு தேடி வந்து வாங்கிச் சென்றார்கள். இவ்வகையில் சுமார் 100 பிரதிகள் மட்டுமே விற்பனை ஆயின. வேறுசில அன்பர்கள் மிகுந்த சிரத்தையுடன் பல வழிகளிலும் முயற்சி செய்து சில பிரதிகளை விற்பனை செய்தனர். இவ்வகையில் சுமார் 400 பிரதிகள் விற்பனை ஆகியிருக்கும். என்னிடம் இருந்த பாக்கி பிரதிகளை இரண்டு அன்பர்கள் தாங்களாக முன்வந்து விலைக்கு வாங்கிக் கொண்டனர். இவையெல்லாம் பழங்கதை.

அதன்பிறகு இந்த நூலை மீண்டும் வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்குப் பெரிதாக எழவில்லை. எவ்வாறு விற்பனை செய்வது என்பது மிக முக்கியமான கேள்வி அல்லவா?

ஆனாலும் இந்த நூலை என்னால் எளிதில் மறக்க முடியவில்லை.

காரணம், இந்த நூலில் உள்ள விஷயம் அப்படிப்பட்டது. அது மட்டுமல்ல, ஏறக்குறைய ஸ்ரீ மகா பெரியவாளின் கருத்துக்கள் அனைத்துமே நூல் வடிவில் வெளியிடப்பட்டிருந்தாலும், ஸ்த்ரீ தர்மம் பற்றிய அவரது இந்த உரை மட்டும் வேறு எந்த நூலிலும் வெளியாகவில்லை.

இவை எல்லாவற்றையும்விட மிக முக்கிய காரணம், இந்த நூலுக்குக் கிடைத்த உணர்ச்சிபூர்வமான வரவேற்பு. நூலைப் படித்த அன்பர்கள் எனக்கு எழுதிய கடிதங்களும் சரி, இந்த நூலை விற்பதற்காக சிலர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் சரி, என் மனதில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இந்நிலையில் சில அன்பர்களது வேண்டுகோளின்பேரில் மீண்டும் இந்த நூலை வெளியிடுகிறேன்.

இந்த முறை, கொஞ்சம் தரமான காகிதம் பயன்படுத்தி, ஓரளவு நல்ல முறையில் அச்சிடவும் முடிந்திருக்கிறது

இதுவும் தெய்வ சங்கல்பம்தான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அன்பான, பணிவான வணக்கங்களுடன்,

டி. ஸ்ரீதரன்

பெண்மை

என்பதைக் காப்பாற்ற வேண்டும் *

சாஸ்திர-ஸம்ப்ரதாய வழிமுறைகளைச் சொல்கிற நாங்கள் ஸ்த்ரீ தர்மம் பற்றி என்ன சொல்கிறோம்? 'ஸ்த்ரீ தர்மம் என்பது, ஸ்த்ரீயானவள் தன்னுடைய ஸ்த்ரீத்வம் என்பதான இயற்கையாயமைந்த பெண்மையை சுத்தமாக ரக்ஷித்துக் கொள்வதில்தான் இருக்கிறது. இதற்கு அவள் புருஷன் மாதிரி உத்யோகம், பதவி என்பது போன்ற வெளியுலக வியாபாரங்களில் போகாமல் அடக்கமாக இருந்துகொண்டு வீட்டு நிர்வாஹத்தை அப்பழுக்கில்லாமல் கவனித்துக் கொள்வதையே தன்னுடைய பிறவிப் பணியாகவும், பிறவிப் பிணிக்கு விமோசனம் தரும் ஸாதனா மார்க்கமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால்தான் ஒரு ஸ்த்ரீக்கு வாஸ்தவமான, நிலைத்து நிற்கிற உள்நிறைவும், ஓயாத பறப்பு இல்லாத சாந்தி-நிம்மதிகளும் ஏற்படும். அவள் ஒருத்தியின் நிறைவோடு நிற்காமல் அவளுடைய சுத்தமான க்ருஹ நிருவாகமே குடும்பத்தையும் ஒரு ஒழுங்கான கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். க்ருஹத்தைச் சேர்ந்த புருஷன், பெண்டாட்டி, குழந்தைகள் ஆகிய எல்லா அங்கத்தினர்களும் ஸௌக்யமாக ஒன்றுபட்டு வாழ க்ருஹ லக்ஷ்மியின் பணியே வழிவகுக்கும். இப்படி தனி மநுஷ்யர்கள் அடங்கிய குடும்பம் ஒரு ஒழுங்கு முறையில் இருந்தால், பல குடும்பங்கள் அடங்கிய நாட்டிலும் தன்னால் ஒழுங்கு ஏற்படும். தனி மநுஷ்யர், குடும்பம், நாடு ஆகிய ஒவ்வொன்றிலும், எல்லாவற்றிலும் ஒரு நிம்மதியும் சாந்தியும் ஸௌக்யமும் இருப்பதற்கு இவ்வாறு ஸ்த்ரீகளும் புருஷர்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட ஸ்வதர்மப்படி, அவள் உள் நிர்வாஹம்,

---

* இவ்வுரையின் பெரும்பகுதி, 1984 - ல் ஓர் உரையாடலில் கூறியது.

(சிரித்து) Home Department, அவன் வெளி நிர்வாஹம் - External Affairs என்று சாஸ்த்ரங்கள் அவரவர் ஸ்வபாவத்தை அநுஸரித்து அழகாகப் பங்கீடு செய்து portfolio கொடுத்திருப்பதைப் பின்பற்றுவதே உபாயம்' என்று சொல்கிறோம்.

அவயவங்கள் வேறு - ஜீவன் ஒன்றுதான்

அப்படிச் சொன்னால் இக்காலத்துப் புதுக் கொள்கைக்காரர்களாக இருக்கிற எல்லோருக்கும் கோபம் கோபமாக வருகிறது. 'இதெல்லாம் சாஸ்த்ரங்களை எழுதிய கொடுங்கோல்காரப் புருஷர்களின் வழியிலேயே போய், பெண்கள் புருஷர்களுக்கு ஸரிநிகர் ஸமானமாக எழும்பவிடாமல் அவர்களை அடக்கி, ஒடுக்கி, நசுக்கி வைக்கிற உபாயமே. ஸ்த்ரீ தர்மம் - புருஷ தர்மம் என்று பேதமேதும் இல்லை. மநுஷ்ய ஸமுதாயம் முழுதற்கும் ஸமமான ஒரே தர்மந்தான்' என்று அவர்கள் எங்களைக் கண்டனம் செய்கிறார்கள்.

ஆனால் பதட்டப்படாமல் கொஞ்சம் ஆய்ந்து ஓய்ந்து ஆலோசித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்.

இங்கே ஸமத்வப் போட்டி, போராட்டங்களுக்கு இடமே இல்லை. ஒரு தினுஸான கார்யம் உசத்தி, இன்னொன்று தாழ்த்தி என்றும் இல்லை. வெளிக்கார்யம் பண்ணி ஸம்பாதிப்பது, ஸம்பாதித்ததைக் கொண்டு வீட்டுக் கார்யங்களைப் பண்ணுவது ஆகிய இரண்டுமே மனித வாழ்க்கைக்கு அத்யாவச்ய மானவைதான். அப்படி இரண்டு தினுஸாகத்தான் பதி-பத்னிகளுக்கு தர்ம சாஸ்திரம் அதிகாரம் வழங்கியிருக்கிறது. மந்த்ரி இலாகா உதாரணம் சொன்னேனே, அதிலே ஒரு புது ஏற்பாடாக, Income Minister என்று வரவுக்கு மந்திரி 'பதி' என்றும், Expenditure Minister என்று செலவுக்கு மந்திரி 'பத்னி' என்றும் வைத்திருக்கிறது! பல பேருக்குத் தெரியாத விஷயம்:

ஸ்த்ரீகளுக்கே க்ருஹத்துக்கான ஸகலமும் வாங்கிப் போட்டுச் செலவு செய்வதற்காகத் திட்டம் போடும் அதிகாரத்தை தர்ம சாஸ்த்ரம் ஸ்பஷ்டமாகக் கொடுத்திருக்கிறது. அவன் உழைத்து ஸம்பாதனம் பண்ண வேண்டியது; அவளே தக்க ஆலோசனையுடன் அதைக் கொண்டு எல்லாச் செலவுகளுக்கும் திட்டம் போட்டு க்ருஹத்தை நிர்வஹிக்க வேண்டும் - இப்படி சாஸ்த்ரம் சொல்வதிலிருந்தே ஸ்த்ரீகள் தங்களுக்கென்று ஒரு ஸ்வதந்திரம், அதிகாரம் இல்லாமல் அடக்கி நசுக்கி வைக்கப்படவில்லை என்று புரியும். இப்படி இரண்டு விதப் பணிகள் இருப்பதில் ஒன்றுதான் உசத்தி, மற்றது தாழ்த்தி என்ற மாதிரி அபிப்ராயங்கள் ஏன் எழும்ப வேண்டும்? ஆனபடியால், வெளிலோக கார்யத்தில் ஈடுபட்டிருக்கும் புருஷனுக்குத்தான் உசந்த ஸ்தானம், அகத்துக் கார்யத்தோடு நின்றுவிடுகிற ஸ்த்ரீக்குத் தாழ்ந்த ஸ்தானம் என்று எண்ணவேண்டிய அவசியமேயில்லை. (சிரித்து) அவனுக்கு வெளி உத்யோகமானால், அவளுக்கு உள் உத்யோகம்! அந்த உள் உத்யோகத்தை, 'அடுப்பங்கரைச் சாக்கிலி' என்று மட்டமாக நினைக்காமல் Domestic Management Executive என்று நினைத்துவிட்டால் எல்லாம் ஸரியாகிவிடும்; ஸரிநிகர் ஸமானமும் ஆகிவிடும். இன்னும் ஸம ஸ்தானத்துக்கு மேலேயேகூட இதை ஸ்த்ரீகள் ஒரு படி உசத்தியும் நினைக்கலாம். எப்படியென்றால், அவன் சம்பளத்துக்காக வெளியிலே ஆஃபீஸ் பண்ணுகிறானென்றால், இவளோ honorary - யாக அல்லவா உள் ஆஃபீஸ் நடத்துகிறாள்? கூலிக்கு வேலை செய்வதைவிட 'ஆனரரி'யாகச் செய்வதில் 'ஆனர்' ஜாஸ்திதானே? அதாவது அதன் ஸ்தானம், கூலிக்குச் செய்வதை விட உசத்திதானே? அதுவும் ஆறு மணி, எட்டுமணி வேலை, வாராந்தர விடுறை என்ற 'கண்டிஷன்'கள் இல்லாமல், தூங்குகிற நேரம் போக ஸதாகால கௌரவ உத்யோகம்! இப்படிப் பார்த்தால் ஸம ஸ்தானத்துக்கு ரொம்பவும் மேலேயே போய்விடுகிறதல்லவா?

வேடிக்கைக்குச் சொன்னேன். இங்கே ஸம-அஸமப் பேச்சுக்கே இடமில்லை. இரண்டு விதமான அவசியப் பணிகளை இரண்டு விதமான பேர்கள் தங்கள் தங்கள் ஸ்வதர்மத்துக்கு ஏற்றபடி செய்கிறார்கள். அவ்வளவுதான்! ச்வாஸ கோசம், ஹ்ருதயம் என்ற இரண்டு அவயவங்கள் இருவிதமான அத்யாவச்யப் பணிகளைச் செய்து ஒரு ஜீவனை உயிர்வாழச் செய்கின்றனவென்றால், இங்கே ஒன்றுக்கொன்று ஸமத்வப் போராட்டம் எங்கேயிருந்து வந்தது? அப்படித்தான் ஸ்த்ரீ-புருஷாள் தங்கள் தங்கள் இயற்கைக்கேற்ற ஸ்வதர்மப் பணியால் தாங்களும் நிஜ மனிதர்களாக உயிர்வாழ்ந்து, குடும்பம், நாடு ஆகியவற்றையும் வாழ வைப்பதும்.

ஸ்வபாவமும் ஸ்வதர்மமும்

'ஸ்வதர்மம்' என்று ஒன்று சொன்னேன். அது ஒவ்வொரு ஜீவனும், அதே மாதிரி பல ஜீவர்கள் ஒன்று சேர்ந்த மநுஷ்ய ஸமூஹத்திலுள்ள ஒவ்வொரு வர்க்கமும் தனக்கென இயற்கையாக ஏற்பட்டிருக்கும் ஸ்வபாவப்படி ஒழுகி, தான் உள்ள ஸ்டேஜில் தனக்கு ஒரு நிறைவைப் பெற்று அடுத்த ஸ்டேஜுக்கு ஏற உதவி செய்யும் ஜன்மப் பணிதான். இங்கே புருஷ வர்க்கம், ஸ்த்ரீ வர்க்கம் என்ற இரண்டைப் பற்றிய பேச்சு. அப்படி பொதுவாக ஸத்ரீ வர்க்கம் - பெண்குலம் என்பது - தானும் நிறைந்து, உலகத்துக்கும் தன்னாலேயே நிறைவைத் தர எது உபாயமோ, அதையே ஸ்த்ரீயின் ஸ்வதர்மமென்றும் ஸ்த்ரீ தர்மமென்றும் சொல்வது.

ஸ்ருஷ்டி விசித்ரம் நம்மை ப்ரமிக்க வைக்கிற ஒன்று. மநுஷ்ய ஜாதி தன்னுடைய புத்திப் பெருமையால் ஸ்ருஷ்டியின் உச்சியில் தானே இருப்பதாக முழக்கிக் கொண்டிருந்தாலும், ஸ்ருஷ்டியிலுள்ள ஸகல ஜட-சேதனப் படைப்புகளிலும் இந்த மஹா புத்திசாலிதான் தனக்கே இயற்கையான ஸ்வபாவ-ஸ்வதர்மங்கள் இன்னவென்று

ஸரிவரத் தெரியாமல் திண்டாடுகிறான்! அது திண்டாட்டம் என்றும் தெரியாமல் கொண்டாட்டம் போடுகிறான்! இதற்கு ஒரு உருவகமாக - personification - ஆகத்தான் - அர்ஜுனன் தனக்கான ஸ்வதர்மமே தெரியாமல் இருந்ததும், அவனுக்கு பகவானே உபதேசம் பண்ணி அதைத் தெரிவித்ததும். அர்ஜுனனுக்குத் தானே நேரில் உபதேசித்தவரேதான் தர்ம சாஸ்த்ரகாரகர்களான ரிஷிகளின் மூலம் ஸகல ஜனங்களுக்கும், ஜனங்களில் ஒவ்வொரு வர்க்கத்தினருக்கும் அவரவர்களுக்கான தர்மங்களை உபதேசித் திருக்கிறார். ஸ்வதர்மம் தப்பிப் போவதற்கான ஸ்வேச்சை (சுயேச்சை) ஸ்வதந்திரத்தை மநுஷ்ய ஜீவனுக்குக் கொடுத்து மாயை பண்ணுகிறவரே, அவனுக்கு அதிலிருந்து மீட்சி தருகிற தர்மோபதேச, ஞானோபதேசங்களையும் சாஸ்த்ரங்களின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். அவற்றிலிருந்துதான் நாம் நம்டைய ஸ்வதர்மத்தை அறியவேண்டும்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பதாக மேல் மட்டத்தில் மட்டும் தெரியும் இஹ லோக ஜீவனத்தில் ஸௌக்யமாகத் தெரிகிறவற்றுக்காகவே ஸ்வதர்மம் தப்பி வேறே வழியில் போவது. அப்படியே போய்க்கொண்டிருந்தால் பல தினுஸிலும் விபரீதம் நேரும்.

ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு ஒழுங்குப்பாட்டு முறையிலான ஸ்வதர்மம் என்று ஸ்ருஷ்டியில் இருக்கிறது. இதில் மேல்மட்டத்தில் பார்த்து, உசத்தி, தாழ்த்தி பேதங்களைக் கல்பித்துக்கொண்டு, ஒருவிதமான ஸ்வதர்மம் படைத்தவர்கள் ஸம உரிமைப் போராட்டம் என்ற பெயரில், வேறுவிதமான ஸ்வதர்மத்துக்குப் பாயப் பார்த்தால், ஆரம்பத்தில் ஸரியாகப் போகிற மாதிரியே இருந்தாலும் போகப் போகத் தனி ஜீவர்களின் வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, மொத்தமான பெரிய ஜன ஸமுதாய வாழ்க்கை எல்லாம் கெட்டுப் போகும். இஹம், பரம்

இரண்டுக்குமான நிலைத்த ஸௌக்யம் கிடைக்காமல், ஏதோ ஒரு இடைக்காலத்தில் ஏதோ சில லாபங்கள் கிடைத்த மாதிரித் தோன்றுவதோடு முடிந்து போகும். சின்னதான தாற்காலிக நிறைவுக்காக நிஜமான நித்யமான நிறைவைக் கோட்டை விட்டதாக முடிந்து போகும்.

ஸ்த்ரீ ஜாதி அதன் ஸ்வபாவத்துக்கேற்ற ஸ்வதர்மத்தில் போகாமல் புருஷ ஜாதியின் வழியில் போவது இப்போதே விபரீத பலன்களை உண்டாக்க ஆரம்பித்துவிட்டது. தங்கள் இயற்கைக்கு மாறுபட்ட தர்மம் ஒத்துக் கொள்ளாமல் ஸ்த்ரீகள் சரீர உபாதை, மனஸிலே stress, tension, அதனாலேயே மேலும் சரீர பாதிப்பு என்று கஷ்டப்படுகிறார்கள். குடும்ப வாழ்க்கையிலும் இது வந்து மோதித் தாக்குகிறது. வெளியிலே அப்படிக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள்ளே பழைய நாளில் க்ருஹலக்ஷ்மியை மத்யமாக வைத்து ஒரு வீட்டில் புருஷன்-பெண்டாட்டி-குழந்தைகள் பரஸ்பர அன்பினால் ஒரு அமைதியான கட்டுக்கோப்பில் இணைந்திருந்த நிலைமை இப்போது நலிவு கண்டு, அன்புக்குப் பதில் பணம்-பதவியால் ஒரு show வுக்கு மாத்திரம் குடும்பம் என்று இருக்கிற மாதிரி ஆகிக்கொண்டு வருகிறது; குடும்ப வாழ்வில் அமைதியும் போய்விட்டது. இப்படிப் பல குடும்பங்களில் ஆகிறபோது, ஜன ஸமுதாயமும் சீர்கெட்டுப் போகத்தானே செய்யும்?

ஸ்த்ரீ ஜாதியின் மென்மை உயர்வு

ஸ்த்ரீயின் ஸ்வபாவமும், அதற்கேற்ற ஸ்வதர்மமும் பரம உத்தமமானவை. ஸ்ருஷ்டியிலேயே உச்சமாக இருக்கிற உயர்ந்த குணங்களுக்கும் பண்புகளுக்கும் ஆச்ரயமாகவே ஸ்த்ரீ ஸ்வபாவம், அல்லது ஸ்த்ரீத்வம் என்ற பெண்மை இருக்கிறது. ஜீவ ராசிகளைப் பலவாகப் பிரித்து வைத்து வெவ்வேறு ஸ்வபாவ-ஸ்வதர்மங்களைப் பராசக்தி கொடுத்திருப்பதில்



ஸ்த்ரீயின் ஸ்வபாவமும், அதற்கேற்ற ஸ்வதர்மமும் பரம உத்தமமானவை. ஸ்ருஷ்டியிலேயே உச்சமாக இருக்கிற உயர்ந்த குணங்களுக்கும் பண்புகளுக்கும் ஆச்ரயமாகவே ஸ்த்ரீ ஸ்வபாவம், அல்லது ஸ்த்ரீத்வம் என்ற பெண்மை இருக்கிறது.

மநுஷ்ய ஜாதியில் ஸ்த்ரீ-புருஷாளுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிற ஸ்வபாவ-ஸ்வதர்மங்களில் ஸ்த்ரீ தர்மமான பெண்மையே பௌருஷம் என்கிற ஆண்மையை விட அநேக அம்சங்களில் உத்தமமானதாக இருக்கிறது. ஸாராம்சமாகச் சொன்னால் ஆண்மை, பெண்மை என்கிறவற்றில் ஆண்மையில் வன்மை தூக்கல்; பெண்மையில் மென்மை தூக்கல்.

வாழ்க்கைப் போராட்டம் என்பதாக ஜீவனத்தை ஒரு போராட்டமாகவே சொல்கிறோம். அதில் ஸ்த்ரீ அகத்துள்ளேயே செய்கிற பணி, புருஷர் வெளியுலகத்தில் செய்கிற பணி ஆகிய எதுவானாலும் போராடிப் போராடியே ஜயிக்க வேண்டு மாகையால் இரண்டிலுமே போராடுவதற்கான வலிமை - வன்மை - வேணத்தான் வேணும்.

ஒரு அகத்தைக் கட்டி மேய்ப்பதற்கு எவ்வளவோ சரீர பலமும், மனோபலமும் வேணத்தான் வேணும். அதோடு கூட எந்தப் புருஷனுக்கும் கிடைக்க முடியாத பாக்யமாக, பரம ப்ரேமைக்கும் த்யாகத்துக்கும் உருவகமாக இருக்கிற தாய்மை என்பதை ஒரு ஸ்த்ரீ ஏற்கிறாளே, அதை ஏற்பதற்கு, கர்ப்பத்தைச் சுமப்பதிலிருந்து பிறந்த குழந்தைக்குத் தன் ஜீவரத்தத்தையே க்ஷீரமாக்கிக் கொடுத்து, ராப் பகல் பாராமல் ஸம்ரக்ஷிப்பது வரை எல்லாம் செய்வதற்கு எவ்வளவு வலிமை வேண்டும்?

அதே மாதிரி புருஷனுக்கும் மென்மையம்சங்கள் உண்டுதான். 'அவனும் ஒரு மநுஷ்யனா? ம்ருகம் மாதிரி' என்கிறோமே, அதிலிருந்தே தெரிகிறது. மநுஷ்ய ஜாதிப் புருஷனுங்கூட, க்ரூர மிருகங்கள் மாதிரி ஒரே வன்மையாக இல்லாமல் மென்மையும் கலந்து இருந்தாலே மநுஷ்யன் என்று சொல்லிக் கொள்ளத் தகுதி உண்டு என்பது.

சரீர ரீதி, குணத்தின் ரீதி இரண்டிலும் க்ரூர ம்ருகங்களிலிருந்து மநுஷ்ய ஜாதிக்கு வரும்போது சொரசொரப்புப் போய் 'மழ மழ'

உண்டாகிறது. அந்த மநுஷ்ய ஜாதியிலும் புருஷனைவிட ஸ்த்ரீயிடம் இந்த மழமழப்பு பூர்ணத்வத்தை அடைகிறது. அப்படித்தான் ப்ரக்ருதியில் பராசக்தி வைத்திருக்கிறாள். ஜீவராசிகளை நைஸ் பண்ணிக்கொண்டே போய் அதன் சிகர ஸ்தானம் ஸ்த்ரீ என்று வைத்திருக்கிறாள்.

ம்ருகத்தின் சரீரம் முழுதும் ரோமம், மநுஷ்ய ஜாதிப் புருஷனுக்கு அப்படியில்லை. ஸ்த்ரீக்கோ அவனுக்கு இருக்கிற தாடி-மீசை கூட இல்லை! ம்ருகங்களிடம் மாம்ஸ பலம் நிறைந்திருக்கிறது. அந்த அளவுக்கு மநுஷ்ய ஜாதிப் புருஷனிடம் இல்லை. இல்லாவிட்டாலும் அவனுடைய உசரம், பருமன், கட்டுமஸ்து, கரணை கரணை (biceps) ஆகியவையும் இல்லாத ஸௌகுமார்யம் (மென்மை) ஸ்த்ரீ சரீரத்துக்கே இருக்கிறது. சராசரியில் ஆண்கள் தானே பெண்களைவிட உயரமாக இருக்கிறார்கள்? க்ரூர ம்ருகங்களின் உறுமல், கத்தல்களைவிட ஒரு புருஷனின் சாரீரம் ம்ருதுவாக இருக்கிறது என்றாலும், அவனுடைய கட்டைத் தொண்டையும் நைஸ்பட்டு ஸ்த்ரீக்குத்தான் மிகவும் மதுரமான சாரீரம் வாய்த்திருக்கிறது.

ஸமன் செய்கிற கோட்பாடு கொஞ்சங்கூட எடுபடாதபடி, ஒருகாலும் மாற்ற முடியாத மாறுபாடுகளோடுதான் இயற்கையே ஸ்த்ரீ-புருஷாளைப் பாகுபடுத்தி உருவாக்கியிருக்கிறது. லோக வாழ்க்கைக்கே மத்யமாக இருக்கிற ப்ரஜோத்பத்தியில் (ப்ரஜா உற்பத்தியில்) ஸ்த்ரீ-புருஷாள் வெவ்வேறு பணிகளைச் செய்வதற்கேற்ற முறையிலேயே அவர்களுக்கு சரீர அமைப்பை வேறுபடுத்திக் கொடுத்திருக்கிறது. அவர்களுக்குள்ளே மாறு பாடாக (ஆணுக்கு) ஆன்ட்ரஜன், (பெண்ணுக்கு) ஈஸ்ட்ரஜன் என்பது போலப் பல வைத்து அதையொட்டி ஒருவருக்கொருவர் ரொம்பவும் வித்யாஸமாக இயங்கும்படி வைத்திருக்கிறது. இது சரீரத்தோடு நிற்காமல், மனஸ், குணம் முதலியவற்றையும் இன்ஃப்ளுயன்ஸ் பண்ணுகிறது.

சரீரத்தோடு, அதற்கேற்ற குணமும் சேர்ந்தே ஒரு ஜீவன். body, mind இரண்டும் ஒரு unit - ஆக integrate ஆகிறது என்கிறார்கள். அப்படி குணத்தைப் பார்க்கும்போதும் வன்மை, மென்மைகளில் புருஷனிடம் முன்னது தூக்கல், ஸ்த்ரீயிடம் பின்னது தூக்கல் என்றே தெரிகிறது.

ம்ருகங்களுக்கு வெட்க குணம் இல்லை. அவை பிறந்த மேனியாய் சுற்றுகின்றன. புருஷன் அப்படியில்லை. ஸ்த்ரீக்கு வெட்க குணம் இன்னும் ஜாஸ்தி - ஸ்வதர்மத்தை முறித்தேயாக வேண்டும் என்று அவர்கள் முனைந்து போகாத வரையில் அப்படித்தான் இருந்திருக்கிறது! கொஞ்சம் அஸப்யமான (பொதுச்சபைக்கு ஆக்குவதற்கில்லாத) பேச்சுக் கேட்டால் கூட அவர்கள் முகமே குப்பென்று சிவந்து வெட்க உணர்ச்சியைக் காட்டிவிடும்.

பராசக்தியின் உதாரணம்

பராசக்தி என்று அத்தனை ஆற்றல்களுக்கும் பிறப்பிடமாக ஒருத்தியைச் சொல்கிறோமே! அவளுக்கே 'ஹ்ரீமதி' - 'வெட்க குணம் படைத்தவள்' - என்று ஸஹஸ்ர நாமத்தில் பெயர் இருக்கிறது!

இதிலே ஒரு பெரிய தத்வமே உள்ளடங்கியிருக்கிறது. 'பெண்கள் அடக்கமாக இருக்க வேண்டும்' என்று நாங்கள் சொல்கிறபோது சில பேர் எங்களை ஆக்ஷேபித்துக் கேட்பார்கள். 'நீங்கள் சொல்வது உங்கள் சாஸ்திரத்துக்கே விரோதமாக இருக்கிறது: 'சக்தி' என்ற வார்த்தையே பெண்பாலாக இருக்கிறது. ஜகத் வியாபாரம் செய்கிற மஹாசக்தியையும் நீங்கள் ஸ்த்ரீ தெய்வமாகத்தான் சொல்கிறீர்கள். ஸ்த்ரீகள் எல்லாரும் அவளுடைய ஸ்வரூபங்களே தான். *தவ தேவீ பேதா: ஸ்த்ரிய: ஸமஸ்தா: ஸகலா ஜகத்ஸு* * - என்கிறீர்கள். அப்படிப்பட்ட சக்தி வாய்ந்தவர்களை அடங்கி இருக்கச் சொன்னால் எப்படி?' என்று கேட்பார்கள்.

* துர்கா ஸப்தஸதீ 11.6



பராசக்தியிடம் அத்தனை சக்தி இருந்தாலும்
அணுவுக்குள் உள்ள சக்தியிலிருந்து ஆரம்பித்து
எல்லாவற்றின் சக்தியையும் வெளியில்
தெரியாமல் உள்ளே அடைத்து
அடக்கித்தானே வைத்திருக்கிறாள்?

பதில் என்னவென்றால்: பராசக்தியிடம் அத்தனை சக்தி இருந்தாலும் அணுவுக்குள் உள்ள சக்தியிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றின் சக்தியையும் வெளியில் தெரியாமல் உள்ளே அடைத்து அடக்கித்தானே வைத்திருக்கிறாள்? அது மாத்ரமில்லை. இத்தனை ஜகத் வ்யாபாரமும் பண்ணுகிற தன்னையும் வெளியிலே காட்டிக் கொள்ளாமல் ஒளிந்து கொண்டுதானே இருக்கிறாள்? ஒளிந்து கொள்வதென்பது வெட்கத்தினால்தானே? அதோடு, அவள் மஹாசக்தியாயிருந்த போதிலும், தன் சக்தி அத்தனையையும் அடக்கி ஒடுக்கிக் கொண்டு, 'ஸதி' என்றே பெயர் பெற்ற மஹாபதிவிரதையாகவே பரமேச்வரனின் சாந்தத்தில்தான் தன்னுடைய நிறைவைக் கண்டு அப்படியே 'சிவ சக்த்யைக்ய ரூபிணி'யாக* ஒன்றிக் கிடக்கிறாள். தான் செய்யும் ஜகத்-வ்யாபாரம் முழுதையும் 'பஞ்ச க்ருத்ய பரமானந்த தாண்டவம்' என்ற பெயரில் ஈச்வரனே நடராஜனாகி ஆடிக்காட்டுவதாகத்தான் அவள் சிதம்பரத்தில் காட்டி, தான் வெறுமனே பார்த்துக் கொண்டு மாத்திரம் இருக்கிற 'சிவநடன ஸாக்ஷி'யாக இருக்கிறாள். அதே மாதிரி ஸ்த்ரீகளும் தங்களுடைய சக்தியைத் தாங்களே வெளிக்காட்டாமல், வெளியிலே கொட்டாமல் அதை அடக்கிக் கொண்டு விட்டால், அது வீணாகப் போகாமல் புருஷ ஜாதியின் மூலம் இன்னும் சோபிதமாக 'ரேடியேட்' ஆகும். அதில் ஸந்தேஹமேயில்லை. நான் ஏதோ அர்த்தமில்லாமல் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம்.

வைஷ்ணவத்தில் ஜகத்வியாபாரம் முழுவதும் செய்கிற சக்தியாக மஹாவிஷ்ணுவைச் சொல்லியிருக்கிறது. சாக்தத்தில் 'சக்தி' என்று ஸ்த்ரீயாகச் சொல்லியிருக்கிறதென்றால் வைஷ்ணவத்தில் மஹாவிஷ்ணுவைப் 'புருஷன்' என்றே சொல்லியிருக்கிறது.

---

* 'சிவசக்தி ஐக்யரூபிணி' - லலிதா ஸஹஸ்ரநாமத்தில் 999 - வது நாமம்

'புருஷஸூக்தம்' என்றே சொல்கிறது அவரைக் குறித்துத்தானே? அதிலே இரண்டாவது அநுவாகத்திலே அவருடைய சக்தியை இரண்டு விதமாகப் பிரித்து, இரண்டும் அவருடைய இரண்டு பத்னிகள் என்று சொல்லியிருக்கிறது. ஒரு பத்னி நமக்கெல்லாம் தெரிந்த மஹாலக்ஷ்மி. ஸாதாரணமாக ஸ்ரீதேவி-பூதேவி என்று சொல்வதில் 'ஸ்ரீ' அவள்தான். வெளியிலே பொங்கிக் கொண்டு தெரிகிற அழகும் அன்புமே 'ஸ்ரீ' அல்லது 'லக்ஷ்மி'. அவளை புருஷ ஸூக்தத்தில் இரண்டாவதாகச் சொல்லியிருக்கிறது. அப்படியானால் முதல் பத்னி என்ற ப்ரதம ஸ்தானம் அந்த ஸூக்தத்தில் - நமது மத மூலமான வேதத்திலேயே வருகிற 'அதாரிடி' வாய்ந்த ஸூக்தத்தில் - எவளுக்குக் கொடுத்திருக்கிறது என்று பார்த்தால், 'ஹ்ரீ' என்ற லஜ்ஜா ஸ்வரூபிணிக்கே (வெட்க உருவினளுக்கே) கொடுத்திருக்கிறது! வெளியிலே தெரிவதைவிட சக்தி வாய்ந்ததான உள்ளடங்கிய அழகையும் அன்பையுந்தான் அந்த உள்ளடக்கத்தாலேயே இங்கே 'ஹ்ரீ' என்ற வெட்கமாகச் சொல்லியிருக்கிறது! சக்தி இருக்கிறது என்பதற்காக அதை ஸ்த்ரீ தெய்வமான ஹ்ரீ, தானே வெளியிலே அவிழ்த்துக் கொட்டவில்லை. 'புருஷன்' என்றே சொல்லப்படும் தன் புருஷ தெய்வத்திற்கு அடங்கிய பத்னியாகத் தான் இருந்துகொண்டு அவரே ஜகத் வியாபாரம் செய்யும்படி விட்டிருக்கிறாள்.

பரப்ரஹ்மத்துக்கு வாசகமாக ப்ரணவம் இருக்கிற மாதிரி பராசக்திக்கு வாசகமாக ஒரு மந்த்ரம் இருக்கிறது. 'சக்தி பீஜம்' என்றே அதைச் சொல்வார்கள். ஆனால் அதுவே 'வெட்கம்' என்பதன் அடியாகப் பிறந்ததாகத்தான் இருக்கிறது! 'ஹ்ரீ' என்றால் 'வெட்கம்' என்று சொன்னேனல்லவா? அந்த அக்ஷரத்தைக் கொண்டேதான் பராசக்தியின் மந்த்ர ஸ்வரூபம் இருக்கிறது. இதை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறாற் போலத்தான் ஸஹஸ்ர நாமத்தில் அந்த சக்தி பீஜாக்ஷரத்தைச் சொல்கிற நாமாவுக்கு அடுத்ததாகவே அவளுக்கு 'ஹ்ரீமதி' என்ற நாமாவைக் கொடுத்திருக்கிறது.


ஆகையினால் ஸ்த்ரீகளிடம் சக்தி இருப்பது வாஸ்தவந்தான் என்றாலும் அதை அவர்கள் தாங்களே வெளிக்காட்ட வெட்கப்பட்டு, அடக்கி உள்ளே வைத்துக்கொண்டு, அதுவாகவே புருஷஜாதி மூலம் ரேடியேட் ஆக விடவேண்டும் என்பதுதான் தாத்பர்யம். . . .

பெண்களுக்கு வெட்கம் முதலான மென்மைக் குணங்கள் ஜாஸ்தியாக இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அவர்கள் புருஷர்களைவிடச் சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு விடுவார்கள். பயப்பட்டு விலவிலத்துப் போவது, துக்க உணர்ச்சியில் குபுகுபுவென்று அழுவது இப்படியெல்லாம் அவர்களுடைய 'நேச்சர்' இருக்கிறது.

இதெல்லாம் சின்ன அம்சங்கள். பெரிய அம்சங்கள் பரமோத்தமமானவை.

க்ருஹலக்ஷ்மி

ம்ருகங்களுக்கில்லாத அன்பு, அந்த அன்போடேயே துணை சேர்ந்து வருகிறவையான தியாகவுணர்ச்சி, பணிவு, பொறுமை, ஈகை, தாக்ஷிண்யம் முதலான அநேக குணங்கள், குணநலன்கள் மநுஷ ஜாதிக்கு இருக்கின்றன; இருக்க வேண்டும். இருந்தாலும் வெளி வியவஹாரங்களில் நிறைய மொத்துப்பட வேண்டிய ஸ்வதர்மத்தைக் கொண்டவன் புருஷன் என்பதை உத்தேசித்து புருஷ ஸ்ருஷ்டி தர்மமானது அவனை இவற்றில் ரொம்பவும் நைஸ் பண்ணி விடாமல் கொஞ்சம் சொரசொரவாகவே விட்டிருக்கிறது! ஸகல வியவஹாரத்திலும் அன்பு அவச்யந்தான் என்றாலும், நடைமுறை லோகத்தில் வெளி வியவஹாரங்களில் நாலா தினுஸு ஜனங்களுக்கும் ஈடுகொடுக்க வேண்டியிருக்கிற சூழ்நிலையில் அன்பே மூலச்சரக்கு என்று வைத்துக் கார்யம் பண்ண முடியாது. மழ மழ மட்டும் இங்கே பலிக்காது. சொர சொர, கடு கடு எல்லாமும் வந்து சேரத்தான் செய்யும். அதைப் புருஷன் தன் பௌருஷத்தினால் - அதாவது ஆண்மையின் வன்மையினால் -



அன்பும், அன்பின் ஸஹபாடிகளாக இருக்கிற
தியாகம், ஸேவை, அடக்கம், தயா - தாக்ஷிண்யங்கள், எளிமை,
இன்னும் இதுபோல ஸ்ருஷ்டியிலே உத்தம அம்சங்களாக
இருக்கப்பட்ட குண ஸம்பத்துக்கள் முழுக்க ஒன்றுசேர்கிற
இடம்தான் ஸ்த்ரீத்வம் - பெண்மை.

காட்டிச் சமாளித்துக் கொள்வான். ஆனால் உள் வியவஹாரம் - அகத்து நிர்வாகம் - என்று வருகிறபோதோ இங்கே ஸொந்தக் குடும்பமே நிலைக்களனாக இருப்பதால், அன்பே இங்கே முழுக்க முழுக்க ஆளுகை செலுத்த வேண்டும். இங்கேயும் கண்டிப்பு - தண்டிப்புகள் வரத்தான் செய்யுமானாலும், அது விரோத பாவத்தில் கொண்டு விடாமல், கெட்டதை நல்லதாகச் சீர்திருத்தும் உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாகவே இருக்கும். அறம் மாதிரி மறத்துக்கும் துணையாகும் அன்பைப் பற்றித் திருக்குறளில் சொல்லியிருப்பது இதைத்தான். இப்படி அன்பே மையமாகத் தானும் வாழ்ந்து, குடும்பத்தாரையும் வாழ்விப்பது ஸ்த்ரீயால்தான் முடியும். அன்பும், அன்பின் ஸஹபாடிகளாக இருக்கிற தியாகம், ஸேவை, அடக்கம், தயா - தாக்ஷிண்யங்கள், எளிமை, இன்னும் இதுபோல ஸ்ருஷ்டியிலே உத்தம அம்சங்களாக இருக்கப்பட்ட குண ஸம்பத்துக்கள் முழுக்க ஒன்றுசேர்கிற இடம்தான் ஸ்த்ரீத்வம் - பெண்மை. அதுதான் ஸ்வபாவம் என்கிற தன்னியற்கையாக எந்த பொம்மனாட்டிக்கும் இருப்பதால், இப்போது ஸ்வேச்சை யால் அந்த ஸ்வபாவத்துக்கு வித்யாஸமாகப் போவோமே என்று அவளுக்குத் தோன்றினாலும், அவள் மட்டும் கொஞ்சம் மனஸு வைத்துவிட்டால் போதும், ஸ்வபாவ ஸ்வதர்மமான பெண்மையை மீளவும் பெற்று அகத்தை அன்புக் கோயிலாக ஆக்கிவிட முடியும்.

இயற்கையிலிருந்து பிய்த்துக்கொண்டு போவது இப்போது ஸுலபமாகத் தோன்றுகிறது. மனஸ் வைத்துவிட்டாலோ இயற்கையிலேயே போய் ஒட்டிக்கொண்டு சேர்வதுதான் அதை விட ஸுலபம். அதுவே தனக்கும் நிறைவு தந்து மற்றவர்களுக்கும் நிறைவு தருவது என்று தெரியும்.

"அகத்துக்கு, ஸம்ராஜ்ஞியாக - அதாவது ராணியாக - இரு" என்று வேதம் கலியாணப் பெண்ணை வாழ்த்தி, இன்று வரை விவாஹத்தில் அந்த மந்த்ரத்தைச் சொல்லி வருகிறோம். அப்படி

அன்பினால் - அதிகாரத்தினால் அல்ல - அவள் ராணியாக இருப்பாள். அவளுக்குத்தான் 'க்ருஹ லக்ஷ்மி' என்ற பேரே தவிர அவனுக்கு 'க்ருஹ விஷ்ணு' என்று பேரில்லை. ஏனென்றால் தர்ம சாஸ்திரப்படி வீடு அவளுக்கேயான துறை. புருஷனுடைய வன்மையால் ஸாதிக்க முடியாததை அவளுடைய மென்மையே இங்கே ஸாதித்துத் தந்துவிடும். அப்படி இருப்பதுதான் அவளுக்கான ஸ்வதர்மம். அதனால்தான் அகத்துப் பணி அவளுக்கே, அவள் அகத்துப் பணிக்கே என்று தர்ம சாஸ்திரம் அழகாக வரம்பு போட்டுக் கொடுத்திருக்கிறது.

பெண்கள் வேலைக்குப் போவது

வீட்டையும் கவனித்துக் கொண்டு வேலைக்கும் போகிறோம் என்றால் இரண்டிலுமே 'டெடிகேஷன்' குறைந்து போகும். இந்த மாதிரி இரட்டைப் பொறுப்பு எடுத்துக் கொண்டால் தாக்குப் பிடிக்க முடியாத ஸ்ட்ரெயின் ஆகி, ரொம்பவும் திணறி ச்ரமப்படும் படியாகும். டெடிகேஷன் குறைவதால் அந்த இரண்டு வேலைகளுமே த்ருப்திகரமாக அமையாமல் கெட்டுப் போகும். ஆஃபீஸ் போவதற்காக அகத்துக் கார்யத்தை அரக்கப் பரக்க அரைகுறையாகச் செய்வது, அதே மாதிரி அகத்துக்குத் திரும்பவேண்டும் என்பதற்காக ஆபீஸில் அவஸரக் கோலமாகப் பண்ணுவது என்றாகி இரண்டுக்கும் பழுது ஏற்படும். வேலைகளில் பழுது ஏற்படுவது ஒரு பக்கம் இருக்கட்டும். தப்பான ஆசையினால் இப்படிப்பட்ட பழுதை ஏற்படுத்துகிற ஸ்த்ரீக்கு அதனால் பாபமும் ஸம்பவிக்கும். பாபத்துக்குக் கூலியாகப் பல விதங்களில் கஷ்டம் வந்து சேரத்தானே செய்யும்?

வீட்டுப் பணிக்குக் குந்தகம் என்கிறதால் மட்டும்தான் பெண்களுக்கு உத்யோகம் வேண்டாம் என்று சொல்லவில்லை. வீட்டையும் நன்றாகக் கவனித்துக் கொண்டு, உத்யோகம் முறைப்படி பார்ப்பதற்கு முடிந்தாலும்கூட அது வேண்டாம்தான்.

ஏனென்றால் உத்யோகம் என்று ஏற்படுகிறபோது லோக வியவஹாரம் பலவற்றுக்கு ஈடு கொடுத்துத்தானாக வேண்டியிருக்கும். பல பேரிடை புழங்கிக் கொண்டு, பலவித forces -ஐ சமாளித்தாகத்தான் வேண்டியிருக்கும். இதை வெளியில் நன்றாகவே செய்ய முடிந்தாலுங்கூட, இதனால் உள்ளூர ஸ்த்ரீத்வம், பெண்மை என்கிறதற்கே ஆணிவேரான மென்மை அரிபட்டுப் போகத்தான் செய்யும். அந்த மென்மையின் பெருமை இன்றைய ஸ்த்ரீகளுக்குத் தெரியாவிட்டாலும், வாஸ்தவத்தில் அப்படி ஸ்த்ரீத்வத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்போது அடைகிற நிறைவான சாந்தியையும் ஆனந்தத்தையும் ஒருத்திக்கு எந்தப் பதவியும் ஸம்பாத்யமும் தரவே தராது. தான் தானாக இருக்கிற இயற்கை நிலையின் பரிபூர்ண நிறைவு, தான் வேறே ஒன்று மாதிரி - ஸ்த்ரீயானவள் புருஷன் மாதிரி - இருக்கிற செயற்கை நிலையில் எப்படிக் கிடைக்க முடியும்?

உத்யோகத்துக்குப் போகாத பெண்களிலும் இந்த சாந்தியும் ஆனந்தமும் தெரியாதவர்கள்தான் நிறைய இருப்பார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்களும் ஏதோ ஒரு தினுஸில் அந்த மென்மை நிறைவைப் பறிகொடுத்தவர்களாகவே இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக, அந்த நிறைவுக்கு நிச்சயமாக ஹானி செய்யும் என்று தெரிந்த ஒன்றில் இறங்குவதை எப்படி அநுமதிக்க முடியும்?

சுக ஜீவனத்துக்குப் பதில் ஆரோக்யக் குறைவு

பொருளாதாரத்தைக் காரணம் காட்டி ஸ்த்ரீகளும் வேலைக்குப் போவதாகச் சொல்வதையும் ஏற்க முடியாமல்தான் இருக்கிறது. ஸ்த்ரீ ஸம்பாதிப்பதில் முக்கால்வாசிக்கு மேலே அந்த ஸம்பாத்தியத்துக்காக அவள் 'ஸம்பாதித்து'க் கொள்கிற அநேக அநாவச்யச் செலவுகளுக்குத்தான் போகிறது.



தான் தானாக இருக்கிற இயற்கை நிலையின்
பரிபூர்ண நிறைவு, தான் வேறே ஒன்று மாதிரி -
ஸ்த்ரீயானவள் புருஷன் மாதிரி - இருக்கிற செயற்கை
நிலையில் எப்படிக் கிடைக்க முடியும்?


ஸுக ஜீவனத்துக்கு வழி என்ற பெயரில் ஒரு ஜீவனுக்கு அவச்யமான உடலுழைப்பும் சுறுசுறுப்பும் இல்லாமல் சோம்பேறியாய் ஆவதற்கு உதவி பண்ணுகிற ஸாதனங்கள் - நூதன நூதனமான உபகரணங்கள் - தினந்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. உற்பத்தி பண்ணுபவர்கள், எவையெல்லாம் இல்லாமலே நாம் வாழ்க்கை நடத்த முடியுமோ அவற்றை யெல்லாம் ரொம்பவும் அவச்யமானவைபோல் ஏகமாக விளம்பரப்படுத்தி, கடைகளில் புதுப் புதுப் பண்டங்களைக் குவித்துக் கொண்டே போகிறார்கள். ஸ்த்ரீகள் உத்யோகம் பார்த்துக் கையில் பணம் துள்ளுகிறபோது என்ன ஆகிறதென்றால் இந்த அநாவச்யப் பண்டங்களையெல்லாம் வாங்கி வைத்துக் கொள்ளத் தோன்றுகிறது.

பத்ரிகையிலே வேடிக்கையாகப் போட்டிருந்தது - அரைக்கிறது, கரைக்கிறது முதலான கார்யங்கள் உடம்பால் உழைத்துப் பண்ணினால் அதுவே ஒரு ஸ்த்ரீக்கு யோகாஸனம் பண்ணுகிறதற்கு மேலே தேஹாரோக்யத்தைக் கொடுத்து விடும். அப்படிப் பண்ணாமல் இதற்கெல்லாம் இப்போது புதிசாக மிக்ஸி, க்ரைண்டர் மாதிரி உபகரணங்கள் வந்திருக்கிறவற்றை ஒரு ஸ்த்ரீ வாங்குகிறாள். கையை, உடம்பை அசைத்து, தான் ஒன்றுமே பண்ணாமல் மெஷின்கள் மூலமே பண்ணிக் கொள்கிறாள். அதனால் ஸரிவர உடம்புக்கான எக்ஸர்ஸைஸ் இல்லாமல் போய், கோளாறுகள் வருகின்றன. ஆபீஸ் வேலையில் தேஹாப்யாஸம் இல்லையோன்னோ? இன்னம் சொல்லப் போனால், தேஹாரோக்யத்துக்கு ஹானியாகவே கூட அதில் அநேகம் வந்து சேரும். அப்படித்தான் இந்தப் பொம்மனாட்டிக்கும் ஆகிறது. டாக்டரிடம் போகிறாள். டாக்டர், 'ஃபிஸியோதெரபி' பண்ணுகிறார். அதில் அவளை என்ன பண்ணச் சொல் கிறாரென்றால்: அம்மியில் ஒட்டி ஒட்டி அரைக்கிற மாதிரி, கல்லுரலில் சுழற்றிச் சுழற்றி அரைக்கிற மாதிரியெல்லாந்தான்.

ஏதோ பந்து, கிந்தைக் கொடுத்து எக்ஸர்ஸைஸ் பண்ண வைக்கிறார்!

ஒழுங்காக அகத்துக் கார்யம் செய்யாததால் ஆரோக்ய ஹானி, மெஷின்கள் வாங்குகிற செலவு, அதைவிடப் பெரிசாக டாக்டர் செலவு, வீடு - ஆபீஸுக்கு நடுவே வைத்யத்துக்குப் போவதற்கு அவகாசம் ஏற்படுத்திக் கொள்வதன் டென்ஷன், அதனால் நரம்புக் கோளாறு, மனஸின் பாதிப்பு - இப்படி ஒரு அனர்த்த பரம்பரை!

பழைய காலத்துப் பொம்மனாட்டிகள் அகத்துக் கார்யங்களுக்கே அஞ்ச மாட்டார்கள். இழுத்துப் போட்டுக் கொண்டு எதையாவது செய்துகொண்டேயிருப்பார்கள். இடிப்பது, புடைப்பது, வடாம், அப்பளம் இடுவது என்று பண்ணிக் கொண்டேயிருப்பார்கள். குனிந்து, நிமிர்ந்து, கையைக் காலை ஆட்டி அவர்கள் அப்படிப் பண்ணியதுதான் அவர்களுக்கு நல்ல பசியை உண்டாக்கி, அதற்கேற்கச் சாப்பிட்டு உடம்பை நல்லாரோக்யத்தில் வைத்திருப்பது, வேளா வேளைக்குத் தூங்கி எழுந்திருப்பது என்றிப்படி நல்ல ஸ்திதியில் வைத்திருந்தது. இப்போது ஸ்த்ரீகள் மாத்திரையும் கையுமாக இருப்பதுபோல் அப்போது இல்லாமல் காப்பாற்றியது. பெண்கள் குனிந்து நிமிர்ந்து கோலம் போட்டு, எச்சில் இட்டு வந்ததே அவர்களை அன்றைக்கு ஸிஸேரியனிலிருந்து காப்பாற்றி ஸுக ப்ரஸவமாகப் பெறச் செய்தது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். இப்போது குனிந்து தரையில் எச்சில் இடுவதற்கு இல்லாமல் டேபிள் சாப்பாடு வந்துவிட்டது. அதோடு ஏகப்பட்ட அநாசாரம், அநாரோக்யம் வந்திருக்கிறது! சாப்பிடுகிற இடம், சமைக்கிற இடம், வாசலில் கோலம் போடுகிற இடம் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் இந்த ஃபாஷன் யுகத்தில் கோமயம் (சாணம்) ஓடியே போய்விட்டது. அதோடு மடியும் போய்விட்டது. Antipollution - க்கு ஈடில்லாத அருமருந்தும் போய்விட்டது. கோமயம் எப்பேர்ப்பட்ட கிருமி நாசினி என்று ரஷ்ய தேசத்து ஸயன்டிஸ்ட் கூடச் சொல்கிறான்.



பெண்கள் குனிந்து நிமிர்ந்து கோலம் போட்டு, எச்சில் இட்டு வந்ததே அவர்களை அன்றைக்கு ஸிஸேரியனிலிருந்து காப்பாற்றி ஸுக ப்ரஸவமாகப் பெறச் செய்தது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

நம்முடைய ஃபாஷன் யுகத்து ஸ்த்ரீகளுக்கு அது ஸரிப்பட்டு வரவில்லை.

டேபிள் சாப்பாடு கூட நம்முடைய தேசத்து ஆஹாரத்துக்கு எடுத்ததில்லை என்று வெள்ளைக்கார 'டயடீஷியன்' ஒருத்தனே சொல்லியிருக்கிறான்! 'நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு இந்தியர்கள் தங்கள் சாப்பாட்டை - குறிப்பாக, தக்ஷிண தேசத்துச் சாப்பாட்டை - சாப்பிடுவது ஜீர்ணத்துக்கு அவ்வளவு உகந்ததில்லை. அடி வயிற்றிலிருந்து மேலே சற்று ப்ரெஷர் கொடுக்கிற மாதிரி, காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்து சாப்பிட்டாலே அந்த தினுஸு ஆஹாரம் ஜெரிப்பதற்கு உதவியாயிருக்கும்' என்று சொல்லியிருக்கிறான். புருஷர்கள் சப்பளாம் கொட்டிக் கொண்டு (சப்பணம் கூட்டிக்கொண்டு) உட்காருவதும், ஸ்த்ரீகள் ஒரு காலைத் தரை சேர மடித்து, இன்னொன்றைக் குத்திட்டு வைத்துக் கொள்வதுந்தான் நம் தேச ஆசாரம். குத்திட்ட காலைக் கையால் கட்டக் கூடாது. அது மூதேவி. கையைக் காலுக்கு உட்பக்கமாகவே வைத்திருக்க வேண்டும். அதுவே ஸ்ரீ...

சிறுகக் கட்டி பெருக வாழ்வது

ஸ்த்ரீகளுக்கு அவச்யமான உழைப்பை மெஷின்கள் அபஹரிப்பதையும், அதோடு அவை பணத்தையும் அபஹரிப்பதையும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இப்படிப் புதுப் புது மோஸ்தரில் உற்பத்திப் பண்டங்கள் நாளுக்குநாள் வந்து கொண்டிருப்பதால் இன்றைக்கு வாங்கினது அடுத்த வருஷம் பழசாகி, புது மோஸ்தர் வாங்க வேண்டியிருக்கிறது!

துணிமணிகளிலோ செலவு கேட்கவே வேண்டாம் என்கிறார்கள்! ஸ்த்ரீகள் இவ்வளவுதான் என்றில்லாமல் பீரோ கொள்ளாமல் ஏகமாக அடுக்கிக் கொண்டே போகிறார்களென்று தெரிகிறது.

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்வது' என்ற உத்தம லக்ஷ்யம் போய்விட்டதுதான் பெரிய அனர்த்த ஹேதுவாக நம் குடும்ப வாழ்க்கையையும், ஸமுதாய வாழ்க்கையையும் பாழ் பண்ணிக் கொண்டிருக்கிறது. எத்தனை ஸுக போக ஸாதனங்கள் இருந்தும் அதிருப்தியே படுகிற இப்போதைய மனப்பான்மை போய், 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பழையபடி எளிய வாழ்க்கை வாழ்ந்து, அதிலேயே த்ருப்தி காணப் பழக்கிக் கொண்டுவிட்டால் போதும்; குடும்பம் நடத்தப் புருஷன் ஒருத்தன் ஸம்பாத்யமே போதும். 'செட்டும் கட்டுமாக' என்று சொல்வது - அப்படி, தாம்-தூம்களை அடியோடு தள்ளி, 'இது இல்லாமல் நம்மால் முடியாதா?' என்று ஒவ்வொன்றாக ஆலோசித்துப் பார்த்து அநுபோகங்களைக் குறைத்துக் கொண்டு, மனஸை ஸந்துஷ்டியாக வைத்துக் கொண்டால், பொருளாதாரப் பிரச்னை என்று காரணம் காட்டிப் பெண்டுகள் உத்யோகத்துக்குப் போகத் தேவையே இருக்காது.

வேலையில்லாத் திண்டாட்டம்

இவர்கள் உத்யோகத்துக்குப் போவதாலேயே இன்னொரு விதத்தில் பொருளாதாரப் பிரச்னை பயங்கரமாக வலுத்துக் கொண்டே போவதையும் கவனிக்க வேண்டும். வேலை இல்லை என்று ஏராளமான புருஷ ப்ரஜைகள் தவிப்பதைத்தான் சொல்கிறேன். என் தொண்ணூறு வருஷ வாழ்க்கையில் அன்றிலிருந்து இன்று வரை இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டே இருப்பதைப் பார்க்கிறேன். புதுப் புது ஸர்க்கார் ஆஃபீஸ்கள், கம்பெனிகள், இன்டஸ்ட்ரிகள் நாள்தோறும் தோன்றி லக்ஷம் லக்ஷ வேலைகள் பெருகினாலும், நம்முடைய ஜன ஸங்கியையும் (மக்கள் தொகை) ஏறிக்கொண்டே போவதால், அத்தனை லக்ஷமும் fill up-ஆகி அதற்கப்புறமும் பத்து லக்ஷக் கணக்கில் புருஷர்கள் வேலையில்லாமல் தவித்துக் கொண் டிருக்கிறார்கள். அதே ஸமயத்தில் பெண்டுகள் ஏராளமாக

வேலைக்கு சேர்கிறார்கள். 'ரிஸப்ஷனிஸ்ட்' போன்ற சில வேலைகளுக்குப் பெண்களையேதான் 'ஸெலக்ட்' செய்வதாகவும் இருக்கிறது. இதைப் பற்றி ஸ்த்ரீகளேதான், நடு நிலைமை யிலிருந்து கொண்டு ந்யாய ரீதியில் நினைத்துப் பார்க்க வேண்டும். ந்யாய ரீதியோடு அவர்களாலேயே முடியக்கூடிய த்யாக ரீதியிலும் நினைத்துப் பார்க்க வேண்டும். 'புருஷர்களை வேலையில்லாமல் முட்டாக்குப் போட்டு வீட்டில் உட்கார்த்தி வைத்துவிட்டு நாம் அவர்களுடைய இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன?' என்று நினைத்துப் பார்க்க வேண்டும். 'உத்யோகம் புருஷ லக்ஷணம்' என்ற வசனத்தை மாற்றி 'உத்யோகம் ஸ்த்ரீ லக்ஷணம்' என்று தாங்கள் பண்ணப் பார்ப்பதால், எத்தனை புருஷர்களின் வயிற்றிலடிக்கிற கொடுமையைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஜீவாதாரப் பணி சேதமாக விடலாமா?

பொறுமையாகவும் பொறுப்பாகவும் அகத்துக்கான ஸகல காரியமும் தன் கையாலேயே செய்வது என்றால் அப்போது ஒரு பெண் ஆபீஸ் எண்ணத்தை ஸ்நானம் பண்ணிவிட்டு நாளில் பெரும் பகுதி வீட்டுப் பணிக்கேதான் செலவிட வேண்டியதாக இருக்கும். இப்போது வாய்க்கு வேண்டிய பக்ஷணம், பணியாரம் பண்ணக்கூட ஆபீஸ் போகிற பெண்களால் முடிவதில்லை. ஹோட்டல்களிலிருந்து வாங்குகிறார்கள். இதில் செலவுக்குச் செலவு. அதோடு அநாரோக்யம், அநாசாரம் எல்லாமும். இதெல்லாவற்றையும் விட ஒரு ஸ்த்ரீ ஹ்ருதயத்துக்கு நிறைவைத் தருவது அவள் தன் கையால், தன் கையுழைப்பால், அகத்து மநுஷ்யர்கள் வயிற்றை நிறைவித்துப் பார்ப்பதுதான். பக்ஷணம், பணியாரம் மட்டுமில்லை. தினப்படி சமையலும் இதில் சேர்த்துத்தான். அது நேராக உயிர் கொடுக்கிற உயர்ந்த பணி. **'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!'** என்று

'மணிமேகலை'யில் சொல்லியிருக்கிறது. உண்டி பெறுவதற்காகப் புருஷன் ஸம்பாதித்து வந்து மளிகை ஸாமான் வாங்கிப் போட்டாலும், அது நேராகச் சாப்பிடக்கூடிய உண்டியாகி வயிற்றுக்குப் போவது அவனுடைய க்ருஹிணியின் பணியால்தான். உடம்புக்கு எது நல்லதோ, அதோடு உள்ளத்துக்கும் எந்த ஆகாரம் நல்லது என்று சாஸ்த்ரம் சொல்கிறதோ, அதை வாய்க்கும் ருசியூட்டுவதாக ஆக்கிப் போட்டு, உடலையும் உயிரையும் உள்ளத்தையும் ஒன்றோடொன்று ஒட்டி வளர்க்கும் பாக்யம் பெண்டுகளுக்கே உரியதாக இருக்கிறது. தான் நன்றாக சமைத்துப் போட்டு அதைத் தாலி கட்டிய ப்ரிய பதியும், வயிற்றிலே பிறந்த செல்வங்களும், மாமனார், மாமியார் போன்ற பூஜிதையான பெரியவர்களும் ரஸித்துச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது ஒரு ஸ்த்ரீ பெறுகிற ஆத்மத்ருப்தி, (சிரித்து) job satisfaction - இன்னது என்றே பெரிய மானேஜிங் டைரக்டராக உத்யோகம் செய்கிற புருஷனுக்குக்கூடத் தெரியாது. நான் குழந்தையாயிருந்த நாளில் பார்த்திருக்கிறேன். பெண்டுகள் ஸந்தித்துக் கொள்கிறபோது முதலில் தாங்கள் செய்த சமையலைப் பற்றித்தான் பேசுவார்கள். அப்புறமும் விசாரித்துத் தெரிந்து கொண்டதில் இன்றைக்கு வரையில் அதுதான் அவர்களுக்கு முக்ய விஷயமாக இருக்கிறது என்பது தெரிகிறது. தாங்கள் பார்த்துப் பார்த்து வயிறுகளை ரொப்புகிற இந்தக் கார்யத்தை - உயிரோடு ஒட்டிப் போகிற கார்யத்தை - சொல்லிக் கொள்வதில் பெண்களுக்கு எப்படிப்பட்ட ஒரு த்ருப்தி இருக்கிறது! ஆ◌ஃபீஸ், அதற்காக அவஸரச் சமையல் என்று சொல்லிக்கொண்டு இப்படி ஜீவாதாரமாகச் செய்கிற பணி சேதப்பட்டுப் போகவிடக்கூடாது.

இவள் ஆ◌ஃபீஸ் போகாவிட்டாலும் காலை வேளையில் புருஷனுக்கு ஆ◌ஃபீஸ் அவஸரம் இருக்கலாம். குழந்தைகளும் அவஸரமாக ஸ்கூலுக்குப் போகவேண்டியிருக்கலாம். அதனால்

அவர்கள் ஏதோ அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடுவதாக இருக்கும். அப்படி இருக்கும்போது இவளும் ஆஃபீஸ் போய்விட்டு விளக்கு வைக்கிற நேரத்துக்கு அப்புறம்தான் வீடு திரும்புவது என்றால் ராத்ரிச் சாப்பாடும் அவஸர கதியில்தான் இருக்கும். அல்லது ஆசாரத்துக்கும் ஹானியாக ஆரோக்யத் துக்கும் ஹானியாக, காலை செய்த அவஸரச் சமையலிலேயே ஒரு பாகத்தை ஃபிரிட்ஜில் மிச்சம் வைத்து அதைச் சாப்பிடுவதாக இருக்கும். இதெல்லாம் உதவாது. 'புத்தமுது' என்று அப்போதே சமைத்ததைச் சாப்பிடுவதுதான் ஆசாரம், ஆரோக்யம் இரண்டுக்கும் உதவும். இந்தப் பெரிய அன்ன கைங்கர்யம் ரா வேளையில் ஸரியாக நடப்பதற்காகவாவது பெண்டுகள் உத்யோகத்துக்குப் போகாமலிருப்பதுதான் நல்லது.

ரா இரண்டாம் ஜாமம் பிறப்பதற்குள் - அதாவது ராத்ரி ஒன்பது மணிக்குள் - பக்வம் பண்ணின (சமைத்த) த்ருட பதார்த்தமான ஆஹாரம் சாப்பிட்டுவிட வேண்டும் என்பது சாஸ்த்ரம். அதற்கப்புறம் கஞ்சி, பால், பழம் மாதிரியானவைதான் சாப்பிடலாம். இப்போது பெண்கள் வேலை செய்து, அலுத்துச் சலித்து, வீடு வந்து சேருகிற போதே இருட்டிப் போய்விடுகிறது. அப்புறம் அலுப்பிலே ரெஸ்ட் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. விச்ராந்தி பண்ணிக் கொள்வது என்ற பேரில் டீவி பார்க்கத் தோன்றுகிறது. அதிலே வருகிற காட்சிகளோ விச்ராந்தி பண்ணுவதற்கு நேர்மாறாக இன்னும் நரம்புகளை முறுக்கேற்றி விடுவதாகத்தான் இருக்கின்றன என்று கேள்வி. அதையே 'விச்ராந்தி' என்று பொய்யாக எடுத்துக் கொண்டு அதன் இழுப்பில் அதை விட்டு நகர முடியாமல் ரொம்ப நேரம் உட்கார்ந்துவிட்டு, அப்புறம் 'கடனே' என்று சமையல் சாப்பாட்டை முடிக்கிறபோது மணி பாட்டுக்கு ஏறி விடுகிறது. பாவம், குழந்தைகளுக்கு வயிற்றைக் கிள்ளும். அது தெரியாமலிருக்க அதுகளுக்குக் கடையில் வாங்கிய கண்ட கண்ட

தின்பண்டங்களைக் கொடுப்பது; அதனால் செலவு; வியாதி இன்னொரு பக்கம். இதுதான் நான் தெரிந்து கொண்டிருக்கிற வரையில் இக்கால உத்யோக புருஷிகள் நடத்துகிற க்ருஹ தர்மம்.

இதை இப்படி விடவே கூடாது. தங்களுக்குக் கிடைத்திருக்கிற வரப்ரஸாதத்தை ஸ்த்ரீகள் வ்ரயம் செய்யவே கூடாது. புருஷன், குழந்தைகள், புருஷனின் மாதா-பிதாக்கள் ஆகியோருக்கு தான் பட்டிருக்கிற கடமைக்கு மேலே அவளுக்கு எதுவுமில்லை.

மாமியார் விஷயம்

புருஷனின் மாதா-பிதாக்களைச் சொன்னேன். ஸமீப காலம் வரையில் மாமியார் என்பவள் வேண்டாதவளாக இருந்தாள்; இப்போது வேண்டியவளாகிவிட்டாள்; ஆனால் இது நல்ல திருப்பம் என்று ஸந்தோஷப்படும்படி இல்லாமலிருப்பதுதான் பெரிய குறை. இப்போது மாமியார் எதற்குத் தேவைப்படுகிறாள் என்றால் மாட்டுப்பெண் ஆஃபீஸுக்குப் போயிருக்கிறபோது குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காகத்தான்! பேபி-ஸிட்டர், க்ரெஷ் முதலானதுகளை விட மாமியார் கவனிப்பிலேயே சள்ளையும் குறைச்சல், செலவும் குறைச்சல் என்பதாலேயே அவளை வா, வா என்று கார்யார்த்தமாகக் கூப்பிட்டு வைத்துக்கொள்கிறார்கள். பெண்கள் உத்யோகம் பார்ப்பது ஸகலமான பேருக்கும் இப்போது பெருமையாக இருப்பதாலும், அது ரொம்ப அவச்யந்தான் என்று தோன்றுவதாலும், மாமியார்மார்களும், ஸந்தோஷமாகவே குழந்தைகளுக்கு 'ஆயா பண்ண' ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் வயஸு காரணமாக உடம்பு இடம் கொடுப்பதில்லைதான். அக்கடா என்று படுத்துக் கொண்டிருக்கமாட்டோமோ என்றுதான் உள்ளூர இருக்கும். ஆனாலும் இன்றைய போக்குக்கே அவர்களும் ஆதரவாக இருப்பதால் ச்ரமப்பட்டுக் கொண்டே பொறுப்பைச் சுமக்கிறார்கள். அம்மாவை விடப் பாட்டி என்றால் குழந்தைகளுக்கு ஸ்வாதீனம்



அன்ய மோஹத்தில் நம் மதாசரணைகளை
அடியோடு விடத் துணிந்துவிட்ட புருஷர்கள் பலரைப்
பொண்டாட்டிமார்கள்தான் திரும்பத் திரும்ப
நச்சரித்துக் கொஞ்சத்தில் கொஞ்சமாவது
மதத்தின் பக்கம் திருப்பி வந்திருக்கிறார்கள்.

ஜாஸ்தி; பயம் குறைச்சல். அதனால் படுத்தி எடுக்கத்தான் செய்யும். அதையும் பொறுத்துக்கொண்டுதான் பாட்டிமார்கள் செய்கிறார்கள். அவர்களே அப்படி ஸம்மதமாக இருந்தாலுங்கூட இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்துவது கொஞ்சமும் தர்ம ந்யாயங்களில் வராது. வயஸுக்காலத்தில் அவர்களைப் பிள்ளை-மாட்டுப்பெண் உட்கார்த்தி வைத்து சுச்ரூஷை செய்யவேண்டியதே தர்மமும் ந்யாயமும். அதற்கு நேர்மாறாக, தங்கள் பொறுப்பை அவர்களிடம் தள்ளி வேலை வாங்கினால் அது மஹா தோஷமாகும். அந்த வயஸுகட்டத்தில் வீட்டுப் பொறுப்பு முழுதையும் மாட்டுப்பெண்ணே வாங்கிக்கொண்டு சுற்றுக் கார்யம் சிலதற்குத்தான் மாமியாரை எதிர்பார்க்கலாம்.

ஒரு ஸ்த்ரீ க்ருஹிணியாக வீட்டோடேயே இருந்து கொண்டிருந்தால்கூட, புருஷன்-குழந்தைகளின் ஆஃபீஸ்-ஸ்கூல் அவஸரத்தில் காலை வேளையில் அவள் அவஸரமாகவே ஆக்கிப் போட வேண்டியிருந்தாலும் ராத்ரியாவது அதற்குக் 'காம்பன்ஸேட்' பண்ண வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

காலை வேளைச் சாப்பாடு எப்படிப் போனாலும் ஸாயந்திரம் பசங்கள் ஸ்கூல் விட்டு வந்ததும் தாயாராகப் பட்டவள் அதுகளுக்குப் புதிதாகத் தன்கையால் தினம் ஒரு தினுஸாக டிஃபன் பண்ணிப் போட்டு அந்த இளம் நெஞ்சுகள் ஸந்தோஷப் படுவதைப் பார்த்துத் தன் ஹ்ருதயமும் ஸந்தோஷப்படவேண்டும். அப்புறம் விளக்கேற்றி வைத்துவிட்டு, தெய்வ ஸ்தோத்ரம், பாராயணம் என்று கொஞ்சம் போது செலவு செய்துவிட்டு ராத்ரிச் சமையலுக்கு ஆரம்பிக்கவேண்டும்.

வயிற்றுக்குப் போடுவதோடு ஆத்மாவுக்கும் போடுவது

புருஷன் வந்ததும் அவனையும் ஸந்த்யாவந்தனமோ - அவனுக்கான வழிபாடு வேறேயாக இருந்தால் அந்த வழியையோ

பண்ணுவதற்கு அவனை ஊக்குவிக்க வேண்டும். இதுவும் ஒரு முக்யமான பணி. ஸமீபகாலம் வரையில் நம்முடைய ஸ்த்ரீகள் வெகு அழகாகச் செய்து வந்த பணி. அன்ய மோஹத்தில் நம் மதாசரணைகளை அடியோடு விடத் துணிந்துவிட்ட புருஷர்கள் பலரைப் பொண்டாட்டிமார்கள்தான் திரும்பத் திரும்ப நச்சரித்துக் கொஞ்சத்தில் கொஞ்சமாவது மதத்தின் பக்கம் திருப்பி வந்திருக்கிறார்கள். அநேக வீடுகளில் அமாவாஸ்யை தர்ப்பணம், திவஸம்-திங்கள், பிள்ளைக்கு உபநயனம், தெய்வத்துக்கு வேண்டுதல் செய்வது முதலானவை ஸ்த்ரீகளின் 'கம்பல்ஷ'னின் பேரிலேயேதான் புருஷர்கள் செய்திருக்கிறார்கள். வயிற்றுக்குப் போடுவதோடு, ஆத்மாவுக்கும் போடுவதான இந்த உத்தம கைங்கர்யத்தை எந்நாளும் ஸ்த்ரீ ப்ரஜைகள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

புருஷன் அந்த உபாஸனையை முடித்ததும், குடும்பம் முழுதுமாக - புருஷன், பெண்டாட்டி, குழந்தைகள் - எல்லாரும் பக்கத்திலிருக்கிற கோவிலுக்குக் காற்றாடப் போய்விட்டு வரலாம். பிள்ளையார் கோவில்கள்தான் மூலைக்கு மூலை இருக்கின் றனவே! அப்படியொன்றுக்கு குடும்ப ஸஹிதம் தினமும் போய்விட்டு வருவது மனஸுக்கு ஒரு பெரிய டானிக். இந்த டானிக்கை ப்ரிஸ்க்ரைப் செய்யும் டாக்டராகவும் பெண்களே இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை.

கோவிலிலிருந்து திரும்பி வந்ததும் சாப்பாடு. அப்புறம் கொஞ்ச நேரம் - கொஞ்ச நேரந்தான் - மனோரஞ்ஜகமாக டீவியில் ஆடல்-பாடல் பார்ப்பது. அப்புறம், எப்படியும் ராத்ரி 9.30 மணி 10 மணிக்கு முன்னால் நித்திரை போய்விடவேண்டும். அப்போதுதான் மறுநாள் விடிவதற்கு முன் பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் எழுந்திருக்க முடியும். இப்போது ஒரே கோளாறாம். 11 மணி வரை கூட டீவி ப்ரோக்ராம் இருப்பதால் அதைப் பார்த்துவிட்டு, அந்த ஸ்ட்ரைன், ஆபீஸ் போய்விட்டு

வந்த ஸ்ட்ரைன் எல்லாம் சேர்ந்து ஸ்த்ரீகளுக்கு விடியற்காலம், ஸூர்யோதயம் என்றாலே என்ன என்று தெரியாத தூக்கம் என்று ஆகியிருப்பதாகத் தெரிகிறது!* முன்னேயெல்லாம் விடிகிறதற்கு முந்தியே எழுந்து தெளித்து, மெழுகி, கோலம் போடுவார்கள். அது க்ருஹத்தை அழகு பண்ணுவது மட்டுமல்லாமல் க்ருஹிணியையும் நல்ல ஆரோக்கியத்துடனும் நல்ல மனத்தெளிவுடனும் இருக்கப் பண்ணிற்று. இப்போது இந்தப் பழக்கங்களெல்லாம் கொள்ளை போயிருப்பதைப் பார்க்க சொல்லி முடியாத கஷ்டமாக இருக்கிறது. இப்படி முழுக்க முழுக்க பணம், பதவி, அல்பமான லௌகிக ஸௌக்யங்கள் ஆகியவற்றுக்குப் பறப்பதாக ஏற்பட்டு, நிஜமான ஸௌக்யத்தை - ஆத்ம ஸௌக்யம் மட்டுமில்லை; சரீர ஸௌக்யத்தையுமேகூட - காற்றிலே பறக்க விட்டிருப்பதாக ஏற்பட்டுவிட்டதே என்று வேதனையாயிருக்கிறது. தலைக்கு மேல் வெள்ளம் போய்விடவில்லை என்று நம்பிக்கொண்டுதான் சாஸ்திரீய வழியிலான நல்லதைச் சொல்கிறது. சொன்னால் ஆயிரம், பதினாயிரம், லக்ஷத்தில் ஒருத்தராவது கேட்டு அந்தப்படிப் பண்ணினால்கூட அது ஒரு லாபந்தான் என்பதால்தான் சொல்கிறது; புலம்புகிறது.

இரு விதிவிலக்குகள் : போதனை, மருத்துவம்

பெண்கள் வேலைக்குப் போவதில் எனக்கு அபிப்ராயமில்லை என்று தெரிந்த சில பேர் என்னிடம் வந்து ஒன்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'எனக்கு அபிப்ராயமில்லை' என்பதை, ஸொந்த ஹோதாவில் நானாகச் சிலதை ஆதரிக்கிறேன், ஆதரிக்கவில்லை என்று அர்த்தம்

---

* பல சானல்கள், கேபிள் டிவி முதலியன வந்து ஒரு நாளின் 24 மணி நேரமும் நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கியதற்கு முற்பட்ட காலத்தில் கூறியது.

பண்ணிக் கொண்டுவிடக்கூடாது. அப்படியெல்லாம் நான் ஸொந்த ஹோதா கொண்டாடிக் கொள்ள இடமே கிடையாது. சாஸ்த்ரங்களின் அபிப்ராயம் என்னவோ, சாஸ்த்ரங்களின் வழியை நன்றாக அறிந்த சிஷ்டர்களின் அபிப்ராயம் என்னவோ, அதைச் சொல்ல மட்டுந்தான் நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஜட்ஜ், ஸொந்த அபிப்ராயம் எதுவுமில்லாமல் சட்டப் புஸ்தகத்தையும், ஏற்கனவே வந்திருக்கும் தீர்ப்புகளையும் பார்த்துப் பார்த்தே முடிவு செய்கிற மாதிரிதான், தர்மபீடங்களில் இருப்பவர்களும் சாஸ்த்ரம் என்ற சட்டப் புஸ்தகத்தையும், அதன் வழியே போகும் சிஷ்டர்களின் ஸம்ப்ரதாயத்தையும் பார்த்து அதை அநுஸரித்தே சொல்லவேண்டும். எனக்குத் தெரிந்த அளவுக்கு அந்த மாதிரிப் பார்த்துத்தான் ஸ்த்ரீகள் உத்யோகத் துக்குப் போகவேண்டாம் என்பது. இதைப் பற்றிச் சில பேர் என்னிடம் ஒரு விஷயம் சொல்வதுண்டு.

அதாவது, "பெண் குழந்தைகளுக்குப் பெண் டீச்சர்களே டீச் பண்ணுவதுதானே நல்லது? அதுதானே பலவிதமான தப்புக்கள் நடக்காமலும் காப்பாற்றக்கூடியது? அதே மாதிரி வைத்யமும் பெண்களுக்குப் பெண்களே செய்வதுதானே உத்தமம்? அதனால் இந்த இரண்டு துறைகளில் மட்டும் அவர்கள் வேலைக்குப் போவதை நீங்கள் அநுமதிக்கத்தான் வேண்டும்" என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

அவர்கள் சொல்வதில் நியாயமில்லாமலில்லை என்றே படுகிறது.

ஆனாலும் டீச்சிங், வைத்தியம் ஆகிய இந்த இரண்டுக்கும் பெண்கள் போவது தங்களுடைய உத்யோக ஆசையைப் பூர்த்தி பண்ணிக் கொள்வதற்காகவோ, அதனால் கிடைக்கிற வருமானத்தைக் கருதியதாகவோ இருக்கக்கூடாது. இந்த இரண்டு உத்தேசங்களுக்காக அவர்கள் உத்யோகத்துக்குப் போவதை அநுமதிக்கலாமானால், அப்போது இதே உத்தேசங்களுக்காக

அவர்கள் மற்ற ஆஃபீஸ் உத்யோகம், கம்பெனி உத்யோகம் முதலியவற்றுக்குப் போவதையும் அநுமதித்தேயாக வேண்டி வரும். அது கூடாது என்பதுதானே நான் சொல்லி வருவது?

ஆகவே, இந்த இரண்டு வேலைகளுக்கும் பெண்கள் போவதற்கான உத்தேசமே - motivation என்பதே - வேறே விதமாக இருக்கவேண்டும். அதாவது, தங்கள் மாதிரியுள்ள மற்றப் பெண்களுக்கு அறிவூட்டும் பணி, அவர்களுடைய பிணி தீர்க்கும் பணி என்பதாக இந்த இரண்டு தொழில்களையும் ஸேவை, தொண்டு என்ற ரீதியிலேயே பார்த்து, அதற்காகவே வேலைக்குப் போவதாக அந்தப் பெண்கள் இருக்கவேண்டும். உத்யோகம் என்ற எண்ணம் போய், தொண்டு என்ற எண்ணத்திலேயே இந்தத் தொழில்களை ஏற்பவர்களாக அந்தப் பெண்கள் இருக்கவேண்டும். தொண்டு செய்ய வேண்டும் என்ற தாபமே அவர்களுடைய motivation - ஆக இருக்க வேண்டும்.

இதை வெளி மனிதர்கள் நிர்ணயம் செய்யவோ கணிக்கவோ அமலுக்குக் கொண்டுவரவோ முடியாது. இந்தத் தொழில்களுக்கு வர ஆசைப்படுகிற பெண்கள் தாங்களேதான் தங்களுக்குள் ஈச்வர ஸாக்ஷியாக 'உத்யோகம் செய்கிற பெருமைக்காகவோ, ஸம்பாத்தியத்துக்காகவோ இந்தத் தொழிலை எடுத்துக் கொள்கிறோமா, இல்லாவிட்டால், நம் மாதிரிப் பெண்களுக்கு உத்தம கைங்கர்யம் செய்வதற்கு இந்தத் தொழில் உபாயமாக இருக்கிறது என்று எடுத்துக் கொள்கிறோமா? முன்னால் சொன்னதாக இருந்தால் இதில் ஈடுபடுவது நியாயமில்லை. பின்னால் சொன்னதாக இருந்தாலே ஈடுபடலாம்' என்று முடிவு செய்ய வேண்டும். செய்வார்களா என்பது வேறே விஷயம்.

பெண்களுக்குப் பெண்களே செய்வதுதான் ச்லாக்யம் என்று இருக்கிற இந்த இரண்டு தொழில்களை அவர்கள் எடுத்துக் கொள்வதற்கு இரண்டாம் பக்ஷமாக இன்னொரு motivation - ம் சொல்லலாம் என்று தோன்றுகிறது. இல்லாமைதான் அது. ஸ்த்ரீயும்

ஸம்பாதித்தால்தான் முடியும் என்கிற அளவுக்கு ஏதாவது காரணங்களால் தரித்ர நிலையில் தவிக்கிற குடும்பத்துப் பெண்கள் மற்ற வேலைகளுக்குப் போகாமல் இவ்விரண்டில் ஒன்றை ஏற்கலாம்.

இந்தத் தொழில்களைப் பொருளாதார நிமித்தமாக ஏற்கவேண்டிய அவசியமில்லாத மற்றவர்கள் ஸம்பாத்தியத்தில் கணிசமான பங்கை தான தர்மங்களில் செலவழிக்க வேண்டும்.

அஸாதாரணமான திறமை கொண்ட பெண்கள்

எந்த விதி இருந்தாலும் அதற்கு விலக்கும் இல்லாமல் போகாது. Every rule has its exception என்றே சொல்கிறார்கள். அப்படி, சராசரி ஜனங்களை விட மிக அதிகமான திறமை வாய்ந்தவர்களாக ஸ்த்ரீ குலத்தில் ஒவ்வொரு காலத்திலும் சில பேர் விதிவிலக்கு என்கிற மாதிரித் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அகத்தோடேயே கட்டுப்பட்டிருப்பது என்றில்லாமல், தாங்கள் எந்தத் துறையில் திறமைசாலிகளாக இருந்தார்களோ, அதை விருத்தி செய்து கொண்டு அந்தத் துறையில் வெளியுலகத்திலேயே பெயரெடுத்து சோபித்திருக்கிறார்கள். இந்த மாதிரி அஸாதாரணமான திறமையுள்ள பெண்கள் அதை விருத்தி செய்து கொள்ள ஸமூஹமும் இடம் கொடுத்தே வந்திருக்கிறது. விருத்தி செய்து கொண்ட பின் அந்தத் துறையில் அவர்கள் வெளியுலகத்தில் பணியாற்றுவதையும் மதித்து வரவேற்றுப் பயனடைந்திருக்கிறது. அவர்களை வீட்டோடுதான் இருக்க வேண்டும் என்று அடக்கிப் போடவில்லை. இப்படித்தான் பெண்கள் க்ருஹிணிகளாக இருப்பதையே ஆதியிலிருந்து வழிமுறையாகக் கொண்ட இந்த தேசத்திலேயே அதன் ஒவ்வொரு ப்ராந்தியத்திலும், ஒவ்வொரு காலத்திலும் ஸகலமான துறைகளிலும் வல்லவர்களாக ஸ்த்ரீகளும் தோன்றியிருக்கிறார்கள். ஞானம், பக்தி, இலக்கியம், ஆடல்-பாடல் முதலான கலைகள், அரசாட்சி, யுத்தம் செய்வது

உள்பட ஒரு துறை விட்டுப் போகாமல் அநேகம் ஸ்த்ரீகள் ப்ரகாசித்திருக்கிறார்கள். சரித்திரத்திலேயே அவர்களுடைய பெயர்கள் ஸ்திரமாகி விட்டன. அதே மாதிரி இன்றைக்கும் சராசரிக்கு ரொம்பவும் மேலே போன விதிவிலக்கான ஸ்த்ரீ ப்ரஜைகள் தோன்றினால் அவர்கள் வெளியுலகத்தில் சோபிப்பதற்குத் தடையில்லை. ஆனால் அதற்காக விதிக்கு உட்பட வேண்டிய பெருவாரி ஸ்த்ரீகளும் அப்படிப் போகவேண்டும் என்றால் ஸமூஹத்திலும் குடும்ப வாழ்க்கையிலும் சீர் கெட்டுப் போகத்தான் செய்யும்.

ஆத்ம ரக்ஷைக்காக ஸ்த்ரீகள் ஒன்றுசேர வேண்டும்

க்ருஹிணியாக அகத்தோடு இருந்து கொண்டிருக்கிற பெண் மத்யானப் பொழுது முழுதையும் எப்படிக் கழிப்பது? கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக் கொள்வது போக பாக்கி டயம் இருக்குமே!

அதில் அகத்துக்கான பக்ஷணம்-பாடி, பொடி வகைகள், ஊறுகாய்கள் பண்ணலாம். அப்படிப் பண்ணுவதில் தேஹாரோக்யத்துக்கு உதவுகிற உழைப்பு ஒரு பங்கு என்றால் அதைப் போலப் பத்து பங்கு மனஸுக்கு ஆரோக்யம் தருவதான ஆத்ம ஸந்துஷ்டி - 'நம் கை பிடித்தவனுக்கும் வயிற்றில் பிறந்ததுகளுக்கும் நம் கையாலேயே பண்ணிப் போடுகிறோம்' என்ற உள்ள நிறைவு.

உள்ளத்துக்கு நேராகவே நல்லது செய்கிற இன்னொன்றும் பகல் பொழுதில் ஸ்த்ரீகள் செய்யலாம்; செய்யவேண்டும் என்றே சொல்லணும். நம் தேசத்தில் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் இருக்கிற மதப் புஸ்தகங்களுக்கும், நேராக மத விஷயம் என்று சொல்ல முடியாத காவ்யங்களுக்கும் கணக்கு வழக்கேயில்லை. இன்றைக்கு உத்யோகத்தில் ஆலாப் பறந்து கொண்டிருக்கிற புருஷ ஸமூஹத்துக்கு அவற்றையெல்லாம் கவனிக்கப் பொழுதே யில்லை. அவர்கள் செய்கிறதையே தாங்களும் செய்வது என்று

பெண்கள் காப்பி அடிப்பதைவிட, அவர்களால் செய்ய முடியாத இந்தக் கார்யத்தைச் செய்ய வேண்டும்.

தமிழிலோ, ஸம்ஸ்க்ருதத்திலோ, இரண்டிலும் கொஞ்சம் கொஞ்சமோ, மத விஷயமாகப் புராணம், ஸ்தோத்ரம், மஹான்கள் சரித்ரம், உபதேசம் என்று ருசி ருசியாக இருக்கப்பட்டவைகளைப் படிக்க வேண்டும். பாராயணம் பண்ணக் கூடியதை அப்படிப் பண்ண வேண்டும். படிக்கப் படிக்க ருசி கூடுமே தவிர திகட்டாது தான். தான் மாத்திரம் அப்படிப் பண்ணுவதைவிட நாலு ஸகாக்களை, ஸகிகளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு சேர்ந்து செய்வதே கூட்டாஞ்சோறு சாப்பிடுகிற மாதிரி கூடுதலான ஸந்தோஷம் கொடுக்கும். ஸ்த்ரீகள் சேர்ந்தால் வீண் வம்பும் தும்பும்தான் என்கிற அபக்யாதியை மாற்றி இப்படி ஆத்ம ரக்ஷைக்காக, தர்ம ரக்ஷைக்காக ஒன்று சேர வேண்டும்.

ஆத்ம விஷயமாகவும் தர்ம விஷயமாகவும் ஒரு க்ருஹிணி, 'இல்லத்தரசி' என்றே உயர்த்திச் சொல்லப்படுபவள் விழித்துக்கொண்டு விட்டால் போதும். முற்றத்தில் ஏற்றி வைத்த விளக்கு கூடம், தாவாரம் எல்லாவற்றையும் ப்ரகாசப்படுத்துகிற மாதிரி அவளுடைய 'ரேடியேஷ'னே க்ருஹத்திலுள்ள எல்லோருக்கும் ஒரு பரிசுத்தியைத் தந்துவிடும்.

மதப் புஸ்தகம் படிப்பது மட்டுமில்லாமல், அதில் உள்ளபடி விரதானுஷ்டானங்கள் நியமமாகப் பண்ணுவதும் க்ருஹிணிகளாலேயே - housewife என்றே இருக்கிறவர்களால்தான் - முடியும். வேலைக்குப் போய்க் கொண்டே விரதானுஷ்டானம் பண்ணுவது என்பதில் அநேக 'காம்ப்ரமைஸ்'கள் பண்ணிக் கொள்ள நேரிடும். 'அன்காம்ப்ரமைஸிங்'காகப் பண்ணுவது என்று ஆரம்பித்தாலும் வேலையின் அலைச்சல்-திரிச்சல், உபவாஸம் போன்ற நியமங்களின் கண்டிப்பு இரண்டுமாகச் சேர்ந்து ரொம்பவும் 'ஸ்ட்ரைன்' ஆகிவிடும். அப்படியில்லாமல்,

ஆயாஸமில்லாமல் வ்ரதங்கள் அநுஷ்டித்து ச்ரேயஸை அடைய க்ருஹத்தோடு இருப்பதுதான் உதவும்.

வ்ரதாநுஷ்டானத்துக்கு உதவுகிற வீடேதான் அநுஷ்டானமே கூடாத நாட்களுக்கும் உரிய இடமாக இருப்பது. தீட்டு நாட்களைத்தான் சொல்கிறேன். இப்போது அந்த மூன்று நாட்களும் ஸ்த்ரீகள் ஆஃபீஸுக்கும் போவதில் ஊர் பூராவும் தீட்டுப் பரவுகிறது. 'அட்மாஸ்ஃபைரிக் பொல்யூஷன்' என்று இன்றைக்கு அநேக விஷயங்களை எடுத்துக்காட்டி எதிர் நடவடிக்கை எடுக்கும்படி எச்சரிக்கிறார்கள். அந்தப் 'பொல்யூஷன்' எல்லாவற்றையும்விடப் பொல்லாதது ஸ்த்ரீகளின் தீட்டே. அது செய்கிற கெடுதல் வெளியிலே தெரியாததால் அதைக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். கவனிக்கிறவர்களையும் ஆசாரப் பைத்தியங்கள் என்று ஒதுக்குகிறார்கள். வாஸ்தவத்திலோ இந்தத் தீட்டு அமங்கள சக்திகளையெல்லாம் இழுத்துக்கொண்டு வரும். அதை இப்படி எல்லா இடத்திலும் கலக்கவிட்டால், ஜனங்களுக்கு எத்தனைதான் வரும்படி வந்தாலும், கவர்ன்மென்ட் எத்தனைதான் five year plan போட்டாலும், தேசத்தில் துர்பிக்ஷமும் அசாந்தியும் வியாதியுமாகத்தான் இருக்கும்.

அந்த விஷயம் இருக்கட்டும். அகத்தோடு இருந்து கொண்டு அங்கங்கே பெண்கள் சின்னச் சின்ன க்ரூப்களாக மதப் புஸ்தகங்கள் படிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளச் சொல்லவில்லை. Classical என்று உயர்த்தியாகச் சொல்லக்கூடிய காவிய-நாடகக் கதைப் புஸ்தகங்களிலும் எத்தனையோ அழகுகள் உண்டு. குற்றமில்லாத ஸந்தோஷத்தை வாழ்க்கைக்கு ஊட்டி, அறிவையும் ஹ்ருதயத்தையும் வளர்க்கிற தன்மை அவற்றுக்கு உண்டு. அவை உபதேசம் என்று வறட்சியாக இல்லாமல் ரஸவத்தாக இருந்துகொண்டு நம்மை மேம்படுத்தக் கூடியவை. உதாரணத்திற்கு இரண்டு சொன்னால், ஸம்ஸ்க்ருதத்தில் சாகுந்தலம் - காளிதாஸர் எழுதினது; தமிழில் இளங்கோ அடிகள்

செய்த சிலப்பதிகாரம். இந்த மாதிரிப் புஸ்தகங்களைப் பெண்கள் பகல் பொழுதில் படிக்கலாம். இவை எல்லாம் நமக்கும் அர்த்தம் புரிகிறமாதிரி விளக்கவுரையுடன் இப்போது கிடைக்கின்றன. இல்லாவிட்டால், பல பேர் சேர்ந்து இப்படிப் பண்ணுவதால் இம்மாதிரிப் புஸ்தகங்கள் நன்றாகப் படித்தறிந்தவர்களை வரவழைத்து அவர்களை 'க்ளாஸ்' மாதிரி நடத்தச் சொல்லிக் கேட்கலாம். இப்போது 'ஸௌந்த்ர்ய லஹரி', 'அபிராமி அந்தாதி' க்ளாஸ் எடுக்கிற ஸ்த்ரீகள் இருக்கிறார்கள் அல்லவா? அப்படி, நாம் தேடினால் மற்றவை கற்பிக்கவும் கிடைப்பார்கள். நமக்கு மட்டும் மனஸிருந்து தாபத்தோடு தேடினால் போதும் - புஸ்தகம் கிடைக்கும்; அதைச் சொல்லிக் கொடுக்க ஆளும் கிடைக்கும்.

வீட்டோடு இருக்கிற பெண்களின் பொழுதும் வீணாகப் போகப்படாது; ரத்னச் சுரங்கங்களாக நமக்கு இருக்கிற ஸமய இலக்கியம், இலக்கியம் என்றே இருப்பது ஆகியவையும் வீணாகப் போகப்படாது - அதுதான் என் மனஸில் இருப்பது.

வேத அத்யயனம் வேண்டாம்

ஸ்த்ரீகள் படிக்க வேண்டியதைச் சொன்னமாதிரியே படிக்க வேண்டாததையும் சொல்லவேண்டும். இப்படி நான் சொன்னால் கன்னா பின்னா புஸ்தகங்கள் படிக்கக்கூடாது என்பதைத்தான் நான் சொல்கிறேன் என்று எதிர்பார்ப்பீர்கள். அதுவும் வாஸ்தவந்தான். ஆனால் கன்னா பின்னாவே இல்லாத இன்னொன்று, எல்லாக் கன்னா பின்னாக்களையும் போக்குகின்ற இன்னொன்றும் ஸ்த்ரீகளுக்கு வேண்டாம் என்று சாஸ்த்ரம் சொல்லியிருப்பதால் அதையும் நான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

வேதத்தைத்தான் சொல்கிறேன்.

வேதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லும் பல புஸ்தகங்கள் இருக்கின்றன. அவற்றை ஸ்த்ரீகள் படித்துத் தெரிந்து கொள்ளட்டும். நேரே வேதத்தைப் படிப்பதும் அதிலுள்ள

ஸூக்தங்களைப் பாடம் பண்ணுவதும், புருஷர்கள் மாதிரியே அத்யயனம் பண்ணுவதும் வேண்டாம்.

இப்படிச் சொன்னால் ஒரே கோபமாகச் சில பேர் ஆக்ஷேபிக்கிறார்கள். 'வேத, உபநிஷத, இதிஹாஸ புராணாதிகளைப் பார்த்தால் ஸ்த்ரீகளும் வேதத்தில் அதிகாரம் பெற்றிருந்ததற்குச் சான்றுகள் கிடைக்கின்றனவே! ஸ்த்ரீகளில் ப்ரஹ்மவாதினிகள் என்றே சொல்லப்பட்டவர்களும், மந்த்ரங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்த ஸ்த்ரீ ரிஷிகளும் கூட இருந்திருக்கிறார்களே' என்று சான்று காட்டுகிறார்கள். பூர்வ யுகங்களில் அப்படி விதிவிலக்கு மாதிரியோ, என்னவோ, கொஞ்சம் இருந்திருப்பதை ஒத்துக் கொள்ளவேண்டியதே. ஆனால் அந்த யுகங்களில் நடந்ததை இந்தக் கலியுகத்துக்குப் பொருத்துவதுதான் ஸரியில்லை. கலியுக ஜீவர்கள் அல்ப சக்தர்கள். அவர்களில் எது எவருக்கு ஆகும், ஆகாது என்பதற்கு தர்ம சாஸ்த்ரங்களைப் பார்த்து அதன்படிதான் பண்ண வேண்டும். தனிப்பட்டவர்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு அபிப்ராயம் இருக்கும். ஒருவருக்கே இன்றைக்கிருக்கிற அபிப்ராயம் நாளைக்கு இல்லாமல் போகலாம். அதனால் இந்த அபிப்ராயங்களை வைத்துப் பொது ஸமூஹத்துக்கான எந்த முடிவையும் எடுப்பதற்கில்லை. தங்களுடைய தனி மநுஷ்யத் தன்மையை அப்படியே போக்கிக்கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையும் லோக க்ஷேமத்தையுமே நினைத்துக் கொண்டிருந்த ரிஷிகளை தர்மத்துக்கு அதிகார புருஷர்களாக ஈச்வரன் நியமித்து அவர்கள் மூலம் லோகத்துக்கான தர்ம-அதர்ம விதிமுறைகளை சாஸ்த்ரமாகக் கொடுத்திருக்கிறான். அந்த சாஸ்த்ரம் சொல்கிறதுதான் யாரும் ஆக்ஷேபிப்பதற்கில்லாத முடிவு. இங்கே நம்முடைய பகுத்தறிவைக் கொண்டுவந்து கேள்விகேட்டால் ப்ரயோஜனப்படாது. ஈச்வர ஸ்ருஷ்டி தர்மத்தையும், மர்மத்தையுமே அந்த ஸ்ருஷ்டிக்குள் அகப்பட்ட




ஈச்வர ஸ்ருஷ்டி தர்மத்தையும், மர்மத்தையுமே
அந்த ஸ்ருஷ்டிக்குள் அகப்பட்ட இந்தச் சின்னூண்டுப்
பகுத்தறிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால்
எப்படி முடியும்?

இந்தச் சின்னூண்டுப் பகுத்தறிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் எப்படி முடியும்?

சீர்திருத்தவாதிகள் மேல்மட்டத்தோடு பார்த்துத் தங்களுக்கு நல்லதாகத் தோன்றுவதைச் சொல்கிறார்கள். அந்த மேல்மட்டம் நம்முடைய பகுத்தறிவின் எல்லைக்குள் வருவதால் நாமும் அந்தச் சீர்த்திருத்தக்காரர்களை 'ஆஹா' என்று பாராட்டிப் பேசுகிறோம். தர்ம சாஸ்த்ரத்தைத் தந்த ரிஷிகளோ உள்மட்டத்திற்கும் போய், ஈச்வர ப்ரேரணையில் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்த விதிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில் ப்ரவேசிக்க நம்முடைய பகுத்தறிவால் முடியாது. நம்பிக்கையின் மேலேதான் அவர்கள் சொல்வதை எடுத்துக்கொண்டாக வேண்டும். நம்முடைய அப்படிப்பட்ட பூர்ண நம்பிக்கைக்குப் பாத்ரமாகும் யோக்யதாம்சம் பெற்றவர்களே அவர்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நமக்குத் தெரிந்த சீர்திருத்தவாதிகளைவிட அதீந்திரிய சக்தி பெற்ற ரிஷிகள்; லோக க்ஷேமத்தைப் பற்றிச் சீர்திருத்தவாதிக்கு இருப்பதைவிட அதிகக் கருத்துள்ளவர்கள். சீர்திருத்தவாதிகள் நினைக்கிற லோக க்ஷேமம் இந்த லோகத்தோடு நிற்பதுதான். ரிஷிகள் நினைத்த லோக க்ஷேமம் பரலோகத்தை லக்ஷ்யமாகக் கொண்டது. அதற்காக இந்த இஹலோகத்தை அவர்கள் தள்ளிவிடவில்லை. இதையே அதற்கு உபாயமாக ஆக்கிக் கொள்வதற்குத்தான் தர்மம், தர்மம் என்கிற ஒன்றை அவர்கள் வகுத்துக் கொடுத்து, இந்த லோகத்தில் யார் எப்படிப் பண்ணினால் அவர்களுக்கும் நல்லது, மொத்த ஸமுதாயத்துக்கும் நல்லது என்று 'ரூல்'கள் போட்டிருக்கிறார்கள்.

அப்படியொரு ரூல்தான் கலிகாலத்தில் ஸ்த்ரீகளுக்கு வேதத்தில் அதிகாரமில்லை என்பது.

வேதம் படிப்பது எதனால்? அது நல்லதைக் கொடுப்பது என்பதால்தான். ஆனால் அந்த வேதமோ எல்லா ரூல்களையும் நமக்குப் புரிகிற மாதிரி codify செய்து கொடுக்கவில்லை! அப்படிப்



அடங்காமை என்பதுதான் இன்று நம்மைப்
பீடித்திருக்கிற பெரிய தீமை. அது இருக்கிற வரையில்
இன்றைக்கு லோகத்தில் உள்ள மாதிரி அசாந்திதான்
ஸர்வ வ்யாபகமாக இருக்கும்.

பண்ணுவது எது என்றால் தர்ம சாஸ்த்ரங்கள்தான். ச்ருதி என்ற வேதத்துக்கு விளக்காக இருப்பது ஸ்ம்ருதியாகிற தர்ம சாஸ்த்ரம். வேதம் படிப்பது நல்லதைக் கொடுக்கும் என்று நமக்குத் தெரிவதே அந்த தர்ம சாஸ்த்ரம் அப்படிச் சொல்வதால்தான். ஆனால் அதே சாஸ்த்ரம் கலிகாலத்தில் அல்ப சக்தர்களான ஸ்த்ரீகள் வேதம் படித்தால் அது நல்லதைக் கொடுப்பதற்குப் பதில் கெட்டதைத்தான் உண்டுபண்ணும் என்று சொல்கிறதென்றால் அதைக் கேட்க வேண்டியது தானே? அது சொல்கிறபடியே Do's ஐயும் Don't's -ஐயும் முறையே செய்வதும், செய்யாமலிருப்பதும்தான் நம் கடமை. சாஸ்த்ர ரூலையே மீறி சாஸ்த்ரம் படிப்பேன் என்றால் எப்படி? 'பகுத்தறிவுக்கு எட்டும் காரணம் கேட்கப்படாது, நம்பிக்கையின் மேலேயே போகவேண்டும்' என்று சொன்னேன். ஆனால் பகுத்தறிவுக்கு எட்டும் ஒரு காரணமும் இதற்கு இருக்கிறது. புருஷர்கள் செய்கிற மற்ற அநேக கார்யங்கள், துணிகரமான ஸாஹஸங்கள் ஸ்த்ரீகளும் செய்து ஜயித்தாலும் ஜயிக்கலாம். ஆனால் புருஷர்கள் வேத கோஷம் என்று கம்பீரமாக மந்த்ரங்களுக்குரிய ஸ்வரங்களின் ஏற்ற இறக்கங்களுடன் நாபியிலிருந்து சப்தம் எழுப்பி மணிக்கணக்கில் சொல்வதுபோல் சொல்வது ஸ்த்ரீகளாகப் பிறந்தவர்களுக்கு முடியவே முடியாத கார்யம். வேத மந்த்ரங்களை அப்படி கோஷித்தால்தான் பூர்ண பலன். புருஷர்கள் அப்படி கோஷம் பண்ணிவிட்டு கை, கையாக நெய்யைச் சாப்பிட்டு சமனம் பண்ணிக் கொள்வது போல் பண்ணுவதற்கு ஸ்த்ரீகளின் ஜீர்ண சக்தி இடம் கொடுக்காது. பிடிவாதத்தின் மேல் ஸ்த்ரீகளும் பெருங்குரலெடுத்து வேத கோஷம் பண்ணினால், ஸ்த்ரீகளுக்கு என்றே இருக்கிற கர்ப்பப்பை முதலானவற்றுக்கும் பெரிய ஹானி உண்டாகும். இப்படி அவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்வதோடு லோகத்திலும் ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் பல கோளாறுகள் உண்டாகும். அந்த ஒரு சாரார் சாஸ்த்ரத்துக்கு அடங்க மறுப்பதே அத்தனை சாராரும் சாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம், ராஜாங்கச் சட்டம்,

ஸ்தாபனங்களின் சட்டம், பெரியோர்களின் கண்டிப்பு முதலிய ஸகலத்துக்கும் அடங்க மறுப்பதற்கு தூபம் போடும்.

அடங்காமை என்பதுதான் இன்று நம்மைப் பீடித்திருக்கிற பெரிய தீமை. அது இருக்கிற வரையில் இன்றைக்கு லோகத்தில் உள்ள மாதிரி அசாந்திதான் ஸர்வ வ்யாபகமாக இருக்கும். அந்த அடங்காமைக்கு மாற்று மருந்தாகத்தான் அடக்கத்தைத் தலையான அங்கமாகக் கொண்டுள்ள சாஸ்த்ரீயமான பெண்மையை இன்று எப்படியேனும் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் ரக்ஷித்துக் கொடுக்க வேண்டும் என்பது. நேர்மாறாக, இந்த அடங்காமையை வேதத்தின் விஷயத்திலேயே கொண்டு வருவது மஹா பாபமாகும்.

வேதமோதும் உரிமை கோருவதேன்?

வேதத்தில் நிஜமான பக்தி இருந்துதான் அதைப் படிப்பேன் என்று ஸ்த்ரீகள் புறப்படுகிறார்களா என்றால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. வேதத்தில் நிஜமான பக்தி இருந்தால் அதன் ஸ்பிரிட்டை ரக்ஷித்துக் கொடுக்கிற தர்ம சாஸ்த்ரத்திலும் பக்தி-நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்யும். ஆனபடியால் இப்போது சில பேர் இப்படி ஒரு போர்க்கொடி தூக்கியிருப் பதற்குக் காரணம் (ஆழ்ந்த, அழுத்தமான குரலில்) non-conformism தான் (மரபுக்குக் கட்டுப்படாமைதான்)! 'இதுவரை சாஸ்த்ர ரீதியிலும் சட்ட ரீதியிலும் எதெதற்கு ஜனங்கள் கட்டுப்பட்டு வந்தார்களோ, நேற்று தாத்தா அப்பா வரை எப்படி ஒரு ஒழுங்குமுறையில் போனார்களோ, அந்தக் கட்டு எதற்கும் உட்படாமல் அறுத்துப் போட்டுவிட்டு, இஷ்டப்படி, மனம் போனபடிப் பண்ணுவேன்' என்பதுதான் காரணம். லோகம் பூராவிலும் பரவியுள்ள 'நான்-கன்ஃபார்மிஸ'த்துக்கு இது இன்னொரு உதாரணம்தான்.

ஒருபக்கம், சாஸ்த்ரம் 'அத்யயனம் பண்ணு' என்று சொல்கிற புருஷன், 'எதற்குப் பண்ண வேண்டும்?' என்று அதை விடுகிறான்;

இன்னொரு பக்கம், அது 'அத்யயனம் பண்ணாதே' என்று சொல்கிற ஸ்த்ரீ, 'ஏன் பண்ணாமலிருக்க வேண்டும்?' என்று கேட்டுக்கொண்டு, தான் பண்ண வேண்டாததை, பண்ணக் கூடாததை எடுத்துக் கொள்ள வருகிறாள். இதே சாஸ்த்ரம் ஸ்த்ரீகளையும் அத்யயனம் பண்ணச் சொல்லியிருந்தால் அப்போது, "வேதாத்யயனம் பண்ணினால்தான் ஆச்சா? பக்தி பண்ணினால் போதாதா? நாமஸ்மரணமே போதாதா?" என்று புருஷர்கள் இன்றைக்குக் கேட்கிற கேள்விகளை அவர்களும் கேட்பார்கள்!

விஷயம், ஸ்த்ரீகள் வேதத்தில் நேராக ப்ரவேசிக்க வேண்டாம்; அவற்றின் பரம தாத்பர்யத்தை ஓரளவுக்குத் தெரிந்து கொண்டால் போதும்.

'அத்யயனம் என்று பெரிசாகப் பண்ணாமல் ஏதோ ஒரு ஸ்ரீ ஸூக்தம், துர்கா ஸூக்தம் சொல்கிறேனே!' என்றால், இன்றைக்கு இப்படிக் கொஞ்சம் இடம் கொடுப்பதே நாளைக்குப் பெரிய துராக்ரஹத்தில் கொண்டுவிடும். அணையிலே ஒரு சின்ன உடைப்பு ஏற்பட்டால் அதுவே மேலே மேலே பெரிசாகிக் கொண்டு போய் வெள்ளக்காடாகி விடுகிற மாதிரி முடியும்.

வேதம் பௌருஷமான காம்பீர்யம் கொண்டது. அதைப் புருஷர்களுக்கு விட்டு விடுவோம். இன்றைக்கு அதர்ம வியாதி பிடித்துக் கிடக்கிற லோகத்துக்கு அருமருந்தாக வேண்டியிருப்பது ஸ்த்ரீகளின் மாதுர்யம்தான்; மென்மை, மென்மை என்று சொன்னதுதான். மனஸை உருகவைத்து அப்படி மதுரமாகவும் மென்மையாகவும் ஆக்குகிற ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரங்கள், தமிழ் துதிப் பாடல்கள் ஆகியவற்றையே ஸ்த்ரீகள் சொல்லி லோகத்தில் மாதுர்யத்தை வளர்க்கட்டும்; தங்கள் க்ருஹங்களையும் மாதுர்யமாக ஆக்கட்டும்.

ஸங்கீதமும் ஸ்த்ரீகளும்

மாதுர்யம் என்றதும் ஸங்கீதம் நினைவுக்கு வருகிறது. ஸங்கீதம் உத்தமமான கலை. பகவத் ஸந்நிதியிலேயே 'ஈஸி'யாகக் கொண்டு நிறுத்துகிற கலை. நன்றாக இசையமைத்துப் பாடும்படி மஹான்கள் நிறைய நிறைய நம் தேசத்தில் வாரி வழங்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். ஏராளமான ஸாஹித்யகர்த்தாக்களும் சிக்ஷை சொல்லிக் கொள்ள வசதியாக முறைப்படி ராகம், தாளம், அமைத்துக் கீர்த்தனங்கள் பாடியிருக்கிறார்கள். ஸ்த்ரீகளுக்குத்தான் இயற்கையாகவே இனிமையான குரல் இருக்கும்படியாக அம்பாள் ப்ரஸாதித்திருக்கிறாள். அதனால் அவர்கள் ஒழிந்த பொழுதில் ஸங்கீதம் அப்யஸிக்கலாம். ஸபா, ஸம்மானம், புகழ் - ஆகியவற்றுக்காக இல்லை. அதெல்லாம் போட்டியிலும், அஹம்பாவத்திலும், ஸத்ரீகளுக்கு வேண்டாத வெளி வியாபகத்திலும் இழுத்து விடலாம். ஆகையால் அதற்காக இல்லாமல் ஆத்ம ஸந்துஷ்டிக்காகவும் பகவத் ப்ரீதிக்காகவும் பெண்களை ஸங்கீத அப்யாஸம் பண்ணச் சொல்கிறேன். நம் அகத்திலே ஒரு சுபகார்யம், நவராத்ரி, மற்ற பண்டிகை என்றால் கூடியிருக்கிறவர்களுக்கு ஸந்தோஷம், பகவான் நினைவு இரண்டையும் அளிப்பதாகப் பெண்கள் பாடலாம். ஒரு கல்யாணம், கார்த்திகை என்றால், அதிலே வேடிக்கையும் இருக்க வேண்டுமாகையால், கேலிப் பாட்டுகள் கூடப் பாடலாம். வாழ்க்கையில் இதெல்லாமும் அதனதன் அளவுக்கு உட்பட்டு வேண்டியதுதான். இல்லாவிட்டால் உப்புச் சப்பே இருக்காது; ஒரே உம்மணாமூஞ்சியாகிவிடும்.

வீணா வாத்யம் அம்பாளுக்கு ரொம்பவும் ப்ரீதி. அவளுடைய ஸ்வரூபமாகவே மதிக்கப்படும் ஸ்த்ரீ பிரஜைகள் வீணை கற்றுக் கொள்ளலாம். ப்ரதி சுக்ர வாரமும் ஸாயரக்ஷையில் அம்பாளுக்கு வீணாகானம் ஸமர்ப்பணம் செய்யலாம். கோவிலுக்குப் போய் அப்படிப் பண்ணலாம். ஆனால் அங்கே இதேமாதிரி இன்னும் பல

பேரும் வந்தால் போட்டி ஏற்படும். அகத்திலேயே, அம்பாள் பிம்பமோ யந்த்ரமோ படமோ இருக்குமே, அதற்கெதிரில் ஒரு கால்மணி-அரைமணி வீணை வாசிக்கலாம். வாயால் பாடிக்கொண்டே வாசிக்கலாம். ஓரளவுக்கு மனஸ் குவிந்து கானம் பண்ணினாலும் போதும். அதில் கிடைக்கிற விச்ராந்தி தெரியும்.

அகத்தோடு இருந்துகொண்டு பெண்கள் இப்படிக் கலைகளை வ்ருத்தி செய்வது ரொம்பவும் நல்லது. அவர்களுடைய 'நேச்ச'ருக்கு ஏற்றது. பகல் பொழுதை உழைப்புக்கும் கலைகளுக்குமே அவர்கள் பிரித்துக் கொடுக்க வேண்டும். உழைக்கிற 'ஸ்பிரி'ட்டோடு உழைத்தால் அதுவே ஒரு கலைதான்! 'நம் அகத்துக்காக, நம் மநுஷ்யர்களுக்காகவாக்கும் செய்கிறோம்?' என்கிற உணர்ச்சியே உழைப்பில் ஒரு உத்ஸாஹத்தை ஊட்டி, அதையும் ஒரு கலையாக்கிவிடும்.

இதுவரை நான் சொன்ன மாதிரியெல்லாம் ஸ்த்ரீகள் இருந்தால், வீட்டோடு இருப்பதில் பொழுது **போகவில்லை** என்றில்லாமல் பொழுது **போதவில்லை** என்றே ஆகிவிடும்!

ஸ்த்ரீகள், உத்யோகத்துக்குப் போகாமல் நாள் முழுதும் நல்ல பொழுதாகக் கழிப்பதற்கு எனக்குத் தெரிந்த யோஜனையைச் சொன்னேன். நல்ல பொழுது என்பது அவர்களுடைய உடம்பை உறுதி பண்ண உதவி பண்ணுவதோடு மனஸைப் பெண்மை என்பதன் மாதுர்யத்தில் குழைக்கவும் உபகாரம் பண்ணவேண்டும் என்ற அபிப்ராயத்தில் சொன்னேன்.

எல்லா தர்மங்களுக்கும் ஆணிவேர் பெண்கள்தான்

எப்படியாவது ஸத்ரீத்வம் - பெண்மை - என்பதற்கு லக்ஷணமாக இத்தனை ஆயிரம் வருஷங்கள் இருந்து வந்திருக்கிற உத்தம குணங்களையும், உசந்த வாழ்க்கை முறையையும் செத்தே போய் விடாமல் முடிந்த மட்டும் ஆக்ஸிஜனைப் 'பம்ப்' பண்ணி ரக்ஷித்துத் தந்தாக வேண்டும். அதுதான் இன்றைக்குத் தலையான கார்யம்.



ஒரு கல்யாணம், கார்த்திகை என்றால்,
அதிலே வேடிக்கையும் இருக்க வேண்டுமாகையால்,
கேலிப் பாட்டுகள் கூடப் பாடலாம். வாழ்க்கையில்
இதெல்லாமும் அதனதன் அளவுக்கு உட்பட்டு
வேண்டியதுதான். இல்லாவிட்டால் உப்புச் சப்பே
இருக்காது; ஒரே உம்மணாமூஞ்சியாகிவிடும்.

ஏனென்றால் *ஸ்த்ரீ மூலம் ஸர்வ தர்மா:* - 'எல்லா தர்மங்களுக்கும் பெண்டுகளே ஆணிவேர்' - என்று சாஸ்த்ரம் சொல்கிறது. அவர்கள் வீணாகப் போனால் லோகமே போனது போனதுதான். புருஷ ஜாதி வீணாய்ப் போனால் அவ்வளவு ஹானியில்லை. ஸ்த்ரீ ஜாதியின் தார்மிக பலம் அவனைக் காப்பாற்றி எழுப்பிவிடும். அவள் விழுந்தால்தான் ஸமுதாயத்துக்கே வீழ்ச்சி. "ஸ்த்ரீகள் கெட்டுப் போனால் எல்லாமே போய்விடுமே?" என்றுதான் அர்ஜுனனும் கீதாரம்பத்தில் (கீதை ஆரம்பத்தில்) அழுகிறான்.

ஸ்த்ரீக்கு ஸ்த்ரீத்வம் இருக்கவேண்டும், பெண் பெண்ணாக இருக்கவேண்டும் என்பதற்கு இத்தனை சொல்லி முட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறதை என்ன சொல்கிறது? 'காலத்தின் கோலம்' என்கிறார்களே, அப்படிக் கலி புருஷன் எல்லார் மனஸிலும் புயலாகப் புகுந்து பண்ணுகிற வெறிக் கூத்தால்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது.

போகப் போக விளைவு விபரீதமாகும்

போட்டிக்கு இடமே இல்லாத இடத்தில் போட்டி ஏற்பட்டு ஆணுக்குப் பெண் சளைப்பதா என்று ஏற்பட்டு, அதில் ஒரு பெரிய vicious circle -ஆக (விஷக் கூட்டமாக) ஒன்றைத் தொட்டுக்கொண்டு ஒன்றாகத் தப்புகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

ஸ்த்ரீத்வத்தை விட்டுப் பௌருஷத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லாமலே, பொருளாதார உயர்வுக்காக என்று தப்பாக நினைத்துக்கொண்டு ஒரு பெண் வேலைக்குப் போனாலுங்கூட அதன் தொடர்ச்சியாக அந்த 'அட்மாஸ்ஃபிய'ரில் அவளுக்குத் தன்னையறியாமல் பௌருஷ அம்சங்கள் வந்து சேர ஆரம்பித்துவிடும். இப்படியே கொஞ்சங் கொஞ்சமாக அவளுடைய ஸ்த்ரீத்வம் மேலும் மேலும் மரத்துக் கொண்டே போய், அந்த அளவுக்குப் பௌருஷமும் கூடிக் கொண்டே போகும். அதனால் ப்ரக்ருதி தர்மத்தின் ப்ரதம விதியாகப்

பௌருஷ வன்மைக்கு மாற்றாக ஸ்த்ரீத்வ மென்மை லோகவாழ்க்கையை ஸமன் செய்து அழகு படுத்தவேண்டும் என்று இருப்பது சிதிலப்பட ஆரம்பிக்கும். இன்றைய அடங்காப்பிடாரி லோகத்துக்கு அத்யாவச்ய மருந்தான அடக்கம் என்பது ஸ்த்ரீகளை விட்டுப் போக ஆரம்பித்துவிடும். நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் அவர்களுக்கும் தாட்பூட் வந்துவிடும்.

இதன் விபரீதம் ஆரம்ப காலத்தில் தெரியாமல் எல்லாம் நல்லதாகவே ஒரு ஸமதர்மப் புரட்சி நடந்ததாகத் தோன்றலா மானாலும் போகப் போக இப்படி ஸ்த்ரீ-புருஷாள் அடங்கிய முழு ஸமூஹமுமே அடங்காமைக் கோலம் கொண்டால் லோகமே க்ரூர ம்ருகங்களோ அல்லது அஸுர ஜாதிகளோ ஒருத்தருக்கொருத்தர் சண்டை பிடித்துக் கொள்வது போன்ற நித்ய நரகமாகிவிடும்.

ஆண்மையும் பெண்மையும் - பரஸ்பரம் இட்டு நிரப்பிக் கொள்பவை

ஆண்மை-பெண்மைகளுக்கிடையே போட்டியே இல்லை; அவை ஒன்றுக்கொன்று complementary-யாகப் பரஸ்பரம் இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டியவைகளே. ஒன்றுக்கொன்று 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொண்டு போக வேண்டியவை. ஒன்றாகக் கலந்துவிட்டால் இரண்டின் ரூபமும் போய்விடுமாதலால் அப்படிப் பண்ணக்கூடாது. ஒரு தராசில் இரண்டு தட்டுக்கள் வேறே வேறேயாக இருந்து கொண்டு ஒன்றுக்கொன்று 'பாலன்ஸ்' பண்ணிக்கொள்கிற மாதிரியேதான் இதுவும்.

ஸ்த்ரீ-புருஷ 'ஈகாலஜி'!

இப்போது ஒரு 'logy' ரொம்பவும் அடிபடுகிறதே, ecology ecology என்று! அதிலே என்ன சொல்கிறார்கள்? "நேச்சரில் நாடு, காடு, அவற்றில் விதவிதமான தாவரங்கள், ம்ருக ஜாதிகள் என்று பல வித்யாஸங்களோடு இருக்கின்றன. அப்படி வித்யாஸமாயிருந் தாலும் எல்லாவற்றையும் ஒரு ஒழுங்கமைப்பில் தாங்கி நிற்கும்

ஒரு 'பாலன்ஸிங் ஆர்டர்' இயற்கையில் இருக்கிறது. இது ஒரு விசித்திரமான பாலன்ஸ் - தராசு. அதாவது ஏற்றத்தாழ்வு இல்லாமல், எல்லாவற்றையும் ஸமமாக்குகிற பாலன்ஸாக இல்லாமல், ஏற்றத் தாழ்வுகள் இருந்தே தீர்கிற அஸமத்வத்திலும் (ஸமமற்ற தன்மையிலும்) ஒரு ஒழுங்குப் பாட்டை - order-ஐ ஏற்படுத்துகிற பாலன்ஸ். இப்படி ஒன்றுக்கொன்று நுட்பமாக 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொண்டு இருக்கும்படியாக இயற்கை - இயற்கை என்ற பெயரில் இருக்கிற ஈச்வர நியதி - வைத்திருப்பதை 'அப்ஸெட்' பண்ணப்படாது; அதை 'டிஸ்டர்ப்' பண்ணப்படாது. பண்ணினால் இயற்கை முறைத்துக்கொண்டு பழிவாங்கும். புலி, பாம்பு போன்ற க்ரூர ஜந்துக்கள் உள்பட எல்லாவற்றுக்கும் அததற்கான விகிதாசாரப்படி இடமுண்டாகை யால் அவற்றைக்கூட ஒழித்துவிடக் கூடாது. குறுகிய கண்ணோட்டத்தில் நல்லவை என்று நினைத்து அதற்காக இந்த 'ஈகலாஜிகல் பாலன்'ஸை மாற்றப் பார்த்தால் பிற்பாடு பெருத்த விபரீதமாகும்" என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த உண்மையில் எல்லோருக்கும் விழிப்பு ஏற்படுத்தவேண்டும், awareness create பண்ண வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். நல்ல கார்யந்தான்.

ஆனால் இந்த ஈகாலஜி மாதிரி ஸ்த்ரீ-புருஷ ஈகாலஜி என்றும் ஸூக்ஷ்மமாக ஒன்று இருக்கிறதென்பதையும் அதன் பாலன்ஸைக் கெடுத்தாலும் விபரீதம் என்பதையும், அந்த விபரீதம் ஸூக்ஷ்மமான மனோலோகத்திலேயே முக்யமாக நடக்கிற ஒன்றானாலும், அதோடு நின்றுவிடாமல் ஸ்தூலமாகவே இந்த லோகத்தையும் ஒரு அடங்காப்பிடாரி ஸமூஹமாக ஆக்குகிறமட்டில் ஆபத்து நீளும் என்பதையுந்தான் ஒருத்தரும் கவனிக்கமாட்டேன் என்கிறார்கள்.

அதைக் கொஞ்சமாவது கவனித்து எச்சரிக்கை செய்கிற எங்களைப் போன்றவர்களை முன்னேற்றத்துக்கு விரோதிகளான


பிற்போக்குவாதிகள் என்று மொத்துகிறார்கள். அடங்கிக் கிடக்காமல் துணிச்சலாக ஸாஹஸத்தில் போவதுதான் முற்போக்கு என்கிறார்கள். 'Dash and drive வேண்டும்' என்று இதற்குப் பேர் கொடுத்துச் சொல்கிறார்களாம். எனக்கோ இதைக் கேட்கும்போது என்ன தோன்றுகிறதென்றால்: 'ஒரு மலையிலே கிடுகிடு பள்ளத்தில் கொண்டு தள்ளுகிற விளிம்பை நோக்கித்தான் இவர்கள் முற்போக்கு என்ற பெத்தப் பெயரில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முற்போக்கைத் தடுத்து அதை எப்படியாவது பின்னே தள்ளவேண்டிய பிற்போக்கு காரியந்தான் இப்போது ஆபத்து வராமல் காப்பாற்றும். இல்லாவிட்டால் dash and drive சொன்னவர்கள் தங்களுடைய வழியிலேயே 'ட்ரைவ்' பண்ணிக்கொண்டு போய் மலை விளிம்பிலிருந்து விழுந்து 'டாஷ்' ஆவதில்தான் முடியும்' என்றே தோன்றுகிறது.

இன்றைய க்ரூரப் போக்குக்கு அடிப்படைக் காரணம்

ஆண்-பெண்களுக்கு இடையிலான 'ஈகலாஜிகல்' பாலன்ஸை 'அப்ஸெட்' பண்ணி, பெண்ணாகப் பிறந்தவள் ஆணின் பௌருஷத்தை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தால் நேச்சர் - இயற்கை - அதைச் சும்மா அப்படியே விட்டு விடவில்லை என்று ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேன்; நன்றாகவே பார்க்கிறேன். இந்த விஷயம் - நான் இப்போது சொல்லப் போகிற விஷயம் - கொஞ்சகாலமாகவே என் மனஸில் ஆழமாக இருந்து வந்திருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால்: பெண்ணாய்ப் பிறந்தவர்கள் தங்கள் மென்மையைக் குறைத்துக் கொண்டு ஆண்மையின் வன்மையை எடுத்துக்கொண்டால் அப்போது ஆண் வர்க்கத்தின் இயற்கை இப்படி ஆணும் பெண்ணும் ஸமமானதை ஒப்புக்கொள்ள மறுத்து, தான் மேலும் வன்மையில் இறங்குகிறது. அதனால் எங்கே பார்த்தாலும் அஸுரத்தனமான க்ரூரப் போக்கு தலைதூக்குகிறது.

தற்காலத்தில் ம்ருக வர்க்கம், மநுஷ்ய வர்க்கம் என்று இரண்டைப் பிரித்து ம்ருக வர்க்கம் மநுஷ்ய வர்க்கத்தை விட வன்மையானது என்று பொதுப்படச் சொல்கிறோம். பழைய காலங்களில் க்ரூரமான ம்ருகங்கள் மாதிரியே, அல்லது அதை விடவும் க்ரூரமாக, ஆறறிவு படைத்த ஜீவர்களாக அஸுர வர்க்கம், ராக்ஷஸ வர்க்கம் என்றெல்லாமும் இருந்தன. அதே மாதிரி மநுஷ்ய வர்க்கத்தை விட மென்மை படைத்த தேவ வர்க்கமும். இப்போதும் இந்த தேவாஸுர சக்திகள் ஸூக்ஷ்மமாக இருக்கவே செய்கின்றன. இப்போது ஏன் இந்த விஷயம் சொல்கிறேன் என்றால்: மநுஷ்ய வர்க்கத்தில் ஈகாலஜியில் வன்மை குறைந்தவளாக இருக்க வேண்டிய ஸ்த்ரீ அப்படியில்லாமல் புருஷனின் வன்மையை ஸ்வீகரிக்க ஆரம்பித்தால் அப்போது பாலன்ஸின் சீர் கெடுகிற தோல்லியோ? அப்படி ஆவதை புருஷ இன இயற்கை - race consciousness - அநுமதிக்காமல், தான் எப்படியும் பெண்ணை விட வன்மையில் ஒரு படி மேலேதான் இருக்கவேண்டும் என்ற உணர்ச்சியில் முன்னைவிட வன்மையுள்ளதாக, மேலும் சொர சொரப்பாக, முரட்டுத்தனமாக கொடூரமாக ஆகப் பார்க்கிறது. அதாவது, அஸுர ஸ்வபாவத்தை எடுத்துக் கொள்ளப் பார்க்கிறது. மநுஷ்ய ஜாதி ஸ்த்ரீ அந்த ஜாதிப் புருஷன் மாதிரி ஆனால், அந்தப் புருஷன் உடனே அஸுர ஜாதி மாதிரி ஆகிறான்!

ஏனென்றால் பல ரகமானவையும் ஒரே போல ஸமமாவதில் ஈகலாஜிகல் பாலன்ஸ் இல்லை; பல ரகங்கள் ஒன்றுக்கொன்று அஸமமாக இருந்து கொண்டிருக்கிற போதிலும் அவை ஒன்றுக்கொன்று சீராக அட்ஜஸ்ட் செய்து கொள்வதாகத்தான் இந்த விசித்ரமான பாலன்ஸ் இருக்கிறது! அதனால் ஒருவிதமானது இன்னொரு விதமாகிறபோது ஏற்படுகிற ஸமத்வத்தினால் பாலன்ஸிங் சீராவதற்கு நேர்மாறாக சீர் கெடவே செய்கிறது. அப்படி ஏற்படுவதை அந்த இன்னொன்றின் 'நேச்சர்' ஒத்துக் கொள்வதில்லை. உடனே அது வேறுவிதமாகத் தன்னை



பல ரகமானவையும் ஒரே போல ஸமமாவதில்
ஈகலாஜிகல் பாலன்ஸ் இல்லை; பல ரகங்கள்
ஒன்றுக்கொன்று அஸமமாக இருந்து கொண்டிருக்கிற
போதிலும் அவை ஒன்றுக்கொன்று சீராக
அட்ஜஸ்ட் செய்து கொள்வதாகத்தான்
இந்த விசித்ரமான பாலன்ஸ் இருக்கிறது!

ரூபப்படுத்திக் கொண்டு, மறுபடியும் அஸமத்துவமான பாலன்ஸிங்கையே அமலுக்குக் கொண்டுவரப் பார்க்கிறது.

இருபது-இருபத்தைந்து வருஷமாகப் புதுத் தலைமுறை ஸ்த்ரீகளில் கணிசமானவர்கள் பௌருஷத்தில் அதிகம் ப்ரவேசிப்பதாக ஏற்பட்டு, நடந்து வந்து கொண்டிருக்கிறது. இவர்களை ஆண்களும் ஊக்கி வருகிறார்கள். இவர்களுக்கே தெரியாத உரிமைப் போராட்டங்களைக்கூட ஆண்களே இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து 'ஸரிநிகர் ஸமான'த்தில் இவர்களை உத்ஸாஹப்படுத்துகிறார்கள். ஆனால் இயற்கை - இயற்கைப்படியான பாலன்ஸிங், எடை கட்டல் - ஸரிநிகர் ஸமானத்தில் இல்லையே! அதனால், என்ன ஆகிறது? வெளியிலே புருஷர்கள் ஸ்த்ரீ-புருஷ ஸமத்வத்தை பலமாக ஆதரித்தாலும் உள்ளுக்குள்ளே அந்த இனத்துடைய 'நேச்சர்' இந்த ஸம நிலைக்கு மேலே தங்கள் ஆண்மையைக் காட்டவேண்டும் என்று குமுறிக்கொண்டு வெடிக்கிறது. அந்த ஆண்மையை அதிகப்படி வன்மையான க்ரூரமாகக் காட்ட ஆரம்பிக்கிறது. ஸரியாக இருபது-இருபத்தைந்து வருஷமாகத்தான் ஒரு பக்கம் ஸ்த்ரீகள் ஆண்மைக்கு வருவதன் தொடர்ச்சியாகவும் விளைவாகவும் புருஷர்கள் மேலும் மேலும் வன்முறைகளில் ஈடுபடுவதாக ஏற்பட்டு வந்திருக்கிறது.

நம்முடைய தேச நிலைமை பற்றித்தான் சொல்கிறேன். வெளிதேசங்களை விட நம் தேசம்தான் எப்போதும் ஸாத்விகத்துக்குப் பெயர் பெற்று வந்திருக்கிறது. வெளிதேசத்தவர்களும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். மற்ற தேசங்களில் எல்லாம் வன்முறை என்கிற ஹிம்ஸா மார்க்கமும் ரொம்ப காலமாக உண்டு; ஸ்த்ரீ-புருஷ ஸமத்வமும் அதே மாதிரி உண்டு. நம் ஸ்த்ரீகள் மாதிரி அடக்கம், கற்பு முதலியவற்றை அந்த தேசத்து ஸ்த்ரீகள் அப்யஸித்ததுமில்லை. நான் அவர்களைக் குற்றம் சொல்லவில்லை. இருப்பதைச் சொன்னேன். எந்த தேசத்திலும்

உத்தமமான ஸ்த்ரீ-புருஷர்கள் எக்காலத்திலும் உண்டு. அப்படி அங்கேயும் உண்டு. அது ஒருபக்கம் இருக்க, நாம் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயத்தின்படி மொத்தத்தில் அங்கேயுள்ள ஸ்த்ரீகளுக்கு நம் தேசத்து ஸ்த்ரீகளைவிடப் பௌருஷ தாட்பூட் ஜாஸ்திதான். அப்படியிருந்தாலும், அங்கேயும் அவர்களைவிட ஆண்கள் அதிக வன்மை, வலிமைகளோடு இருந்துகொண்டுதான், அப்படிப்பட்டவர்களில் பலர் ஹிம்ஸா மார்க்கத்திலேயே போவது. எங்கேயானாலும் ஸ்த்ரீகளைவிடப் புருஷர்கள்தான் ஹிம்ஸா மார்க்கத்தில் போவது. விதி விலக்காகத்தான் எங்கேயாவது ஒரு கொள்ளைக்கூட்டத்துக்கு ஒரு ஸ்த்ரீ தலைவியாயிருப்பது.

விஷயம் என்னவென்றால், பெண் தன் மென்மையைவிட்டால், அவளோடு எப்போதும் வன்மையில் ஒருபடி மேலேயே இருக்கிற புருஷ இயற்கையானது, அவனிடம் மநுஷ்ய ஜீவன் என்பதற்குரியதாக வைத்துள்ள மென்மைக் குணங்களை அறவே விட்டு அவனை அஸுர ஜாதி மாதிரி முழுக்க வன்மையாகவே, வன்முறையில் போகிறவனாக ஆக்கிவிடுகிறது.

ஒருத்தரையொருத்தர் மிஞ்சுவதை one-up-manship என்கிறார்கள். இதற்கு நான் இப்போது ஒரு புது அர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். 'Manship' என்பதைப் 'புருஷனின் தன்மை' என்று அர்த்தம் பண்ணிக் கொள்கிறேன். அது எப்போதும் ஸ்த்ரீயானவள் தனக்கு ஸமதை ஆகிவிடுவதைப் பொறுத்துக் கொள்ளாமல் ஒருபடி மேலேயே - one-up ஆகப் - போவதிலேயே இருக்கிறது என்று பார்க்கிறேன்.

இப்படிப் புருஷர்கள் அதிக வன்மையில் போவது ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும், இரண்டும் கைகோத்துக் கொண்டும் நடந்து வருகிறது. இருபது-இருபத்தைந்து வருஷம் முன்னாடி ஆண்களில் மீசைப் பழக்கம் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள்கூட மீசை வைத்துக் கொள்வதில் இது ஆரம்பித்தது.

அதுவரை ஹிம்ஸா மார்க்க - துன்மார்க்கங்களைச் சேர்ந்தவர்களோடேயே ஸம்பந்தப்பட்ட பயங்கரமான பல தினுஸான கிர்தா மீசைகளை எல்லோரும் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். அதே மாதிரி ட்ரெஸ்ஸும், அதுவரை கொள்ளைக்காரர்கள், கைதிகள் ஆகியவர்களுடைய சித்ரங்களில் எப்படிப் போட்டார்களோ, அப்படிப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள். இந்த வெளிவேஷத்தோடு நிற்கவில்லை.

Non-violence என்பதை வெளிதேசங்களிலும் 'அஹிம்ஸை' என்று டிக்ஷனரிகளில் ஏற்றுகிற அளவுக்கு ஸமீப காலத்தில்தான் காந்தி பண்ணியிருந்தார். அப்படிப்பட்ட தேசத்தில் terrorism, militancy, வன்முறை, பயங்கரவாதம் என்கிற வார்த்தைகள்தான் ந்யூஸ் பேப்பரைப் புரட்டிய இடத்திலெல்லாம் கண்ணில் படுவதாக இப்போது ஆக்கியிருக்கிறோம்! ஆங்காங்கே யாரோ சில பேர் chain-snatching, அடிதடி, கொலை-கொள்ளை, கூட்டமாக வீட்டிலே புகுந்து சூறையாடுவது என்று பண்ணிவந்தது நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டு வருகிறது. இது மட்டுமில்லாமல், ஸைன்யங்கள் மாதிரியே, போலீஸும் பயப்படுகிற மாதிரி, பெரிய பெரிய அமைப்பாக ரஹஸ்யமாகவோ, பஹிரங்கமாகவோ பல கூட்டங்கள் சேர்ந்து ராஜாங்கத்துக்கே ஓயாத தலைவலி கொடுத்து வருகிறார்கள்.

ஏனிப்படிப்பட்ட மாறுதல் நடக்கிறதென்றும், இதை எப்படி அடக்கி தேசத்தில் ஸத்வ குணத்தையும் சாந்தியையும் உண்டாக்குவது என்றும் நல்லறிவாளர்கள் எனப்பட்டவர்கள் சிந்தனை பண்ணி நிறைய எழுதியும் பேசியும் வருகிறார்கள்; பலவிதமான யோஜனைகள் சொல்லி வருகிறார்கள். எனக்குத் தெரிந்தது ஒரே காரணந்தான். எனக்குத் தோன்றுவது ஒரே ஒரு 'ஸொல்யூஷன்'தான். சொன்னால் எவராவது கேட்பார்களா என்று ஸந்தேஹம்தான். பைத்தியம் மாதிரி உளறுகிறேன் என்றே நினைக்கக்கூடும்.

ஆனாலும் சொல்கிறேன். மற்றவர்கள், intellectuals எனப்படுபவர்கள் சொல்கிற காரணங்களெல்லாம் தப்பு என்று நான் சொல்லவில்லை. அவையும் காரணமாயிருக்கலாம். அவற்றோடு, ரொம்பவும் முக்யமான காரணமாக எனக்குத் தோன்றுவதை சொல்கிறேன். ஏற்கனவே சொல்லியாகிவிட்டது; அதுதான்.

அதாவது, இப்போது வன்முறை ஜாஸ்தியாயிருப்பதற்கு எனக்குத் தோன்றுகிற முக்கியமான காரணம், இயற்கையில் அமைந்த ஸ்த்ரீ-புருஷ குணங்களின் பாலன்ஸைக் கெடுத்து ஸ்த்ரீகள் தங்கள் அடக்கத்தை விட்டுப் பௌருஷ வியாபாரங்களில் இறங்கி விட்டதுதான். அது பொறுக்காமல் இயற்கை - புருஷர்களின் இயற்கை - இன்னும் உக்ர ரூபம் எடுத்துக்கொண்டு பழிவாங்குகிறது. புருஷர்கள் ஒரேயடியாக அடங்காமையில் தலைகுப்புற விழுந்து பலவிதமான பலாத்கார ஹிம்ஸைகளில் இறங்குகிறார்கள்.

பெண்ணினத்தைப் பழிவாங்குவது

அவர்களுடைய உக்ரம் பொது ஸமூஹம் முழுதையும் பாதிக்கத்தான் செய்கிறது என்றாலும், அந்த ஸமூஹத்திலும் குறிப்பாகப் பெண்களை வஞ்சம் தீர்த்துக் கொள்கிற மாதிரியே அநேகம் நடப்பதையும் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்தால் நான் சொல்கிற காரணம் - இன்றைய புருஷ வர்க்கத்தின் அடங்காப்பிடாரித்தனம் ஸ்த்ரீகள் அடக்கத்தை விடுவதன் 'ரியாக்ஷன்'தான் என்ற காரணம் - பைத்தியக்காரத் தனமானதில்லை என்று ஒப்புக் கொள்ளத் தோன்றலாம்.

பெண்களை எப்படி வஞ்சம் தீர்த்துக் கொள்கிறார்கள்? பல விதங்களில் அப்படிப் பண்ணுகிறார்கள். முன்னேயெல்லாம் எங்கேயோ ஒன்றாகக் கேள்விப்பட்டுக்கொண்டிருந்த தப்புக்களை, குற்றங்களை இப்போது பெரிய அளவில் தேசம் பூராவிலும்

பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். 'ஈவ்-டீஸிங்' என்று பெண்ணைச் சீண்டுவதில் ஆரம்பித்து... சொல்லவே வாய் கூசுகிறது... அவர்களை வஸ்திராபஹரணம் பண்ணி ஊர்வலமாக இழுத்து வருவது, பல பேர் சேர்ந்து மானபங்கப் படுத்துவது என்றெல்லாம் 'ந்யூஸ்' தினந்தினமும் வந்து கொண்டிருக்கும்படி ஒரே உத்பாதமாகப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஸினிமா, ட்ராமாக் காட்சிகளிலும் இந்த மாதிரிப் பல தினுஸில் கொடுமைப்படுத்திக் காட்டுகிறார்கள் என்றும், கதைப் புஸ்தகங்களும் இந்த மோஸ்தரிலேயே வந்தபடி இருக்கின்றன என்றும் தெரிகிறது. இந்த லிஸ்டில் இன்னொன்று: வரதக்ஷிணை, சீர் போதிய அளவு கொண்டு வரவில்லை என்று பெண்டாட்டிமேல் கெரஸினாயில் விட்டுக் கொளுத்துவது. தினமும் பேப்பரில் இப்படி 2-3 ந்யூஸ் வருகிறது. 2-3 வருகிறது என்றால் வராமலே ரஹஸ்யமாக நடப்பது இன்னும் எத்தனையோ இருக்கும்.

எல்லாத் துறைகளிலும் ஸ்த்ரீகளுக்கு நிறைய ஸ்தானம் கொடுத்து அவர்களை முன்னேற்ற வேண்டும் என்று ஒரு பக்கம் ஆண்களிலேயே பல பேர் 'ஸின்ஸியரா'கச் சொல்லிக்கொண்டு, சொல்வதைக் கார்யத்திலும் அமல்படுத்தி வருகிறபோதே இன்னொரு பக்கம் இப்படி ஸ்த்ரீகளை மேலே சொன்ன மாதிரியெல்லாம் அநியாயமாக, அக்ரமமாகக் கொடுமைப் படுத்துவதாகவும் நடந்து வருகிறது. அநியாயம்தான், அக்ரமந்தான். மனஸ் பொறுக்கவே மாட்டேன் என்றுதான் ஸங்கடப்படுகிறது. ஆனாலும் என்ன பண்ணலாம்? இயற்கை என்கிற மஹாசக்தி பார்த்துப் பார்த்து ரூபம் பண்ணியிருக்கிற ஒழுங்குமுறை என்ற அணைக்கட்டை நாம் புரிந்துகொள்ளாமல் நல்லெண்ணத்தின் மேலேயே ஏதாவதொரு விதத்திலே உடைப்பெடுத்துக் கொள்ளப் பண்ணிவிட்டால் அது பயங்கரமாக ரியாக்ட் பண்ணி இன்னொரு விதத்தில் அதைவிடப் பெரிசாக உடைப்பெடுத்துக் கொள்கிறது!

ஒரே தீர்வு

இது காரணம்.

ஸொல்யூஷன்?

இயற்கையின் ஒழுங்குமுறைக்கே திரும்புவதுதான்! 'அது ஒழுங்கேயில்லை. நாம் முயற்சி பண்ணி ஒழுங்கு பண்ண வேண்டிய ஒன்றுதான்' என்று குறுகிய பார்வையில் தப்பாக நினைப்பதை தைரியமாக விட்டு, 'முன்னேற்றம்' என்ற பெயரில் எடுக்கிற நடவடிக்கைகளைக் கைவிடுவதுதான் 'ஸொல்யூஷன்'. அதாவது ஆண்களின் அடங்காமை அஸுரத்தனம் அடங்க வேண்டுமானால் அதற்கு வழி, பெண்கள் பழைய நாள் வழக்குப்படி அடக்கமாக இருந்து கொண்டு, அகத்தோடு தங்கள் கடமைகளைச் செய்து கொண்டிருப்பதுதான். அதுதான் பெரிசாகப் பிய்த்துக் கொண்டிருக்கிற உடைப்பை மண் கொட்டி அடைக்கும். எப்படி நடந்தது என்றே தெரியாமல் இந்தப் பெரிய மாற்றம் 'மாஜிக்' மாதிரி நடந்துவிடும். யார் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இப்படித்தான் என் மனஸுக்கு 'ஸ்ட்ராங்'காகப் படுகிறது. பெண்மை என்பதற்கு அங்கமாக சாஸ்த்ர வழி, சிஷ்டர்களின் வழி ஆகியவற்றில் என்னென்ன சொல்லியிருக்கின்றனவோ அவற்றைப் பேணி வளர்ப்பதே ஆண்களை நாகரிக ஸமூஹ வாழ்க்கைக்கு ஏற்ற மாதிரிக் கட்டுப்படுத்திவிடும் என்பதுதான் எனக்குத் தெரிகிற ஒரே 'ஸொல்யூஷன்'.

முடியுமா என்றால், மனஸ் மட்டும் இருந்துவிட்டால் முடியாததேயில்லை. நாங்கள் சொல்கிற ஸொல்யூஷனில் ஸ்த்ரீகளால் முடியாததாக ஒன்றும் இல்லவே இல்லை. மேல் பரப்பிலே அவர்களுடைய போக்கு எப்படியிருந்தாலும் உள்மட்டத்திலே அவர்களுடைய இயற்கையே அடக்கமா யிருப்பதுதான். கொஞ்சம் மனஸ் மட்டும் வைத்துவிட்டால்

போதும். அவர்கள் ரொம்பவும் 'ஈஸி'யாக அப்படி ஆகிவிடமுடியும் கொஞ்சத்தில் கொஞ்சம் அந்த வழியில் போனாலும் அதிலேயே, அவர்கள் இப்போதைய முன்னேற்றங்களில் பெறுவதை விட அதிகமான ஆத்ம த்ருப்தியையும் நிம்மதியையும் கண்டுகொள்ள முடியும். இப்போதைய போக்கில் த்யாகம்ாகத் தோன்றுகிற சிலவற்றை அவர்கள் கொஞ்சம் பண்ணினாலும் போதும், பெரிய லாபம் கிடைக்க ஆரம்பிக்கும்.

அதுவே மேலே மேலே அவர்களை அழைத்துக் கொண்டு போகும். அப்போது த்யாகம் என்பதே கஷ்டப்படுத்துகிற ஒன்றாக இல்லாமல், அந்தராத்மாவைத் திருப்தியில் ரொப்பி வைக்கிற ஒன்றாக இருக்கும். அதன் அஸ்திவாரத்தில் பிரேமை, பொறுமை, ஸேவை, பணிவு முதலிய எண்ணம் தாமாகவே வந்து கைகூட ஆரம்பிக்கும்.

இயற்கையை மீறுவதுதான் மஹா கஷ்டம். அந்தக் கஷ்டத்தை 'ஈஸி'யாகப் பண்ணியவர்கள், இயற்கையோடு ஒத்துப் போகிற 'ஈஸி'க் கார்யத்தை எளிதாகப் பண்ண முடியாதா என்ன? மனஸ் இருந்துவிட்டால் பண்ணி விடலாம். அப்படி அவர்கள் மனஸ் வைப்பதற்கு அம்பாள்தான் க்ருபை பண்ண வேண்டும்.

ஸமத்வந்தான் வேண்டும் என்று இப்போது அவர்களுக்குத் தீவிரமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது த்யாகம்தான் வேண்டும் - குடும்பத்துக்காக, லோகத்துக்காக, பிரபஞ்ச இயற்கை தர்மம் பிறழாமலிருப்பதற்காகப் பெண்கள் த்யாகிகளாக அடங்கியிருக்க வேண்டும் - என்றால் அது நேர்மாறுதானே? அதனால் அது இக்காலப் பெண்களுக்கு புருஷ வர்க்கத்தின் கொடுங்கோன்மை என்றே தோன்றும்; 'ஏன் த்யாகம் செய்ய வேண்டும், ஏன் அடங்கியிருக்க வேண்டும்?' என்றே தோன்றும். அதனால்தான் அம்பாளின் அநுக்ரஹத்தை வேண்டுகிறேன். நம்

சக்தி, ஸாமர்த்யத்தால் முடியாததையும் அந்தப் பராசக்தியின் அநுக்ரஹம்தான் செய்யமுடியும்.

ஆடை விஷயம்

பெண்மையை ரக்ஷிப்பதில் ஒரு முக்யமான அம்சத்தைச் சொல்ல வேண்டும். இது என் மனஸை ரொம்பவும் ஸங்கடப்படுத்தி வருகிற விஷயம். இப்படியொரு விஷயம் நான் வாய்விட்டுச் சொல்லும்படி ஆகியிருப்பதே அவமானமாக இருக்கிறது. ஆனாலும், ஜன ஸமூஹம் கொஞ்சங்கூட ஆக்ஷேபிக்காமல் - ஆக்ஷேபிக்காததோடு ஆதரவு கொடுத்தும் - ஒரு பரம தோஷமான விஷயம் நடக்கிறபோது, அது தோஷமானது என்று எனக்குத் தெரிந்தும், என்னால் முடிந்தது, அதை எடுத்துக்காட்டும் கார்யம்; அதைக் கூட நான் பண்ணவில்லை என்றால் அதுவே மஹா பெரிய தோஷம் என்பதால்தான் சொல்கிறேன்.

நடை, உடை, பாவனை ஆகிய எல்லாவற்றிலும் ஸ்த்ரீகளும் பௌருஷக் கோலம் போட்டுக் கொள்வதில் உடை என்கிற மையமான விஷயந்தான். 'ஆள்பாதி, ஆடை பாதி' என்று வசனம் சொல்கிற அளவுக்கு அது முக்யமான விஷயம்.

பெண் குழந்தைகள் வயஸுக்கு வருகிறதற்கு முந்தியே, பெண்மையின் ஒரு முக்ய அங்கமான லஜ்ஜை (வெட்கம்) என்பதைக் கட்டிக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்குப் பாவாடைக்கு மேலே சட்டை மட்டுமில்லாமல் தாவணி என்று ஒரு மேலாக்குப் போட்டுக் கொள்ளக் கற்றுக் கொடுத்து அப்படியேதான் தலைமுறை, தலைமுறையாக நடந்து வந்திருக்கிறது. அப்புறம் இரண்டொரு வருஷத்திலேயே முழுப் புடைவையாக உடுத்துவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. பெண்மைக்கு ப்ரதானமான லஜ்ஜைக்குப் பரம ரக்ஷையாக இருந்து வந்திருக்கிற அந்த உடைக்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. எனக்குத்தான் சொல்ல லஜ்ஜையாக இருக்கிறதே தவிர,

அப்படித்தான் பண்ண வேண்டுமென்றே இப்போது ஸ்த்ரீகள் ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கொஞ்ச நாள் முன்னாடி என்னைப் பார்க்க இரண்டு காலேஜ் பெண்கள் வந்திருந்தார்கள். பவ்யமாகத்தான் வந்து நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போனார்கள். ஆனால் அவர்கள் புடைவை கட்டிக் கொள்ளாமல் புருஷர்களின் பைஜாமா-ஜிப்பா மாதிரியே போட்டுக்கொண்டிருந்ததுதான் எனக்கு என்னவோ போல் இருந்தது. N.C.C மாதிரி ஏதாவது பயிற்சி முகாமுக்காக இங்கே (காஞ்சீபுரத்துக்கு) வந்துவிட்டு, அப்படியே அந்த ட்ரெஸ்ஸிலேயே என்னைப் பார்க்க வந்திருப்பார்கள் போலிருக் கிறது என்றுதான் நினைத்தேன். அப்புறந்தான் தெரிந்தது - N.C.C யும் இல்லை, ஒன்றும் இல்லை; இப்போது இந்த ட்ரெஸ்தான் கல்யாணம் ஆகிற வரையில் இளம் பெண்களின் ட்ரெஸ்ஸாக ஆகிக்கொண்டு வருகிறது என்று. தாவணி வழக்கமும் போய்க் கொண்டிருக்கிறது என்றும் தெரிந்தது. எனக்குப் பெரிய 'ஷாக்'.

ஏன் 'ஷாக்' என்றால், இந்த ஆடை விஷயத்தில் நம்முடைய தேசத்துக்கு என்று ஏற்பட்ட நாகரிக முறையை, 'ட்ரெடிஷ'னை ஸ்த்ரீகள்தான் இதுவரை விடாமல் காப்பாற்றிக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாலு தலைமுறைக்கு முன்னா லிருந்தே புருஷர்கள் வெள்ளைக்கார உடுப்புப் போட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் ஸ்த்ரீகள் அப்படிப் போகவில்லை. ஃபோட்டோக்களில் புருஷன் ஸூட்-கோட் போட்டுக் கொண்டிருந்தபோதிலும், பக்கத்தில் நிற்கிற பெண்டாட்டி கொசுவன் புடைவை, அல்லது தங்கள் ஜாதிக்கான புடைவைதான் கட்டிக்கொண்டு நிற்பதாகப் பார்த்திருக்கிறேன்.

இப்போது நடக்கிற அளவுக்கு இல்லாவிட்டாலும் ஸ்த்ரீகள் காலேஜ் படிப்பது, உத்யோகம் பார்ப்பது, வேறே பல துறைகளில் ஈடுபடுவது, அந்நிய தேசங்களுக்குப் போய்வருவது ஆகியன எல்லாம் முன்னேயும்தான் இருந்திருக்கிறது. கார் ட்ரைவ்



இத்தனை பெரிய புராதனமான நாகரிக தேசத்துக்கு,
அதற்கென ஒரு தேசிய உடை - National Dress -
இல்லாமல், பிறத்தியான் உடுப்பே நமக்கு
உடுப்பாயிருப்பது நமக்கு மானக் குறைவு.

பண்ணுவது, ஸைக்கிள் ஓட்டுவது எல்லாமும் கூட ரொம்ப நாளாகவே - அபூர்வமாகத்தான் என்றாலும் - ஸ்த்ரீகளும் பண்ணிக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். இப்படிப் பல தினுஸில் வியாபகமாகப் போனாலும் அப்போதும் புடைவை கட்டிக் கொள்கிற பழக்கத்தை விடவில்லை. நர்ஸ்கள்தான் விதிவிலக்கு. அதுவும் ஆஸ்பத்திரிச் சட்டத்துக்காகவே தவிர அவர்களாக ப்ரியப்பட்டுச் செய்ததில்லை.

புருஷர்கள் விஷயம் தேசத்துக்கு ஸ்வதந்த்ரம் வந்த பிற்பாடு, நாளாக ஆக, முன்னைவிட வெள்ளைக்கார மோஸ்தரில் போவதாக ஆகிவந்திருக்கிறது. வெள்ளைக்காரன் ஆட்சியில் வேஷ்டி கட்டிக் கொண்டிருந்தவர்கள்கூட, அவனிடமிருந்து விடுதலை பெற்றபின் அவனுடைய ட்ரெஸ்ஸை மாட்டிக்கொள்ள ஆரம்பித்து அப்படியே போய்ப் போய், வெளி அலுவலின்போது மட்டுமே இங்க்லீஷ் ட்ரெஸ் என்பதுபோய் வீட்டிலுமே கூட அதுதான்; இல்லாவிட்டால் துருக்கன் பாணியில் கைலி-லுங்கி என்று ஆகியிருக்கிறது. இத்தனை பெரிய புராதனமான நாகரிக தேசத்துக்கு, அதற்கென ஒரு தேசிய உடை - National Dress - இல்லாமல், பிறத்தியான் உடுப்பே நமக்கு உடுப்பாயிருப்பது நமக்கு மானக் குறைவு. ஸ்த்ரீகள்தான் இந்தக் குறைக்கு இடம் தராமல், ஸ்வதந்திரம் வந்து பல வருஷமாகிற மட்டும் பழைய முறையிலேயே உடுத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள். அது பெரிய ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் இருந்தது. இப்போது அதற்கும் உலை வைத்தாகிவிட்டது என்கிறபோதுதான் பெரிய ஷாக்காக அடித்துவிட்டது.

நான் ஸ்வாமிகளானதிலிருந்து எத்தனையோ தடவை ஷாக்கிங் ஸமாசாரங்கள் கேட்டிருக்கிறேன். அந்த எல்லாவற்றையும் சேர்த்து வைத்து இந்த 'ஷாக்'.

நான் ப்ரமாதமாக தர்மோத்தாரணம் பண்ணுவதாகப் பத்ரிகைகளெல்லாம் எழுதுகின்றன. வருஷா வருஷம் ஜயந்தி

என்று அங்கங்கே உத்ஸவம் பண்ணி நான் எப்படி தர்மத்துக்கு மறுமலர்ச்சி உண்டாக்கியிருக்கிறேன் என்று ஸ்தோத்ரிக்கிறார்கள். எனக்கானால் இதெல்லாம் நான் செய்யத் தவறியதைக் குத்திக் காட்டுவதாகவே தோன்றுகிறது. 'கிழக் கோட்டான் மாதிரி தொண்ணூறாவது ஜயந்தி வரை கொண்டாட்டம் அடிக்கிறாயே! ஜயந்தி கொண்டாடிக் கொள்ள உனக்கு என்ன 'ரைட்'? மேலே மேலே ஒவ்வொரு வருஷமும் தர்மங்களை வாரி விட்டுக் கொண்டிருக்கிறாயே! நீ பட்டத்துக்கு வந்ததிலிருந்து ஸநாதன தர்மம் மேலும் மேலும் எவ்வளவு பங்கப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது? ஜகத்குரு பட்டம் பெரிதாக சூட்டிக் கொண்டிருக்கிற உனக்கு ஜகத்தை தர்மத்தில் நிலைநிறுத்துகிற சக்தி - தபோ சக்தி, பக்தி சக்தி எதுவோ ஒன்று - கொஞ்சமாவது இருந்தால் இப்படி ஆகிக்கொண்டு வந்திருக்குமா? இருப்பதைக் காப்பாற்றிக் கொடுக்கக்கூடத் துப்பு இல்லாமல் வருஷா வருஷம், நாளுக்கு நாள் தர்மங்களை வாரிக் கொடுத்துக் கொண்டுதானே இருக்கிறாய்?' என்பதை எனக்கு சவுக்கடியாக ஞாபக மூட்டுவதாகத்தான் இந்த ஜயந்தி விழாக்கள், புகழ் மாலைகள் எல்லாம் இருக்கின்றன.

இப்படி நான் கண்ணெதிரில் கொள்ளை கொடுத்த தர்மங்களில் நம்முடைய ஸ்த்ரீகள் புடைவை வேண்டாமென்று தள்ளி, ஆண்பிள்ளை ட்ரெஸ் மாதிரி ஒன்றை மாட்டிக்கொள்ள ஆரம்பித்திருப்பதுதான் பெரிய கொள்ளையாக 'ஷாக்' அடித்தது.

பாரத ஸ்த்ரீ தர்மத்தின் மிகப் பெரிய சொத்து

பெண்மைக்கு அதி முக்யமாயிருக்கிற லஜ்ஜா ரக்ஷணத்துக்குப் புடைவையைப் போல் ஒன்று இல்லை. இது பாரத ஸ்த்ரீ தர்மம் கண்டுபிடித்த ஒரு பெரிய ஸொத்து - மான ஸம்ரக்ஷண ஸொத்து.

அந்தப் 'பாயின்டு'க்காக இல்லாவிட்டால்கூட மேற்கத்திக் காரர்களும் 'இன்டியன் ஸாரி'யைப் புகழ்கிறார்கள். கலைக்கண்

என்கிறார்களே, அந்தப் பார்வையில் புடைவைக்கு ஒரு லாலித்யம் (லலிதமான தன்மை) இருப்பதாக அவர்கள் கொண்டாடிக் கொண்டு அதை ரொம்பவும் 'graceful' என்கிறார்கள். இப்படி அழகாக இருப்பதோடு கௌரவமாகவும் இருக்கிறது - dignified - என்கிறார்கள்.

அன்னிபெஸன்ட் வெள்ளைக்கார ஜாதியைச் சேர்ந்த போதிலும் புடைவைதானே கட்டிக் கொண்டிருந்தார்? அது இந்தியர்களிடம் 'பாபுலாரிடி' வாங்குவதற்காகச் செய்ததில்லை என்றும், புடைவை கட்டிக் கொள்வதில் ஸூக்ஷ்மமாக எத்தனையோ கௌரவமும் மற்ற பண்புகளும் இருக்கின்றன என்பதாலேயே தான் அப்படி உடுத்துவதாகவும் அந்த அம்மாள் ஒரு புடைவை மாஹாத்மியமே சொல்வாராம்!

இக்கால ஸ்த்ரீகள், ஆ∴பீஸ் கார்யம் முதலானவை பண்ணுவதற்கு புடைவையைவிடப் பைஜாமா-ஜிப்பா தான் ஸௌகர்யமாக இருக்கிறது, அடுப்பங்கரைக் கார்யத்துக்குங்கூட இதுவே ஸௌகர்யம் என்று வாதிக்கிறார்களாம். ஸௌகர்யத்துக்காக மானம் - கௌரவங்களை விட்டுக் கொடுக்க முடியுமா? இவர்கள் ஆ∴பீஸ் பண்ணுவது, இன்னும் அநேக ஸாஹஸ கார்யம் பண்ணுவது ஆகியவற்றை நான் ஒத்துக் கொள்ளவேயில்லை என்பது தெரிந்ததுதானென்றாலும், ஒரு பேச்சுக்கு அதை ஒத்துக்கொண்ட மாதிரியே வைத்துக் கொண்டு கேட்கிறேன்: Challenging -ஆக இருக்கிறவற்றை face பண்ணுவதில்தானே தங்கள் நவயுக spirit இருப்பதாக இவர்கள் பெருமை பேசுகிறார்கள்? அப்படி ஒரு challenge சொல்கிறேன். இவர்கள் மாதிரி படிக்காமல் கூலி வேலைக்குச் சிற்றாளாகப் போகிற கொத்து வேலைப் பெண்களையே இவர்கள் ஒரு 'சாலஞ்'ஜாக எடுத்துக் கொள்ளட்டும். அந்தப் பெண்கள் புடைவை கட்டிக் கொண்டே, அதைக் கௌரவம் போகாத அளவுக்குத் தூக்கிச் சொருகிக்கொண்டே பாய்ந்து பாய்ந்து பண்ணுகிறதை விடவா

இவர்கள் ஆஃபீஸிலோ, ஃபாக்டரியிலோ, வேறே இடத்திலோ புரட்டி விடுகிறார்கள்? அந்தக் கொத்து வேலைக்காரிக்கு உள்ள ஸாமர்த்யம் இவர்களுக்கு ஏன் இல்லாமல் போக வேண்டும்? அதே மாதிரி, இந்த சாலஞ்ஜ்க்கார ஸ்த்ரீகளுக்கு அடுப்படிக் கார்யம் புடைவை கட்டிக் கொண்டு ஒழுங்காகச் செய்ய வரவில்லை என்றால், அப்போது அவர்கள் அசடிப் பட்டம் கட்டுகிற முன் தலைமுறை அம்மா-பாட்டிகளிடம் தோற்றுப் போய்விட்டார்கள் என்றுதான் அர்த்தம்!

விதண்டாவாதமாக ஒன்று கேள்விப்பட்டேன். சொல்லவே விரஸமாக இருக்கிறது; சொல்லாமலும் இருக்க முடியவில்லை. 'புடைவை கட்டிக்கொள்கிறவர்கள் ஸரியாக மேலாக்குப் போட்டுக் கொள்ளாவிட்டால் அதுதான் ரொம்பவும் அசிங்கமாக இருக்கிறது. அதைவிட எங்கள் ஜிப்பாவே சரீரத்தை நன்றாக மூடி மறைக்கிறது' என்கிறார்களாம். இவர்களுக்கு ஒரே எதிர்க் கேள்வி, புடைவை கட்டிக் கொள்கிறவர்கள் ஏன் ஸரியாக மேலாக்குப் போட்டுக் கொள்ளாமலிருக்க வேண்டும் என்பதுதான். தப்பைத் திருத்த வழி, புடைவையை ஸரியாக, ஒழுங்காக, யுக்தமாகப் போர்த்தி உடுத்திக் கொள்வதுதானே தவிர, அதற்குப் பதில் வேறே தினுஸு ட்ரெஸ் மாற்றிக் கொள்வதில்லை.

புடைவைக்குள்ளே போட்டுக் கொள்கிற சட்டை கழுத்து வரையிலும், இடுப்பு வரையிலும் நன்றாக மூடுகிற வகையில் இருக்கவேண்டும். ஜிப்பாவில் கழுத்தை, இடுப்பை மூடியிருக்கிறது, அதே மாதிரி கையும் நன்றாக மூடியிருக்கிறது என்ற காரணம் காட்டி பழைய முறைப்படி உடுத்திக் கொள்வதை விரட்டி ஓட்டும்படிப் பண்ணக்கூடாது.

கலாசாரத்தின் தலையில் இடி

இன்றைக்கு இப்படி மூடி ஜிப்பா தைத்துக் கொள்கிறவர்களே நாளைக்கு அதில் என்ன புது மோஸ்தர் கொண்டு வருவார்களோ?

துருக்க ஸ்த்ரீகளைப் பார்த்து ஸர்தாரிணிகள் போட்டுக் கொண்ட பைஜாமா-ஜிப்பா தான் இப்போது இந்த பாரத கலாசாரத்தின் பரம கௌரவ ஸ்ருஷ்டியான புடைவையை விரட்டியோட்ட வந்திருக் கிறது. இது இதோடு நிற்குமோ? ஃபாஷன் என்றால் நூதன, நூதன மாக மாறிக் கொண்டேதானே போகும்? அப்படி, இங்கிலீஷ்கார ட்ரெஸ், நீச்சல் ட்ரெஸ் வரையில் என்னவெல்லாம் வந்துவிடுமோ, எப்படியெல்லாம் மானம் மரியாதையைக் காற்றிலே பறக்க விடுவார்களோ என்று கவலையாக, பயமாக இருக்கிறது.

நான் தர்மாபிவிருத்தி பண்ணுகிற லக்ஷணம் - முன்னேயெல்லாம் பெண்கள் கச்சம் போட்டுப் புடைவை கட்டிக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இப்போது 'அபிவிருத்தி' யடைந்து, பெண்கள் புடைவை கட்டிக் கொள்ள வேண்டும் என்று சொல்லும்படி ஆகியிருக்கிறது! இன்னமும் நான் இருந்துகொண்டு இதைவிடவும் துராசாரங்களைப் பார்க்க வேண்டி வந்து என்னவெல்லாம் சொல்லும்படி இருக்குமோ என்று இருக்கிறது.

இப்போது வயஸு வந்த பெண்களும் கல்யாணமாகிற வரையில் புடைவை கட்டாமலிருக்கிறார்களென்றால் இதோடு முடிந்து விடுமா? தீராப் பசி பிடித்த ஒரு தொத்து நோய் மாதிரியல்லவா எப்போதுமே அஸம்பாவிதப் புது நாகரிகப் போக்குகள் விஸ்தாரமாகிக் கொண்டே போகிற பழக்கம். அப்படி, போகப் போக, மத்யம வயஸு க்ருஹிணிகள், அதற்கப்புறம், வயஸான பாட்டிமார் உள்பட எல்லாரும் பைஜாமா ஜிப்பாவுக்கு மாறிவிடுவார்களோ? அப்படியானால் இந்த தேசக் கலாசாரத்தின் தலையிலேயே இடி விழுந்த மாதிரியல்லவா ஆகிவிடும்? - என்று வ்யாகுலமாக இருக்கிறது.

எல்லாச் சாராரையும் பிடிக்கும் தொற்றுநோய்

சாஸ்த்ர-ஸம்ப்ரதாயங்களுக்காக இல்லாவிட்டாலும், வேறே கொள்கை காரணமாக இரண்டு கோஷ்டிகளைச் சேர்ந்த பெண்களாவது இந்தப் புது நாகரிக ட்ரெஸ்ஸுக்கு

மாறாமலிருப்பார்கள் என்று நான் நம்பிக்கை வைத்திருந்தேன். தீவிரமாக ஹிந்து உணர்ச்சி படைத்தவர்களாகவும், அந்நியர்களின் பாணி நமக்கு வேண்டாமென்று சொல்பவர்களாகவும் ஒரு கோஷ்டி தேசத்தில் இருக்கிறதல்லவா? நம்முடைய தக்ஷிண தேசத்தை விட, வடக்கே அப்படிச் சொல்கிற கோஷ்டி நல்ல செல்வாக்கு - பாபுலாரிடிகளுடனேயே இருக்கிறது. அதைச் சேர்ந்த ஸ்த்ரீகள் அந்நிய பாணியிலான பைஜாமா ட்ரெஸ்ஸுக்கு மாறாமலிருப்பார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் நான் விசாரித்துப் பார்த்ததில் அப்படியெல்லாமில்லை; அந்தப் பெண்களையும் புது ஃபாஷன் வெள்ளம் அடித்துக்கொண்டுதான் போகிறது என்று தெரிந்தது. இன்னொரு கோஷ்டி நம் ஊரைச் சேர்ந்தது. 'வடவர் ஆதிக்கம் கூடாது; தமிழர் பண்பாட்டையே காப்பாற்ற வேண்டும்' என்கிற கோஷ்டி. அதைச் சேர்ந்த பெண்களாவது தமிழர் பண்பாட்டுக்கு பைஜாமா ஒத்து வராதது என்று நிராகரிக்க மாட்டார்களா என்று நம்பிக்கையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நம்பிக்கையும் பொய்த்துவிட்டது. இப்போது ஊர் முழுதையும் மிச்சம் மீதியில்லாமல் பீடிக்கிற ஒரு தொத்து வியாதி மாதிரி புது ட்ரெஸ் மோஸ்தரும் யௌவன வயஸிலிருக்கிற இந்த தேசத்துப் பெண்கள் எல்லோரையும் பலி வாங்குகிறது என்று தெரிகிறது. கலாசார பலி!

எதிர்த்துக் கேட்டு எடுத்துச் சொல்பவர் எவருமில்லை

நான் பிறந்த நாளாகச் சீர்திருத்தங்கள் எனப்படுகிற சாஸ்த்ர விரோத கார்யங்களும், நவயுக நாகரிகங்களும் ஒன்றையடுத்து ஒன்றாக அலை அடித்துக் கொண்டேதான் வந்திருக்கின்றன. அந்த மாறுதல் வழியிலேயே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் போனாலும், ஒரு பத்துப் பேராவது எங்கள் மாதிரி ஆசாரக் குடுக்கைகளுக்கு உடன்பாடாக இருந்தார்கள். அவர்கள் மூலம் கொஞ்சத்தில் கொஞ்சம் எதிரலையடித்து, எதிர் நீச்சல் போட முடிந்தது. 40-45 வருஷம் முந்தி ஸ்த்ரீ ஸ்வதந்த்ரம் பற்றித் தப்பான சில

கொள்கைகள் கொஞ்சம் பலமாகவே தலை தூக்கினபோது நான் எங்கள் வழிகளை ஆதரிக்கக்கூடிய பெண்டுகளைக் கொண்டே, சாஸ்த்ர வழிகளில் பெண்களைச் செலுத்துவதற்கென்று மாதர் சங்கங்கள் அமைக்கச் சொன்னேன். பல ஸ்த்ரீகள் முன்வந்து அப்படி அமைக்கவும் செய்தார்கள். இப்போதோ அப்படிப்பட்ட சூழ்நிலையையே காணோம்!

நவீனப் போக்கை எதிர்த்துப் பேசி, நல்லதை எடுத்துச் சொல்ல இப்போது யாருமே முன்வரமாட்டேன் என்கிறார்கள்.

ஸமூஹத்துறையில் கௌரவம் வாய்ந்தவர்களாகவும், ஜனங்களிடம் செல்வாக்குள்ளவர்களாகவும் இன்று இருக்கப்பட்ட ஸ்த்ரீகளில் பழைய வழிகளை விடாதவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் என்னிடம் வருபவர்களிடம், முன்னே நடந்ததைச் சொல்லி, அதே மாதிரி - அதைவிடவும் அவஸர உணர்ச்சியோடு - இப்போது சாஸ்த்ரீய தர்ம ரக்ஷணத்துக்காகப் பெண்களுக்கென்று ஸங்கங்கள் அமைத்து, அறிக்கைகள் விடுவது பற்றிச் சொல்லிப் பார்த்தேன். 'நான் சொல்வதை விடப் பெண்களாகப் பிறந்த நீங்களே உங்கள் மாதிரி ஸஹ ப்ரஜைகளுக்கும் சொல்வதுதான் கௌரவம்' என்று சொல்லிப் பார்த்தேன். ஆனால் யாரும் ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொள்ளவில்லை. கேட்டுக் கொண்டதாகத் தோன்றியவர்களும் அப்புறம் கார்ய ரூபத்தில் ஒன்றும் பண்ணவில்லை. 'அவர்கள் வீட்டுப் பெண்களே புரட்சி இனமாக இருக்கலாம். அல்லது அவர்களுக்கே வெளியிலே கொஞ்சம் கர்நாடகமாக இருந்தாலும் உள்ளுக்குள்ளே புது நாடகத்தில் பிடிப்பு இருக்கலாம். அல்லது கலி ப்ரவாஹம், தங்களால் அணை போட்டு நிறுத்தமுடியாது என்று அவர்கள் விட்டிருக்கலாம்' என்று நினைத்துக் கொண்டேன்.

இப்படி கேட்பார் - மேய்ப்பார் யாருமே இல்லாததுதான் பெரிய குறை. கேட்பார் இல்லாததோடு நிற்கவில்லை; தூபம் போடுகிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்!



அதை நினைத்தால்தான் எதிர்காலத்தில் நமது
பண்பாட்டுக்கேற்ற நாகரிக வாழ்க்கையைப் பற்றிப்
பெரிய 'கொஸ்சன் மார்க்' எழும்புகிறது!

'கலாசாரம், கலாசாரம், பண்பாடு, பண்பாடு' என்று முழக்கிக்கொண்டு இத்தனை பத்ரிகைகள் இருக்கின்றனவே, ஸ்தாபனங்கள் இருக்கின்றனவே, எதுவாவது, நம்முடைய பெரிய கலாசாரத்தின் ஒரு வேராக இருக்கிற ஆடை விஷயத்தில் இப்படியொரு அலங்கோல மாறுதல் வந்திருப்பதை ஆட்சேபித்துக் குரல் கொடுத்ததா? இல்லவேயில்லை! அதை நினைத்தால்தான் எதிர்காலத்தில் நமது பண்பாட்டுக்கேற்ற நாகரிக வாழ்க்கையைப் பற்றிப் பெரிய 'கொஸ்சன் மார்க்' எழும்புகிறது!

நாம் ஒருத்தராவது வாய் திறந்து கொட்டினால்தான் உண்டு என்பதால் கொட்டித் தீர்க்கிறேன். இதைக் கேட்பவர்கள் மற்றவர்களுக்குச் சொல்வார்களோ, மாட்டார்களோ, என்னையாவது 'டிஸ்கரேஜ்' பண்ணாவிட்டால் ஸரி என்று... இன்றைக்கு என்னமோ தோன்றிற்று... வாயை விடுகிறேன். என்னை 'டிஸ்கரேஜ்' பண்ணுவதைப் பற்றி ஏன் சொன்னேனென்றால் அப்படியும் இரண்டொருத்தர் மறைமுகமாகப் பண்ணியிருப்பதால்தான்.

ஜனங்கள் எல்லாரிடமும் நல்ல பேர் வாங்கும் clever சாமியாராக நான் இருக்கிறேனல்லவா? அதனால் புதுமைக் கருத்து, புரட்சிக் கருத்து உடையவர்களும் என்னிடம் வருகிறார்கள். நவநாகரிக ஸ்த்ரீமாரும் வருகிறார்கள். அப்படியிருக்கும்போது நான் ஆக்ஷேபக் குரல் எழுப்பாமல் அவர்களிடமெல்லாம் நல்ல பேரோடேயே போய்ச் சேரவேண்டும்; 'ஹிஸ் ஹோலினெஸ் என்று நாமும் நம்மைக் குறைத்துக்கொண்டு நமஸ்காரம் பண்ணினால் அந்த ரெஸ்பெக்டை அந்தக் கிழம் காப்பாற்றிக் கொண்டு சும்மாயிருக்க வேண்டியதுதானே? அதை விட்டு நாம் நம் இஷ்டப்படி ட்ரெஸ் போட்டுக் கொள்வது மாதிரியான ஸொந்த விஷயங்களில் கூட ஏன் 'அட்வைஸ்' பண்ண வேண்டும்?' என்று அவர்கள் கேட்பதற்கு நான் இடம் கொடுக்க வேண்டாமே - என்ற நல்லெண்ணத்திலேயே அந்த இரண்டொருத்தர் என்னை

'டிஸ்கரேஜ்' பண்ணினது - மறைமுகமாகத்தான். துணிச்சலாகப் புரட்சி என்று இறங்கியவர்களிடம் இந்த பலஹீனக் கிழவன் வாயை விட்டுவிட்டு வீண் வம்பில் மாட்டிக் கொண்டு விடப் போகிறேனே என்ற் கவலை அவர்களுக்கு.

என் விஷயம் இருக்கட்டும். வஸ்த்ர விஷயத்துக்கு வருகிறேன். ஆடை பாதி, ஆள் பாதி என்றே பழமொழி இருப்பதால் அது ஜன ஸமூஹத்துக்கு இன்றியமையாத ஒரு விஷயமாகும். அதைப் பற்றியதாக என் மனஸிலே தோன்றிய இன்னொன்றையும் சொல்லாமல் விட வேண்டாம் என்பதால் சொல்கிறேன்.

அர்த்தமற்ற வாதங்கள்

நாங்கள் பழைய வழிமுறைகளை விடவேகூடாது என்றுதானே சொல்கிறோம்? இதையே ஸ்த்ரீகளின் வஸ்த்ரம் பற்றின விஷயத்தில் எங்களுக்கு பாதகமாக எடுத்துக்காட்டி சில 'ப்ருஹஸ்பதி'கள் வாதம் செய்கிறார்கள். அவர்கள் வாதம் என்னவென்றால், ரொம்பவும் பழைய வழிமுறைப்படி ஸ்த்ரீகளுக்கு உத்தரீயம் என்கிற மேலாடையே கிடையாதாம்! பாதத்திலிருந்து இடுப்போடு அவர்களுடைய வஸ்த்ர தாரணம் முடிந்து விட்டது என்கிறார்கள். பழங்காலத்துச் சில்ப-சித்ரங்களைத் தங்கள் கட்சிக்கு ஆதரவாகக் காட்டுகிறார்கள். ஸ்த்ரீகள் தங்கள் சரீரத்தில் களப சந்தன குங்குமாதிகள் பூசிக் கொண்டதாகப் பழங்காலப் புஸ்தகங்களில் வருவதையும் 'எவிடென்'ஸாகக் கொண்டு வருகிறார்கள்.

இது சுத்தப் பேத்தல்.

அறிவாளிகளின் அபிப்பிராயப்படி மொஹஞ்ஜதாரோ சிற்பங்கள்தான் ரொம்ப ரொம்பப் புராதனமானவை. அதிலே தாடிக்கார சில்பம் ஒன்று உண்டு. அதில் அந்த ஆண்பிள்ளையே பூ, பூவாகப் போட்ட ஒரு வஸ்திரத்தை நன்றாக மேலாக்கு மாதிரிப் போட்டுக் கொண்டிருப்பதாக இருக்கும். இப்படி இங்கே சில்பம் என்றால், மொஹஞ்ஜதாரோ காலத்திலேயே ஹரப்பா என்ற

இடத்தைச் சேர்ந்த ஒரு ஆண் பிள்ளையின் சிலை நிர்வஸ்திர்மாகப் பிறந்த மேனிக்கு இருக்கிறது. இப்படி இரண்டு இருப்பதைப் பார்த்தால் முறையாகச் சிந்திக்கிற எவருக்கும் என்ன தெரியும்? அந்தக் காலத்தில் வஸ்திரமே உடுத்தாமலிருந்தார்கள் என்றா தோன்றும்? 'நிச்சயமாக வஸ்திரம் உடுத்திக் கொள்ளத்தான் செய்தார்கள்; புருஷர்கள் கூட கீழ்ப் பாகத்துக்கு மட்டுமில்லாமல், மேல் பாதிக்கு உத்தரீயமும் போட்டுக் கொண்டார்கள். அதைத்தான் மொஹஞ்ஜதாரோ சில்பம் 'ப்ரூவ்' பண்ணுகிறது. அது நடைமுறை - Realism என்பதன்படி சில்பி யதார்த்தத்தைக் காட்டிப் பண்ணியது. ஆனாலும் சில்பிகள், கவிகள் முதலான கலைத்துறைக்காரர்கள் 'ரியலி'ஸத்தோடு மட்டும் நின்று விடுவதில்லை. அவர்களுடைய மனோதர்மத்துக்குப் பூர்த்தியாக அவர்கள் 'ரியலி'ஸத்துக்கு மாறான ஒரு 'ட்ரெடிஷ'னையும் - கலை மரபு என்பதையும் - பின்பற்றுவார்கள். அந்த மரபுப்படிதான் அந்த இன்னொரு ஹரப்பா சில்பி நிர்வஸ்திர சில்பத்தில் பண்ணியிருக்கிறான்' என்றிப்படித்தான் தெளிவாக முறையாகச் சிந்தனை பண்ணிப் பார்க்கிற எவருக்கும் தெரியும்.

புருஷனுக்கே உத்தரீயம் இருந்தது என்றால் ஸ்த்ரீயைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! ஆனால் சில்பிகளும் சைத்ரிகர்களும் இங்கே தங்களுடைய ட்ரெடிஷன் தருகிற ஸ்வதந்திரத்தைச் சற்று அதிகமாகவே காட்டித்தான் அவர்களை உத்தரீயமில்லாமலும் நிறையக் காட்டியிருக்கிறார்கள். கலா லோகம் என்பதில் ச்ருங்கார ரஸமே ப்ரதானமாயிருப்பதும் இம்மாதிரி நிறைய இருப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

'நிறைய'த்தானேயொழிய 'முழுக்கவும்' இல்லை. புராதனமான கந்தார சில்பங்களிலே ஸ்த்ரீகளுக்கு நன்றாக மேலாடை போட்டிருப்பதோடு, அந்தப் புடைவைக்குள் அவர்கள் சட்டையும் போட்டுக் கொண்டிருப்பதாக இருக்கும். சட்டையில் கை ஏறக்குறைய மணிக்கட்டு வரை நீண்டிருக்கும்.

யதார்த்தம் என்கிற நடைமுறை வேறே, ட்ரெடிஷன் - கலா ஸம்ப்ரதாயம் - மரபு என்பது வேறே; பின்னதற்கே ஜாஸ்தி இடம் கொடுத்துத்தான் கலா ஸ்ருஷ்டிகள் (கலைப் படைப்புகள்) இருக்கும். ஆனாலும் அதற்கு மாறாக அது எங்கே காட்டுகிறதோ, அதற்குத்தான் நடைமுறை என்பதன் 'வெய்ட்' உண்டு.

இந்த விஷயமாக நிரம்ப ரிஸர்ச் செய்த ஒருத்தர் சொன்னார்:

"அநேக ஸ்த்ரீ சில்பங்களில் மேல் பார்வைக்கு மேலாடை இல்லாத மாதிரித்தான் தெரியும். ஆனால் கூர்ந்து கவனித்தால் எங்கே யாவது ஒரு இடத்தில் உத்தரீய மடிப்பு அல்லது பார்டர் மாதிரி ஏதாவதொன்று தெரியும்" என்றார். "இதற்குக் 'கான்வெர்'ஸாக நன்றாக உத்தரீய தாரணம் செய்திருக்கிற சில்பங்களில்கூட, அந்த உத்தரீயத்துக்குள்ளேயே இயற்கையாக அமைந்த சரீர அமைப்பை யும் காட்டியிருக்கும்" என்றும் சொன்னார். "சரித்ரத்தில் ரொம்பவும் பின்னாடி வருகிற நாயக் ராஜாக்களின் ராணிமார்கள் நிச்சயமாக நன்றாக உடம்பை மறைத்து மேலாக்குப் போட்டுக் கொண்டிருந்தவர்கள்தான். அவர்களுடைய சிலைகளிலும் அப்படியே பண்ணியிருந்தாலும், உள்ளே சரீர அமைப்பையும் காட்டித்தான் இருக்கிறது. அதனால் சில்பத்தில் இருப்பதை வைத்து 'ஸ்த்ரீகளுக்கு உத்தரீய தாரணம் இல்லை' என்று முடிவு கட்டுவது கொஞ்சங்கூட ஸரியில்லை" என்று அவர் சொன்னார்.

இலக்கண நடை தப்பாமல் எழுதுகிற கதைகளில் பார்த்தால் கதாபாத்ரங்கள் பேசுவதே பேச்சு மொழியில் இல்லாமல் ரொம்பவும் இலக்கணமாகத்தான் இருக்கும். ப்ரத்யக்ஷத்தில் யாராவது அப்பிடிப் பேசினால் நமக்குச் சிரிப்புத்தான் வரும். ஆனாலும் இலக்கியம் என்பது அப்படியே ப்ரத்யக்ஷத்தைச் சொல்ல வேண்டியதில்லை என்பதால் அதை ஒத்துக் கொள்கிறோம். அதற்காக அதுவேதான் பேச்சு மொழி, reality என்பார்களா? சில்ப ஸ்த்ரீகளை ப்ரத்யக்ஷத்தில் வாழ்ந்த ஸ்த்ரீகளுடன் உழப்பிக் கொள்வது இந்த மாதிரிதான்.

இதைப் புரிந்துகொண்டால் நான் முன்னே சொன்ன அந்த அபத்த வாதம் எழும்பாது.

புஸ்தகங்களில் ஸ்த்ரீகள் சரீரத்தில் சந்தன குங்குமாதிகள் பூசிக் கொண்டிருந்ததாக இருப்பதும் இதேமாதிரி காவ்ய 'ட்ரெடிஷன்' - இலக்கிய மரபு - என்பதன்படிதானா என்றால், அப்படி முழுக்கவும் தள்ள முடியவில்லை. ஸ்த்ரீகள் அப்படி இருந்ததற்குப் புஸ்தகங்களில் நிறையவே 'ரெஃபரென்ஸ்' வருகிறது. ஆனால் முக்யமான விஷயம், குல ஸ்த்ரீகளானால் அவர்கள் அப்படி இருந்தது சயனக்ருஹத்தில் மட்டும்தான். பாதிவ்ரத்யம் (கற்பு) போதாதவர்களும் விலை மகளிர் எனப்படுகிறவர்களில் சில பேரும் பொது ஸ்தலத்திலும் கொஞ்சம் அப்படி ஸஞ்சரித்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

பாகவதத்தில் கோபிகா ஸ்த்ரீகளையும், ருக்மிணியையும் பற்றி வருகிறதிலிருந்து அவர்கள் களப குங்குமாதிகள் பூசிக் கொண்டிருந்த போதிலும் அதற்கு மேலேயே உத்தரீயமும் போர்த்திக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

ராவணன் தூக்கிக் கொண்டு போகிறபோது ஸீதை தன்னுடைய உத்தரீயத்தின் ஒரு பாகத்தைக் கிழித்து தன் நகைகளைக் கட்டி, ராமருக்கு அதுவாவது தடயம் காட்டட்டுமெனக் கிஷ்கிந்தையில் போட்டாள் என்று ராமாயணத்தில் இருக்கிறது. இதைப்பற்றிக் கிஷ்கிந்தா காண்டத்தில் ஸுக்ரீவன் சொல்வதும், ஸுந்தர காண்டத்தில் ஆஞ்ஜநேயர் அசோகவனத்தில் தனக்குத் தானே சொல்லிக்கொள்வதும் உத்தரீயம் இருந்ததை நிச்சயப் படுத்துகின்றன.

அந்தரீய-உத்தரீயங்கள் எனப்படும் வேஷ்டி, அங்கவஸ்த்ரங்கள் ஆகிய இரண்டு மட்டுமின்றி த்ருதீய வஸ்த்ரம் என்பதாக ஒரு மூன்றாவது வஸ்த்ரமும் ஆண்களே வைத்துக் கொள்ளவேண்டுமென்று சாஸ்த்ரம். வேதத்தின் வாக்குதான் 'அதாரிடி'க்கெல்லாம் மேலான 'அதாரிடி'. அதோடு, அதுதான்

ஆதிக்கெல்லாம் ஆதியான புஸ்தகம். நம்முடைய ரொம்பவும் தொன்மைக்கால வழக்கு அதிலிருந்துதான் தெரிகிறது. அதன்படி ஆண்-பெண் இரு பாலரும் 'வாஸாந்தரம்' என்று இடுப்புக்குக் கீழே ஒரு வஸ்த்ரமும், 'பரிதானம்' என்று இடுப்புக்கு மேலே ஒரு வஸ்த்ரமும் தரிக்க வேண்டும். ஸ்த்ரீகள் விஷயத்தில் இந்த இரண்டும் ஒன்று சேர்ந்தே பிற்பாடு புடைவையாயிற்று.

ஸூர்ய பகவானுடைய குமாரியான ஸூர்யா என்பவளை ஸோமன் என்கிற தேவதை கல்யாணம் பண்ணிக் கொள்வதாக ரிக்வேதத்தின் கடைசி அஷ்டகத்தில் வருகிறது. அந்த மந்த்ரங் களைத்தான் இப்போதும் விவாஹங்களில் சொல்வதாக நடந்து வருகிறது. அதிலே அந்த ஸூர்யா ஆசாஸனம், விசஸனம், அதிவிகர்த் தனம் என்று மூன்று வஸ்திரங்கள் தரித்துக் கொண்டதாக இருக்கிறது.

இதையெல்லாம் கவனிக்காமல்தான் பழைய காலத்தில் ஸ்த்ரீகளுக்கு மேலாடை இல்லை என்று அசட்டுத்தனமாகச் சொல்வது. ஸ்த்ரீ கௌரவத்தையும் மானத்தையும் பவித்ரத்தையும் ப்ராணனுக்கு மேலாக மதித்துக் காப்பாற்றிய இந்த தேசத்தில் அப்படி இருந்திருக்கவே முடியாது. மலையாள தேசம் ஒரு விதிவிலக்கு. காரணம், அதை பாரத தேசத்தில் சேராத தனி தேசமாகவே ஆதியில் பரசுராமர் அமைத்தார். அப்போது பாரதத்தில் இருந்தவர்களைத்தான் அவர் அங்கே குடியேற்றினார். அப்படிக் குடியேறிவர்கள் திரும்பவும் mainland-க்குப் போகாமல் தடுக்க வழி, அவர்களுடைய பழக்க வழக்கங்களை வேறே மாதிரி மாற்றி விடுவதுதான்; அப்படிப் பண்ணிவிட்டால் mainland - காரர்கள் அவர்களை ம்லேச்சர்களாகக் கருதி, தங்கள் ஸமூஹத்தில் சேர்த்துக் கொள்ளாமல் பஹிஷ்காரம் பண்ணி விடுவார்கள் என்று நினைத்தார். அப்படியே நம்முடைய பாரத தேசத்தில் நடக்கும் சாஸ்த்ர வழக்குகளிலும் நடைமுறைகளிலும் அநேக மாறுபாடுகளை மலையாள தேசத்துக்காரர்களுக்கு ஏற்படுத்தினார். அவற்றில் ஒன்றுதான் ஸ்த்ரீகளின் மேலாடை பற்றியது.

ஆத்ம ச்ரேயஸுக்கு ஹானி

பைஜாமா-ஜிப்பா போட்டுக் கொள்கிற ஸ்த்ரீகள் மேலுக்கு அங்க வஸ்த்ரம் மாதிரி ஏதோ ஒன்று பேருக்குப் போட்டுக் கொள்வதாகத் தெரிகிறது. ஸ்த்ரீத்வம் என்று இருப்பதன் மான, கௌரவ, வெட்கங்களுக்கு இந்த மேலாடை போதவே போதாது. யதோக்தமாகப் புடைவை உடுத்திக்கொண்டு அதன் மேலாக்குப் போர்வையிலிருப்பதுதான் அவர்களுக்கு லக்ஷணம், ரக்ஷணம் எல்லாம். புருஷர்களின் தப்பான பார்வையைத் தூண்டிக் கொடுக்கிற எந்த ஆடை அலங்காரமும் அவலக்ஷணந்தான். பெண்கள் கற்பு நெறியை நெருப்பு மாதிரிக் காப்பாற்றி வந்து அதையே தேசாசாரத்தின் ஜீவரத்தமாகப் பண்ணிக் கொண்டிருக்கிற இந்த பாரத வர்ஷத்திலே அதற்கு ஊறு விளைவிக்கும்படி பண்ணினால் நம்முடைய மஹோன்னத நாகரிகமே இடிந்து விழுகிற மாதிரிதான்!

இன்றைக்கு ஜிப்பாவுக்கு மேலே பேருக்கு ஒரு வஸ்திரம் என்பது எதிர்காலத்தில் இல்லாமலே போகலாம். ஏனென்றால் மானாவமானங்களை மதிக்காமல் ஸௌகர்ய - அஸௌகர் யங்களைப் பார்த்தல்லவா இப்போது உடுத்தத் தலைப்பட் டிருக்கிறார்கள்? ஜிப்பாவுக்கு மேலே அங்கவஸ்த்ரம் மாதிரி ஒன்று போட்டுக்கொள்வது அஸௌகர்யமாயிருக்கிறது என்று தோன்றிவிட்டால்?

ரொம்பவும் அருவருப்பான இன்னொரு விஷயம் ஸ்த்ரீகளுக்கு 'நைட்-கௌன்' பழக்கமும் வந்திருக்கிறது என்பதாகும். குருவை மிஞ்சின சிஷ்யனாக இதில் வெள்ளைக்காரர்களையும் மிஞ்சி விட்டிருக்கிறார்களென்று தெரிகிறது. வெள்ளைக்காரர்களில் புருஷர்கள்கூட 'பெட்-ரூமில்' மட்டுந்தான் 'நைட்-கௌனில்' இருப்பது; அந்த ரூமை விட்டு அகத்துக்குள்ளேயே வெளியில் வந்தால்கூட அப்படியே வராமல் ஸாதா ட்ரெஸ்ஸுக்கு 'சேஞ்ஜ்' பண்ணிக் கொண்டுதான் வருவார்கள் என்று

கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நம் தேசத்துப் பெண்களோ 'நைட்-கௌனி'லேயே 'நைட்' போன அப்புறமும் தெருவில்கூட சுற்றுகிறார்கள் என்று தெரிகிறது. ரொம்பவும் தலைகுனிவான விஷயம்.

இப்படியெல்லாம் செய்வது ஸ்த்ரீகளின் ஆத்ம ச்ரேயஸை அடியோடு கெடுக்கும். தேசத்திலும் அமங்களங்களை, பல தினுஸான பீடைகளை வ்ருத்தி பண்ணும்.

கேச விஷயம்

ரொம்பவும் அமங்களமாக இன்னொன்று கேள்விப்படுகிறேன். த்ரௌபதியை து:சாஸனன் மானபங்கப்படுத்தி அதன் விளைவாக கௌரவர்கள் நூறு பேரும் செத்து, கௌரவ-பாண்டவ ஸேனைகள் 18 அக்ஷௌஹிணி என்று லக்ஷக்கணக்கில் மாண்டு போக நேரிட்ட உத்பாதக் கதை நமக்குத் தெரியும். அந்த து:சாஸனன் பண்ணின துஷ்க்ருத்யம் (தீய செயல்) இரண்டு. ஒன்று, த்ரௌபதியின் மேலாக்கைப் பறித்தது. இரண்டாவது, அவளைத் தலைவிரி கோலமாக நிறுத்தி வைத்தது. பாபிஷ்டனான ஒரு சத்ரு அன்று அந்த உத்தமியின் மனஸைப் பொங்க வைத்து வம்ச நாசச் சாபத்தை வாங்கிக் கட்டிக் கொள்வதற்காகப் பண்ணின அந்த இரண்டு துஷ்க்ருத்யத்தையும் நம் காலப் புது யுகப் பெண்கள் தாங்களாகவே தங்களுக்கு மனஸாரப் பண்ணிக் கொள்வதாகக் கேள்விப்படுகிறேன். மேலாக்கைத் தள்ளியிருக்கிற அவர்கள், கேசத்தைப் பின்னாமலும், முடியாமலும் அப்படியே விட்டு விடுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

'இவ்வளவு கேட்டது போதும். இதோடேயே காது அடைத்துப் போய்விட்டால் நல்லது; வாயும் அடைத்துவிட்டால் நல்லது' என்று தோன்றிற்று. Last straw to break the camel's back*

---

* (எவ்வளவோ சுமை ஏற்றியும் தாங்குகிற) ஒட்டகத்தினாலும் (அதற்கு மேல் தாங்க முடியாமல்) முதுகை முறிக்கும் வைக்கோல்

என்பார்களே, அப்படியிருந்தது இந்த ஸமாசாரம். Straw இல்லை; பாறாங்கல்லே!

அவிழ்த்துப் போட்ட கேசம் அத்தனை அமங்களமானது

குடுமி, கொண்டை, பின்னல் என்றிப்படிக் கேசத்தை விரிக்காமல் ஒரு கட்டுக்குள் வைத்திருந்தால்தான் மங்களம். ஸ்த்ரீகள்-புருஷர்கள் யாரானாலும் ப்ரேத கார்யத்தில்தான் கேசத்தை அவிழ்த்துவிடுவது. மற்ற சமயங்களிலும் அப்படியிருந்தால் அதைப் போல ஒரு க்ஷாமம் கிடையாது. எப்போதும் அப்படி என்றால் லோகத்தில் எப்போதுமே ப்ரேதம், ஆவி சூழ்ந்திருக்கிற மாதிரியான நிலவரம்தான் இருக்கும். மனஸின் அடக்கம், கட்டுப்பாடு என்பதில்தானே உத்தமமான வாழ்க்கையே இருக்கிறது? அதற்கு வெளிச்சின்னமாகத்தான், அடங்காமல் பறக்கிற கேசத்தை ஸ்த்ரீ-புருஷர் இருவருமே முடிந்து கொண்டு அதனாலேயே துர்மங்கள சக்திகள் சேராமலும் ரக்ஷித்தார்கள்.

கேசத்தின் ஒவ்வொரு இழையையும் அப்படியே விரித்து விட்டு விட்டால் துஷ்ட சக்திகளைப் பிடித்து இழுத்து வருகிற ஒவ்வொரு 'ஏரியல்' மாதிரி. அதனால்தான் அதை அப்படி விடாமலே முடிவது; அல்லது பின்னுவது. அடியிலிருந்து நுனிவரை பின்னி, நுனியில்கூட ஒரு பிச்சாளமும் வெளியே பார்க்க இல்லாமல் நாரோ, குஞ்ஜலமோ வைத்துத் தற்காப்புப் பண்ணுவார்கள். பின்னலையே கொண்டையாகப் பிச்சோடா என்றும் முடிந்து போட்டுக் கொள்வார்கள்.

நம் மாதிரி 'லோல்' படாமல் பாரமார்த்திகமாகப் போன யோகஸித்தர்கள் விஷயம் வேறே. அவர்கள் நீண்ட ஜடையை அப்படியே தொங்க விட்டுக் கொண்டாலும் பீடைகள் நெருங்காது. அவர்களுடைய அவிழ்த்த கேசமும் திவ்ய சக்திகளையே க்ரஹித்துக் கொடுக்கும். மஹான்களான ரிஷிகளும் 'ஜடாமுடி'



'இவ்வளவு கேட்டது போதும்.
இதோடேயே காது அடைத்துப்
போய்விட்டால் நல்லது;
வாயும் அடைத்துவிட்டால் நல்லது'
என்று தோன்றிற்று.

என்றே சொல்கிற மாதிரி ஜடையைத் தூக்கிக் கட்டி நன்றாக முடிந்து கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்.

பொதுவாக, கேசத்தை வளர்ப்பது சக்திகளைச் சேகரித்துக் கொள்பவர்களுக்கு ஆனதுதான். பைபிளில் கூட ஸாம்ஸன் என்கிறவனின் சக்தி அவனுடைய கேசத்திலேயே இருந்ததாகக் கதை வருகிறது. மஹான்களிடம் அதீத சக்தி சேர்ந்தாலும் அது நல்லதற்கே ப்ரயோஜனமாகும். நம்மிடம் சக்தி ஒரு அளவுக்கு மேல் சேர்வது ஆபத்துதான். க்ருஹஸ்தரானால் அப்படி சக்தியைச் சேர்த்துத் தருகிற கேசத்தை நன்றாகக் கட்டி முடிந்து அடக்க வேண்டும். சக்திகளைத் தள்ளி சாந்தத்திலேயே ஸந்நியாஸி போகவேண்டுமென்பதால் தான் அவன் கேச விஸர்ஜனம் பண்ணி மொட்டையடித்துக் கொண்டது. வபனம் என்று அப்படி 'பீரியாடிக'லாக அவன் சாஸ்த்ரம் சொல்கிறபடி நாள் பார்த்து கேசவிஸர்ஜனம் செய்வதற்கு முன் கேசம் வளரத்தானே செய்யும்? அது சக்தியை இழுத்துக் கொள்ளாமலிருப்பதற்காகவும்தான் அவன் முட்டாக்குப் போட்டுக் கொள்வது. முண்டனம் செய்த மண்டையை வெளியிலே காட்டக்கூடாது என்பதும் ஒரு காரணம். தபோசக்தியை க்ரஹித்து தாரணம் பண்ணும்படியாக நேரும் தீக்ஷாகாலம் முதலியவற்றில் க்ஷௌரம் (க்ஷவரம்) கூடாது என்று சாஸ்த்ரம் கூறியிருக்கிறது. அதே சாஸ்த்ரம் அந்தக் காலம் ஆனவுடன் க்ஷௌரம் செய்து கொள்வதையும் ஒரு முக்யமான ஸம்ஸ்காரமாகவே சொல்லியிருக்கிறது.

மொத்தத்தில் விஷயம், நம்மைப் போன்ற ஸாமான்யப் பட்டவர்கள் கேசத்தை அவிழ்த்துப் போட்டுக் கொண்டிருந்தால் அது கெட்ட சக்திகளை, பீடைகளையே ஆகர்ஷிக்கும் என்பதுதான்.

துர்மாந்த்ரிகம் பண்ணும்போது, நாசகரமான ஆபிசாரம் செய்வ தென்றால், அப்போது அதற்கான யந்த்ரத்தில் ஒருவருடைய நகத்தை வைத்தும், கேசத்தைச் சுற்றியுந்தான் பூமியிலே புதைப்

பார்கள். இதிலிருந்தே கேசம் என்று ஸர்வ ஸாதாரணமாக இருப் பதை அதற்கேற்ற முறையில் ஜாக்ரதையாக ரக்ஷிக்காவிட்டால் எத்தனை ஆபத்து, அனர்த்தம் என்று தெரிந்து கொள்ளலாம்.

கேசத்தில் இப்படி ஆபத்துக்கு இடமிருக்கிறது என்பதால் அதை வெட்டிக் குறைத்து புருஷர்களானால் 'க்ராப்' வைத்துக் கொள்வது, ஸ்த்ரீகளானால் 'பாப்' வைத்துக் கொள்வது என்பதும் சுத்தத் தப்பு. இப்படிப்பட்ட எல்லா விஷயங்களிலும் சாஸ்த்ரம்தான் ப்ரமாணம். எது, எவருக்கு, எந்த அளவுக்கு என்று அது நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறபடிதான் செய்ய வேண்டும். புருஷர்களானால் க்ருஹஸ்தரும் ப்ரம்மசாரியும் கேசத்தில் ஒரு பாகத்தை மட்டும் க்ஷௌரம் செய்துகொண்டு மற்றதை 'சிகை' என்ற குடுமியாக முடிந்து கொள்ள வேண்டும். ஸந்நியாஸி முழு மொட்டை. ஸ்த்ரீகளில் ஸந்நியாஸியின் உசந்த ஸ்தானத்திலேயே ஞான-வைராக்யாதிகளுக்கு இருப்பிடமாக வைக்கப்பட்ட விதந்துக்களுக்கும் (விதவைகளுக்கும்) அப்படியே பூர்ண கேச விஸர்ஜனம். இங்கேயும் சாஸ்த்ரமே அங்கீகரிக்கிற குலாசாரத்தின்படி அந்தக் குலங்களைச் சேர்ந்தவர்கள் விஸர்ஜனம் செய்யாமலும் இருக்கலாம். விதந்துக்கள் விஷயம் இப்படி இரண்டு விதமாயிருந்தாலும், ஸ்த்ரீகளில் பாக்கி, அதிகம் பேராக இருக்கிற கன்னிகைகளும் ஸுமங்கலிகளும் 'பாப்' செய்து கொள்வது மாதிரியாகக் கேசத்தை வெட்டிக் கொள்கிற எந்த ஃபாஷனையும் ஸ்வப்னத்திலேகூட நினைக்கக்கூடாது. ஸ்த்ரீகள் விஷயத்தில் விரித்த கேசம் எத்தனை அலக்ஷ்மியோ (மூதேவித்தனமோ) அத்தனை அலக்ஷ்மி கேசத்தைக் கொஞ்சமோ நஞ்சமோ வெட்டிக் கொள்வதும். இதனாலெல்லாம் ஊரிலும் க்ஷாமம் ஜாஸ்தியாகும்.

திலக தாரணம்

அலக்ஷ்மீகரமானதற்கெல்லாம் பூர்ணகும்பம் வைத்துக் கூப்பிடுவதாக இப்போது பல நடந்து வருவதில் இன்னொன்று,

பெண்கள் முறையாகத் திலக தாரணம் பண்ணிக் கொள்ளாமலிருப்பது. கன்யாக் குழந்தைகளுக்கும் ஸுமங்கலிகளுக்கும் திலகம் இட்டுக் கொள்வதை அத்யாவச்யமான அலங்காரமாக நம் ஆசாரத்தில் விதித்திருக்கிறது. அது முகத்துக்கே ஒரு சோபையைக் கொடுப்பதோடு சுபமான சக்திகளை வரவழைத்துத் தருவது. 'ப்ருகுடி' என்ற புருவ மத்தியில் யோக சாஸ்த்ர சக்ரங்களில் ஒன்று இருக்கிறது. சித்தத்தை ஒருமுகப்படுத்தி 'கான்ஸென்ட்ரேட்' பண்ணுவதற்கு அந்த இடத்திலேதான் நம்முடைய த்யான லக்ஷ்யத்தை வைத்துப் பார்ப்பார்கள். 'ஸரியாக அந்த இடத்தில் திலகம் இட்டுக் கொள்வது நம்மிடமுள்ள நல்ல சக்திகள் வ்ரயமாகாமல் மூடி போட்டுக் காப்பாற்றுகிறது; energy band-ஐ protect பண்ணுகிறது' என்று இந்த நாள் அறிவாளிகளும் சொல்கிறார்கள்.

நல்ல மஞ்சள் குங்குமந்தான் நெற்றிக்கு இட்டுக் கொள்வதற்கானது. ஸுமங்கலிகள் புருவங்களுக்கு மத்தியில் இட்டுக் கொள்வதோடு, அதைவிட முக்யமாக வகிட்டிலும் இட்டுக்கொள்ளவேண்டும். அதுவே பரம ஸௌபாக்யம். ஸுமங்கலிகளின் வகிடு மஹாலக்ஷ்மியின் வாஸ ஸ்தானங்களில் ஒன்று. அம்பாளே தன்னுடைய வகிட்டில் செக்கச் செவேலென்று ஸூர்யோதய ரேகை மாதிரிக் குங்குமம் இட்டுக்கொண்டிருந்ததை ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் பாடியிருக்கிறார்.

கன்யாக் குழந்தைகள் சாந்தும் இட்டுக் கொள்ளலாம். அகத்திலேயே அரிசியைக் கருக்கிப் பண்ணிய கருப்புச் சாந்து.

கடையிலே கலர் கலராக விற்கிற பொட்டுக்களை வாங்கி ஒட்டிக்கொள்வது அடியோடு தப்பு. அந்தப் பொட்டை சர்மத்தோடு ஒட்டச் செய்கிற கெமிகலோ, எதுவோ ஒன்று அநாசாரமானதாகவே இருக்கும். அதனால் நாளடைவில் சர்மவியாதி ஏதாவது உண்டானாலும் உண்டாகலாம். ஜெலாடினாக அது இருக்குமானால் அதில் மாட்டுக் கொழுப்புக்

கூட இருக்கக்கூடும். இப்படி இருந்தால் பரம மங்களமான திலக தாரணம் என்பதே பசுவதைக்கு உடந்தையாக இருக்கிற மஹா பாபம் வரை கொண்டு நிறுத்துவதாக ஆகிவிடும்.

ஸ்த்ரீத்வம் பழுப்பதற்கேற்ற வெளித்தோற்றம்

இன்னவென்று define பண்ண முடியாமல் மங்களம், லக்ஷ்மீகரம் என்பதாக ஒன்று மனஸை ஒருவித அழகினால் பரிசுத்தப்படுத்தி, ஸந்தோஷிப்பிப்பதாக இருக்கிறது. கன்னிகைகளும் ஸுமங்கலிகளும் அதைப் பரப்பவே ஏற்பட்டவர்கள். வஸ்திரம், தலைப்பின்னல், கொண்டை, திலகம் எல்லாம் அதை வளர்த்துக் கொடுப்பவையாகவே நம் முன்னோர்களால் உருவாக்கப்படிருக்கிறது.

ஆடை-ஆபரணம் என்று சேர்த்துச் சொல்வது. ஆபரணங்களும் ஸ்த்ரீத்வத்துக்கு அவசியமான லக்ஷ்மீகரத்தை உண்டாக்குகிறவை. அதற்காக வாரிப் போட்டுக் கொள்ளச் சொல்லவில்லை. மங்களம் என்பதற்காக எளிய வாழ்க்கை என்ற பெரிய தத்வத்தை விட்டுவிடச் சொல்லவேயில்லை. ஏகமாக, பல தினுஸு நகைகள் போட்டுக்கொள்வது இல்லாதவர்களுக்கும் ஆசையைத் தூண்டி மனஸைக் கெடுக்கும்; கடன்பட வைக்கும். அதற்காக, எளிமையாயிருக்கிறோம், 'ஸிம்பிள்' என்று சொல்லிக்கொண்டு ஸுமங்கலிகளும், கன்யாக் குழந்தைகளும் காது, மூக்கு, கழுத்து, கை மூளியாக நிற்கக் கூடாது. நாகரிக வாழ்க்கை என்ற பெயரில் மனஸை எவ்வளவோ 'காம்ப்ளெக்'ஸாகப் பண்ணிக் கொண்டுவிட்டு வெளியிலே மட்டும் 'ஸிம்பிள்' என்று இருப்பதில் என்ன அர்த்தம்?

காலத்தின் விபரீதம், திலகம், நகை ஆகியன யாருக்கு வேண்டும், யாருக்கு வேண்டாமென்று சாஸ்த்ரத்தில் இருக்கிறதோ, அதற்கு நேர்மாறாகப் பண்ணுவதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது!



மங்களம், லக்ஷ்மீகரம் என்பதாக ஒன்று மனஸை ஒருவித அழகினால் பரிசுத்தப்படுத்தி, ஸந்தோஷிப்பிப்பதாக இருக்கிறது. கன்னிகைகளும் ஸுமங்கலிகளும் அதைப் பரப்பவே ஏற்பட்டவர்கள். வஸ்திரம், தலைப்பின்னல், கொண்டை, திலகம் எல்லாம் அதை வளர்த்துக் கொடுப்பவையாகவே நம் முன்னோர்களால் உருவாக்கப்படிருக்கிறது.

வெளியடையாளங்கள், புறச்சின்னங்கள் ஆகியவையும் உள்மனப்பான்மையும் ஒன்றோடொன்று ஸம்பந்தப் பட்டிருப்பதால்தான் இப்படிப்பட்ட விஷயங்களை இவ்வளவு தூரம் சொல்வது. ஸத்ரீத்வம் என்கிறது உள்ளே நன்றாகப் பழுப்பதற்கு அநுகூலமானதாகவே அவர்களுக்கு வெளித் தோற்றத்திலும் இப்படியிப்படி இருக்கவேண்டும் என்று ஆசாரவிதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

அமர நிலைக்கு உய்விக்கும் அடக்கம்: பதியிடம் சரணாகதி

அந்த ஸ்த்ரீ தர்மம் என்பது முக்யமாக அடக்கத்தில்தான் இருக்கிறது என்பதுதான் திரும்பத் திரும்ப நினைவு படுத்திக்கொள்ள வேண்டிய விஷயம்; கடைப்பிடிக்க வேண்டிய லக்ஷ்யம்.

அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது திருக்குறள். ஆனாலும் சாரசரி புருஷப்ரஜையால் அப்படி ஓரளவுக்கு மேலே இருப்பதற்கு முடியாமல் அவனுடைய பௌருஷ இயற்கை இருக்கிறது. இந்த லோக நாடக விசித்ரத்தில் அன்றாட வாழ்க்கை நடத்த அவனுடைய அந்தப் பௌருஷமும் வேண்டித்தானிருக்கிறது. அதே ஸமயத்தில் ஸ்த்ரீயோ மனஸ் வைத்தால் அவளுடைய இயற்கைக் குணத்தால் அவனைவிட இந்த அம்சத்தில் ரொம்ப தூரம் முன்னே போக முடியும் என்பதையும், அப்படி இருப்பதே லோக நாடகத்தில் தவிர்க்க முடியாமல் புருஷர்களால் சேர்கிற மிளகாய்ப் பொடியை சமனம் செய்யும் நெய்யாக இருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டுதான் சாஸ்த்ரங்கள் அமர நிலைக்கே கதவைத் திறந்துவிடும் அடக்கத்தைக் குறிப்பாக ஸ்த்ரீகள் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய தர்மமாக விதித்திருக்கின்றன. அதாவது, அடக்கத்தை விதித்ததனால் ஸ்த்ரீகளை ஒரு இருட்டு உலகத்தில் அடைத்து வைக்காமல் அமரத்வம் என்ற ஜ்யோதி லோகத்திலேயே சேர்ப்பதுதான் சாஸ்த்ரகாரகர்களின் உத்தேசம்.

சாஸ்த்ர லக்ஷ்யம், ஆண்-பெண் யாரானாலும் முடிந்த மட்டும் அடங்கியிருக்கணும் என்பதுதான். அந்த 'முடிந்த மட்டும்' என்பது பெண்கள் விஷயத்தில், தனக்கென்று எதுவுமேயில்லை என்று ஆகி விடுகிற சரணாகதி வரையில் 'ஈஸி'யாகப் போக முடியும் என்பதால்தான் ஐடியல் நிலையில் ஒரு ஸ்த்ரீ பதியின் சித்தப்படியே பணிந்து நடக்கவேண்டும் என்று வைத்தது.

மஹான்கள் தங்களுக்கென்று எதுவுமேயில்லை, எல்லாம் 'தெய்வ சித்தம்' என்று சரணாகதி செய்துதான் தாங்களே தெய்வமாகியிருக்கிறார்கள். புருஷர்களில் தேடித் தேடி துர்லபமாகக் கிடைக்கக்கூடிய மஹான்களே அப்படி ஆனவர்கள். கண்ணுக்குத் தெரியாத ஒரு தெய்வத்திடம் சரணாகதி செய்வது சிரமமாயிருக்கிறது என்பதால் புருஷனுக்கு குரு என்பவரையும், அதே குரு ஸ்தானத்தில் ஸ்த்ரீக்குப் பதி என்பவரையும் சாஸ்த்ரங்கள் காட்டிக் கொடுக்கின்றன. ஆனாலும் நடைமுறை யிலோ உத்தம குணம் பொருந்திய குருவிடமுங்கூடப் புருஷ சிஷ்யர்களால் பரிபூர்ண சரணாகதி செய்யமுடியாமலே இருந்திருக்கிறது. அதே ஸமயத்தில் அதமனான பதியிடமும் சரணாகதி பண்ணி அவன் எத்தனை கஷ்டப்படுத்தினாலும் பொருட்படுத்தாமல் பொறுமையோடு அவனுக்குப் பணிவிடை செய்து வந்திருக்கிற பதிவ்ரதா சிரோமணிகள் தலைமுறை தோறும் நிறையப் பேர் இருந்திருக்கிறார்கள். இன்றைக்கும் அப்படி எங்கேயாவது நிச்சயம் இருப்பார்கள். அவர்களுடைய பழைய கர்மாவுக்காகவே அவர்கள் பதியிடம் கஷ்டப்படுவது. அதை எதிர்த்துப் போகாமல் அவர்கள் பொறுத்துக்கொண்டு, 'தன் செயலில்லை' என்று இருப்பதால் அவர்களுக்குப் புது கர்மா எதுவும் சேராது. இப்படிப் புது கர்மா சேராமல், பழைய கர்மாவை முழுக்க அநுபவித்துத் தீர்த்துவிட்டால் அதுவே கர்ம நாசம். அதனால் ஸம்ஸார பந்த நாசம். எதற்கு மேலாகவோ ஈடாகவோ ஒரு ஆத்ம லாபம் கிடையாதோ, எதற்காகத்தான் ஞானிகளும்

யோகிகளும் படாதபாடு படுகிறார்களோ, அந்தப் பெரிய லக்ஷ்யத்தை ஒரு ஸாதாரணப் பெண்ணே ஸாதித்து விடுகிறாள். அவள் 'உதிக்காதே!' என்று ஆக்ஞை பண்ணினால் ஸூர்யனே உதிக்காமலிருக்கிறான்; 'பதியின் உயிரைத் திருப்பித் தா!' என்று அவள் கேட்டால் யமன் அப்படியே பண்ணுகிறான்; அவளுடைய பாதிவ்ரத்யத்தை (கற்பு நெறியை) சோதிக்க வந்த த்ரிமூர்த்திகளின் மேல் அவள் தீர்த்த ப்ரோக்ஷணம் பண்ணினால் அவர்கள் பச்சைக் குழந்தைகளாகி விடுகிறார்கள்;* அவள் 'பெய்'யென்று சொன்னால் வருண பகவான் மழையைக் கொட்டுகிறான் - 'பெய்யெனப் பெய்யும் மழை' என்று திருவள்ளுவர் சொல்கிறார்; மழை பெய்வது மட்டுமில்லை - ஊரே நெருப்புப் பிடித்துக் கொள்ளட்டும் என்று அவள் சபித்தால் உடனே அக்னி பகவான் அப்படிப் பண்ணுகிறார் என்று கண்ணகி கதையில் படிக்கிறோம்; ஹநுமாரின் வாலில் நெருப்பு வைத்தபோது அது குளிர்ந்திருக் கவேண்டும் என்று ஸீதை சொன்னால், அப்படியே அங்கே அக்னி பகவான் (சிரித்து) தன்னுடைய வாலைச் சுருட்டிக் கொள்கிறான்!

இந்த மாதிரி ஒரு பெண்ணைத் தெய்வமாக உயர்த்து வதற்காகத்தான் அவளை சாஸ்த்ரம் பதியிடம் சரணாகதி செய்ய வேண்டும் என்று சொல்கிறதே தவிர, இஷ்டப்படிக் கொடுமைப்படுத்தும் புருஷர்களைக் கொண்டு ஸ்த்ரீகளை அடக்கி நசுக்கி வைப்பதற்காக இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மநுவும், தர்ம சாஸ்த்ரங்களைச் செய்த மற்ற ரிஷிகளும் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் நல்லதையே நினைத்துக் கருணை காட்டியவர்கள். அப்படிப்பட்டவர்கள் ம்ருதுவான ஸ்வபாவமுள்ள ஸ்த்ரீகளை ஹிம்ஸிக்க வேண்டுமென்று ஸ்வப்னத்திலும் நினைத்திருக்க மாட்டார்கள். தாடகை மாதிரியான

---

* ஸ்ரீசரணர் இங்கு குறிப்பிடும் மூன்று கற்புக்கரசியர் முறையே நளாயினியும் சாவித்ரியும் அநஸூயையும் ஆவர்.

துஷ்ட ராக்ஷஸியைக் கொல்லக் கூட ராமர் போன்றவர்கள் - குரு ஸ்தானத்திலிருந்த விச்வாமித்ரர் மாதிரியாவனர்கள் ஆஜ்ஞை பண்ணியும்கூட - யோஜனை பண்ணுமளவுக்கு ஸ்த்ரீ வதையைத் தடுத்து அவர்களுக்குக் கூடுதலாக தயா தாக்ஷிண்யம் காட்ட வேண்டும் என்று அவர்கள் எழுதி வைத்திருப்பதை மறந்து, வாயில் வந்தபடி பேசக்கூடாது. ஆனதால், 'ஸாதிப்பதற்குப் பரம கஷ்டமான சரணாகதியையும் ஸாதித்து அதனால் தெய்வமாக உயர்வதற்கு ஒரு ஸ்த்ரீயால் முடிகிறதே! முடிகிற அதை அவர்கள் செய்து மேன்மையைப் பெறட்டுமே!' என்பதால்தான் அதை விதியாகக் கொடுத்தார்கள்.

அடிமையல்ல; உற்ற ஸகா

பதி செய்வதை எதிர்க்கேள்வியே கேட்காமல், ஏற்றுக் கொள்வதுதான் ரொம்பவும் ச்லாக்யம் என்றாலும், மஹா பதிவ்ரதைகளில் சில பேரும் அவனுடைய அபிப்ராயத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் தங்களுக்கு நல்லதாகத் தோன்றுவதை அவனுக்கு எடுத்துச் சொன்னதுண்டு. அப்படிப்பட்டவர்களை சாஸ்த்ரங்களும் எடுத்துக் காட்டாகச் சொல்லி ஸ்தோத்ரிப்பதுண்டு.

ஸீதையைவிட ஒரு பதிவிரதை உண்டா? ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே அவள். வனவாஸத்துக்கு அவளை ராமர் அழைத்துக்கொண்டு போகமாட்டேன் என்றபோது அவள் பயப்படாமல் அவருக்கு எதிர்வாதம் பண்ணித்தானே கடைசியில் அவரும் ஒப்புக்கொள்ளும்படி ஆயிற்று? அப்புறம் தண்டகாரண்யத்தில் ரிஷிகள் ராமரிடம் வந்து தங்களை ஹிம்ஸிக்கும் ராக்ஷஸ வர்க்கத்தை அவர் நாசம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அவரும் அப்படியே செய்வதாக வாக்குக் கொடுக்கிறார். அதற்கு ஸீதை ஆக்ஷேபம் தெரிவிக்கிறாள். 'வனவாஸம் என்று வந்தோம். அதற்கேற்க இங்கு

நாம் தபஸ்விகளாக ஸாத்விக ஜீவனம் நடத்துவதுதான் முறை. ராக்ஷஸ வதத்தில் இறங்க வேண்டியதில்லை' என்கிறாள். தன்னுடைய பதிபக்திக்கு அழகாக, *ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே*[1] அதாவது, 'உங்களுக்கே தெரிந்ததைத்தான் ஞாபகப்படுத்துகிறேனே தவிரப் புதுசாக நான் ஒன்றும் உபதேசிக்கவில்லை' என்றும் சொல்கிறாள். ஆகக்கூடி, அவர் எது சொன்னாலும் அப்படித்தான் என்று இல்லாமல்தானே அவள் ஒரு மாற்று அபிப்ராயம் எழுப்பியிருக்கிறாள்? அவள் சொன்னதற்கு ராமர் ஸந்தோஷப்பட்டு அவளை '*தர்மஜ்ஞே!*' - 'தர்மம் தெரிந்தவளே!' - என்று கூப்பிட்டு, ஆனாலும் தாம் செய்ததுதான் க்ஷத்ரிய தர்மம், அதுவும் அவளுக்குத் தெரிந்ததுதான் என்று அவள் பாணியிலேயே பதில் சொல்கிறார்.[2] அப்புறம் அவளும் அதை ஒப்புக் கொள்கிறாள்.

வதை கார்யம் வேண்டாமென்கிற இடத்தில் ஸீதை, 'உங்களிடம் ஸ்நேஹத்தினாலேயே ***(ஸ்நேஹாய)*** சொல்கிறேன்' என்கிறாள். 'ஸ்நேஹம்' என்பது கவனிக்க வேண்டிய 'பாயின்ட்'. பதிக்குப் பத்னி ஸ்நேஹிதை - ஸகா - companion; அடிமையில்லை என்கிற பாயின்ட். விவாஹத்தில் வருகிற 'ஸப்தபதி' முதலான வேத மந்த்ரங்களைப் பார்த்தாலே போதும், பெண்டாட்டி புருஷனுடைய slave இல்லை; அவனுடைய companion தான் என்பதற்கு. பெண்டாட்டியைப் புருஷனுக்கு அடிமையாக வேத தர்மம் நினைக்கவேயில்லை; 'வாழ்க்கைத் துணை நலம்' என்று அதிகாரப் பெயரே கொடுத்து திருவள்ளுவர் சொல்கிறபடி இரண்டு பேரும் கைகோத்துக்கொண்டு துணையாக ஒருவரையொருவர் வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றிக் கொண்டு போகிறவர்கள் என்றே நினைத்தது. ஸ்ப்தபதி முடிவில் வரன் (மணமகன்) வதூவிடம் (மணமகளிடம்) 'இந்த ஸப்தபதியினால் நாம்

1 வால்மீகி ராமாயணம், அரண்ய காண்டம், ஸர்கம் 9

2 வால்மீகி ராமாயணம், அரண்ய காண்டம், ஸர்கம் 10

ஸ்நேஹிதர்களாகி விட்டோம். பரஸ்பரம் நாம் இந்த ஸ்நேஹத்திலிருந்து எந்நாளும் பிரிக்கப்படாமலிருப்போமாக! நாம் ஒன்று சேர்ந்தே ஸங்கல்பங்கள் செய்வோம். வாழ்க்கையின் ஸகல அம்சங்களையும் ஒன்று சேர்த்தே அநுபவிப்போம்' என்றெல்லாம் ஸ்பஷ்டமாகச் சொல்கிறான். 'க்ருஹத்துக்கு ராணியாக இரு!' *(ஸம்ராஜ்ஞீ பவ)* என்றே வதூவுக்குச் செய்கிற வேத மந்த்ர ஆசீர்வசனம்; 'அடிமையாய் இரு' என்றில்லை.

விவாஹ ஸம்ஸ்காரத்தில் இன்னொரு வேத மந்த்ரம் இதற்கு முன்னதாக இருக்கிறது. அதைப் பார்த்தால் இந்தக் காலத்து women's lib -காரர்களையும் (பெண்கள் சுதந்திர இயக்கத் தினரையும்) வேதம் மிஞ்சி விடுகிறது என்று கூடத் தோன்றும்! அதில் 'அகமுடையான் தலையில் ஏறி உட்கார்ந்து கொள்' - *மூர்தானம் பத்யு: ஆரோஹ* - என்றே வருகிறது! வாஸ்தவத்தில் (இதன்) தாத்பர்யம், பதியைப் பத்னி தனக்கு அடிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பதல்ல. ஒருவரை நாம் ரொம்பவும் அளவுக்கு மீறி மெச்சுவதைத் 'தலையில் தூக்கி வைத்துக் கொள்வது' என்கிறோமல்லவா? அந்த மாதிரி, ஒரு க்ருஹிணி க்ருஹத்தை நன்றாகப் பரிபாலனம் செய்து பதி ரொம்பவும் மெச்சிக் கொண்டாடும்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதே தாத்பர்யம். அப்படியானாலும் ஒரு பதி தன் பத்னியை அடிமையின் ஸ்தானத்தில் வைத்திருக்காமல், தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறான் என்று சொல்லுமளவுக்கு மெச்சி, போற்றி, கௌரவம் கொடுத்தே நடத்த வேண்டும் என்றுதானே இதிலிருந்து ஆகிறது?

பதியிடம் பத்னியின் ஆறுவித உறவுகள்

வீட்டுக் கார்யம் பண்ணுவதில் ஒரு க்ருஹிணி - இல்லக் கிழத்தி என்பாள் - வேலைக்காரி மாதிரியிருந்தாலும் அதனால் அவள்



அந்த வேத மந்த்ரத்தில் 'அகமுடையான்
தலையில் ஏறி உட்கார்ந்து கொள்' -
மூர்தானம் பத்யு: ஆரோஹ -
என்றே வருகிறது!

பதிக்கு அடிமை என்று அர்த்தமில்லை. பதிக்கு வேலைக்காரியாக இருப்பதோடு நிற்காமல் இன்னும் பலவாகவும், ஸகலமாகவுமே இருப்பவள் அவள் என்று 'நீதி சாஸ்த்ர'த்தில் சொல்லியிருக்கிறது.[1] வைதிகர்களுக்கு 'ஷட்கர்மம்' என்று ஆறு உண்டு: வேதம் ஓதல் - ஓதுவித்தல், யாகம் செய்தல் - செய்வித்தல், தானம் வாங்குதல் - கொடுத்தல் என்று ஆறு. அதே மாதிரி இங்கே (நீதி சாஸ்திரத்தில்) ஸ்த்ரீகளுக்கும் ஷட்கர்மா சொல்லியிருக்கிறது. என்னென்ன?

ஒன்று: *கார்யேஷு தாஸீ* - வேலைக்காரியாகக் காரியம் பண்ணுவது.

இரண்டு: *கரணேஷு மந்த்ரீ* - பதிக்கு ஆலோசனை சொல்வதில் மந்த்ரியாக இருக்க வேண்டும். தான் வைத்ததே சட்டம் என்று பதி இல்லாமல் பத்னியின் ஆலோசனை கலந்தே எதுவும் பண்ண வேண்டும் என்ற அபிப்ராயம் இங்கு ஸ்பஷ்டமாக வருகிறது. மந்த்ரி ஸ்தானத்தில் யோஜனை சொல்லுமளவுக்கு ஸ்த்ரீகளுக்கு புத்தி கூர்மை இருப்பதாக நம்முடைய ஆன்றோர் மெச்சியதும் தெரிகிறது.

கார்யேஷு தாஸீ, கரணேஷு மந்த்ரீ - மூன்றாவதாக, *ரூபேஷு லக்ஷ்மீ* - தோற்றத்தில் லக்ஷ்மியாக, அதாவது லக்ஷ்மீகரமாக, இருக்கவேண்டும். மநுதர்ம சாஸ்த்ரத்திலும் 'க்ருஹிணிக்கும் மஹாலக்ஷ்மிக்கும் பேதமில்லை' என்று வருகிறது.[2]

அப்புறம் நாலாவதாக, *க்ஷமயா தரித்ரீ* - ரூபத்தினால் ஸ்ரீதேவியாக இருப்பவள் பொறுமையால் பூமாதேவியாக இருக்கவேண்டும்.

ஸ்நேஹே ச மாதா என்பது ஐந்தாவது. இங்கேதான் ஸ்த்ரீக்கு நம் தர்மம் எவ்வளவு உச்சஸ்தானம் கொடுத்திருக்கிறது என்று தெரிகிறது. அன்பு காட்டுவதில் ஒரு தாய் குழந்தையிடம்

---

1 ச்லோகம் 50

2 அத்யாயம் 9, ச்லோகம் 26

எப்படியிருப்பாளோ அப்படியே பத்னி பதியிடம் இருக்கவேண்டும் என்று அர்த்தம். அதாவது ஒரு பதிக்கு அவனுடைய பத்னியையே மாத்ரு ஸ்தானத்தில் உயர்த்திக் காட்டுகிறது. ஆதி மூல வேதமும் ஸ்த்ரீயை ஆசீர்வதிக்கும்போது "பத்துக் குழந்தையைப் பெற்றுக்கொள். அப்புறம் பதியையும் பதினோராவது குழந்தையாக்கிக்கொள்" என்கிறது. அடிமை யாயிருந்தால் அப்படிச் சொல்லுமா?

இப்படி ஐந்தைச் சொன்னபின் கடைசியாகத்தான் அவள் பதிக்குச் சிற்றின்பம் அளிப்பவளாயும் இருக்க வேண்டும் என்று சொல்லி, அதில் வேசிகள் மாதிரி இருக்கவேண்டும் என்று (நீதி சாஸ்த்ரத்தில்) சொல்லியிருக்கிறது. *சயநே து வேச்யா.*

கார்யேஷு தாஸீ, கரணேஷு மந்த்ரீ, ரூபேஷு லக்ஷ்மீ; க்ஷமயா தரித்ரீ ।

ஸ்நேஹே ச மாதா, சயநே து வேச்யா ஷட்கர்மயுக்தா குலதர்ம பத்நீ ॥

அடிமைத்தனமல்ல; ரக்ஷணையே

நடுவிலே மநுவைப் பற்றிச் சொன்னேன்; அவர் க்ருஹிணியை மஹாலக்ஷ்மியாகச் சொல்லியிருப்பதாகச் சொன்னேன். அவர் பேரில்தான் நவீனக் கொள்கைக்காரர்களுக்கெல்லாம் ஒரே கோபம். 'ஸ்த்ரீகள் ஸ்வாதந்த்ரியம் (சுதந்திரமாயிருக்கும் நிலை) பெறத்தக்கவர்களல்ல; அவர்கள் பால்யத்தில் தகப்பனாரின் ரக்ஷணையிலும், நடுவயஸில் பதியின் ரக்ஷணையிலும், விருத்தாப்யத்தில் புத்திரர்களின் ரக்ஷணையிலும் இருக்க வேண்டும்' என்று அவர் சொல்லியிருப்பதாலேயே கோபம். ஆனால் நான் முன்னேயே சொன்ன மாதிரி ஸ்வாதந்த்ரியத்துக்கு நேர் எதிரான சரணாகதியும், அதற்கான அடக்கமும்தான் சாஸ்த்ரங்களின் பரம லக்ஷ்யமாகையால் அப்பேர்ப்பட்ட லக்ஷ்யத்தை அதிகம் கஷ்டப்படாமல் ஸ்த்ரீகள் ஸாதிக்க முடிவதைத்தான் மநு மனஸில் கொண்டு அதையே அவர்களுக்குக் கண்டிப்பான விதியாகப் போட்டுக் கொடுத்தார். அப்போதும்

பிதாவோ, பர்த்தாவோ, புத்திரர்களோ அந்த ஸ்த்ரீயை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தும்படிச் சொல்லாமல் காப்பாக ரக்ஷிக்க வேண்டும் என்று நல்ல வார்த்தையாகவே போட்டிருக்கிறார்;

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே।

ரக்ஷந்தி வார்தகே புத்ரா: ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி ॥ *

ஸாதாரணக் கல் இறைபடுகிறமாதிரி நவமணிக்கற்களை இறைபடவிடுவார்களா? நவமணி மாதிரிதான் பெண்கள். அதனால்தான் பெண்மணி, நாரீமணி என்றே சொல்வது. புருஷமணி, ஆண்மணி என்று சொல்கிற வழக்கமேயில்லை. 'அந்தப் புருஷர்கள் லோக வியவஹாரத்தில் வெளியிலே இறை படட்டும்; ஸ்த்ரீகளை அப்படி ஸ்வதந்த்ரம் கொடுத்து இறைபட விடவேண்டாம். ஸ்வதந்த்ரத்தினால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே கெடுதி விளைவித்துக் கொள்ளலாம். அவர்களை வெளியில் விட்டால் புருஷர்களாலும் அவர்களுக்குக் கெடுதி விளையலாம். இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் நவமணிகளைக் காப்பாகப் பெட்டியில் வைத்து ரக்ஷிக்கிற மாதிரி ஸ்த்ரீகளையும் க்ருஹத்தில் காப்பாக அந்தந்த பிராயத்துக்கு ஏற்ப, அப்பா, அகமுடையான், பிள்ளை என்பவர்களின் ரக்ஷணையில் வைத்துவிடுவதான் ஸரி' என்றே மநுதர்ம சாஸ்த்ரம் அப்படி விதி பண்ணிற்று.

எந்த அப்பாவும் குமாரியை அடிமை மாதிரி பாவித்துக் கொடுமை பண்ண மாட்டார்தான். பிள்ளையும் அம்மாவை அப்படியே! சாஸ்த்ரப்படிப் பார்த்தாலும் ஒரு புத்ரனானவன் அப்பாவுக்கும் முந்தைய ஸ்தானம் அம்மாவுக்குத்தான் தரவேண்டும். அப்படிப்பட்டவன் அவளைக் கொடுமை பண்ணினால் அது ப்ராயச்சித்தமேயில்லாத பாபமாகத்தான் சாஸ்த்ரத்தில் வரும். மநுவின் ச்லோகத்தில் ஒரு ஸ்த்ரீயை பர்த்தாவும் அவளுடைய

* மநுஸ்ம்ருதி 9.3

அப்பா-பிள்ளைகள் போலவே ரக்ஷிக்க வேண்டும் என்றுதான் இருக்கிறதே தவிர, 'ஆட்-ஊட்' அதிகாரம் செய்து அடிமை - கொடுமைப்படுத்தணும் என்று இல்லை - *பர்த்தா ரக்ஷதி யௌவநே* என்றே இருக்கிறது.

கொடுமைப்படுத்தணும் என்று அவர் சொல்லாதது மட்டுமில்லை. இன்னோரிடத்தில் ஸ்பஷ்டமாகவே அவர்களை ரொம்பவும் கௌரதையாக, பூஜிதையாக நடத்த வேண்டும் என்றும் சொல்கிறார்.

யத்ர நார்யாஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா: ।

யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ராபலா: க்ரியா: ॥ *

'எங்கே பெண்கள் பூஜிதையாக நடத்தப்படுகிறார்களோ, அங்கேயே தெய்வங்கள் ஸந்தோஷம் அடைந்து ப்ரீதி செய்கிறார்கள். எங்கே அப்படி நடத்தவில்லையோ, அங்கே எடுத்த காரியம் எதுவும் பலிக்காது' என்று அர்த்தம்.

தெய்வங்களின் உதாரணம்

நம்முடைய தெய்வங்களைப் பார்த்தாலே பெண்களுக்கு எவ்வளவு உசந்த ஸ்தானம் தந்திருக்கிறதென்று தெரியும். ப்ரஹ்மா தன்னுடைய நாக்கிலேயே ஸரஸ்வதியை வைத்துக் கொண்டிருக்கிறார். மஹாவிஷ்ணு லக்ஷ்மியை வக்ஷஸ்தலத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்; பரமேச்வரன் அம்பாளுக்குப் பாதி சரீரத்தையே கொடுத்திருக்கிறார். நவயுகப் பெண்கள் தங்கள் பர்த்தாவின் பெயரைத் தங்கள் பெயருக்குப் **பின்னால்** போட்டுக் கொண்டிருக்கிறார்களென்றால் நம்முடைய புருஷ தெய்வங்களோ தங்கள் ஸதிகளின் பெயரைத் தங்கள் பெயருக்கு **முன்னால்** போட்டுக் கொண்டிருக்கிறார்கள் - உமாமஹேச்வரன், கௌரீசங்கரன், லக்ஷ்மீநாராயணன், ஸீதாராமன், ராதாகிருஷ்ணன் என்றிப்படி.

---


* மநுஸ்ம்ருதி 3.56

நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் பார்த்தால் ஸ்த்ரீகளுக்கே முழு முக்யத்துவம் கொடுத்து ஸுமங்கலி ப்ரார்த்தனை என்று இருக்கிற மாதிரி புருஷர்களுக்கு இல்லை. ஸுவாஸினி பூஜை செய்கிற மாதிரி புருஷர்களை உட்கார்த்தி வைத்துப் பூஜை செய்வதில்லை. ஸ்த்ரீகளுக்குத் தான் ரவிக்கைத்துண்டு தாம்பூலம் உண்டே தவிரப் புருஷர்களுக்கு வஸ்த்ரம் வைத்துத் தருவதில்லை. நவராத்ரி-கொலு ஒன்பது நாள் ஸ்த்ரீகளின் கோலாஹலத்துக்கே இருக்கிற மாதிரிப் புருஷர்களுக்கு என்ன இருக்கிறது?

பானை பிடித்தவள் பாக்யம்

பாக்யத்துக்கெல்லாம் உறைவிடமாக ஸ்த்ரீயைத்தான் வைத்திருக்கிறது. புருஷனை நீண்ட ஆயுள் உடைய 'சிரஞ்ஜீவி' என்று சொல்வதோடு நிறுத்திவிடுகிறோம். அந்த சிர ஜீவனத்தில் (நீண்ட ஆயுள் காலத்தில்) எல்லாம் சுபமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஸ்த்ரீகளைத்தான் சொல்லும்போது நீண்ட ஆயுள் கொண்ட 'சிராயுஷீ' என்பதோடு விடாமல் 'ஸௌபாக்யவதி', 'ஸௌபாக்யவதி' என்றும் சேர்த்துச் சொல்கிறோம்.

'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்யம்' என்பதாக, ஒரு க்ருஹத்தின் ஸுபிக்ஷத்துக்கு க்ருஹிணியையே மத்யமாக வைத்துப் பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது. க்ருஹம் என்பது அவளுடைய ராஜ்யம். 'க்ருஹம்' என்ற வார்த்தைக்கு 'க்ருஹிணி' என்றும் அர்த்தமுண்டு. அதனால்தான் க்ருஹப்ரவேசத்துக்கு நாள் பார்க்கும்போதுகூட க்ருஹிணியின் நக்ஷத்ரத்துக்கே முக்யமாகப் பார்ப்பது. 'இல்லாள்' என்று அவளுக்குப் பேர் இருக்கிற மாதிரி 'இல்லான்' என்று புருஷனுக்குப் பேர் இல்லை. (சிரித்து) 'இல்லான்' என்றால் ஒன்றும் இல்லாதவன் என்றுதான் அர்த்தம். அவள்தான் இல்லத்தில் அரசு செய்கிறாள்; அதிகாரத்தினால் இல்லாமல் அடக்கத்தினாலேயே அப்படிச் செய்கிறாள்.



'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்யம்' என்பதாக, ஒரு க்ருஹத்தின் ஸுபிக்ஷத்துக்கு க்ருஹிணியையே மத்யமாக வைத்துப் பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது.

அவளாகவே அப்படி இருப்பதுதான் அழகு; உத்தமம்.

சாஸ்த்ரம் எதிர்பார்ப்பது, பெண்கள் தாங்களாகவே அடங்கியிருப்பதைத்தானே தவிர, மற்றவர்கள் அவர்களை அடக்கி வைக்கும்படி அது சொல்லவில்லை. அதையே இப்போதும் நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வுரையின் ஸாராம்சம்

ஸ்த்ரீத்வம்-பௌருஷம் இரண்டும் அடங்குவதான மநுஷ்யத்வம் என்று பொதுவாக இருக்கிறதே, அதற்கே அடக்க குணம் அவச்யந்தான். ஆனாலும் பௌருஷம் ஓரளவுக்கு மேல் அடங்காது. பராசக்தி விசித்ரமாகச் செய்திருக்கிற இந்த லோக நாடகத்தில் புருஷர்கள் அப்படி ஒரே அடக்கமாக இல்லாமல் காரியங்களைச் செய்வதும் அவசியமாயிருக்கிறது. அவர்கள் ஒரே அடக்கமாக இருக்க வேண்டியதில்லை என்பதால் ஒரேயடியாக அடங்காமல் வெறித்தனத்தில் போக வேண்டும் என்று ஆகாது. துரதிருஷ்டவசமாக இப்போது அப்படித்தான் ஆகிக்கொண்டு வருகிறது. இது, புருஷர்களைவிட அடங்கியிருக்க வேண்டிய ஸ்த்ரீகள் அப்படியில்லாமல் பௌருஷ வியாபாரங்களில் ஈடுபடுவதன் தொடர்ச்சியாக, அவர்களை மிஞ்ச வேண்டும் என்று புருஷ வர்க்கம் போகிற போக்கால்தான். அதன் நிகர விளைவாக, ஸாத்விகத்துக்கும் மனத்ருப்திக்கும் பெயரெடுத்த நம் தேசத்தில் ஒரே ஹிம்ஸையும் அதிருப்தியும் அசாந்தியும் போட்டியும் பூசலும் வலுத்து வருகிறது. இப்படியே போனால் தேசமே ரண பூமியாகி விடும்.

அப்படி ஆகாமல் காப்பாற்றுவது பெண்களின் கையில்தான் இருக்கிறது. அவர்கள் அடங்கியிருக்க ஆரம்பித்தால்போதும், அடுப்படியிலிருந்து விறகை இழுத்தால் மேலே பொங்க ஆரம்பிக்கிற பால் தானே தணிகிற மாதிரி புருஷர்களின் வெறித்தனமான அடங்காமை கட்டுப்படும். தேசம் ரண பூமியாகாமல், ஸ்வர்கலோகமாக மாறும்.



பெண்களுக்கு இல்லாத எந்தப் பெருமையும்
புருஷர்களுக்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால்
பெண்களுக்கே ஜாஸ்திப் பெருமை.
அப்படியிருக்கும்போது பெண்கள் ஏன்
ஆண்கள் மாதிரி ஆக வேண்டும்?

அடக்க குணம் மட்டுமில்லை; 'பெண்மை' என்பதற்கே விசேஷமாக உரித்தானதாக நான் சொன்ன எல்லா குணங்களும் இன்றைக்கு விருத்தியாக வேண்டும். அப்படி ஆனால்தான் பல தினுஸான வன்முறைகளால் அஸுரலோகமாகிவரும் தேசத்துக்கு லகான் போட்டு, சாந்தியும் த்ருப்தியும் ஸௌக்யமும் goal- ஆக இருக்கிற பாதையில் திருப்பிவிட்டதாகும். நமக்கு தர்மங்களை வகுத்துக் கொடுத்திருப்பவர்கள், தர்மம் என்ற வ்ருக்ஷத்துக்கு ஸ்த்ரீகளே வேர் என்ற உயர்ந்த அபிப்ராயம் உடையவர்கள். *ஸ்த்ரீ மூலம் ஸர்வ தர்மா:* என்றே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றேன். 'மூலம்' என்றால் வேர். வேர் நன்றாக இருந்துவிட்டால் மரம் முழுசுமே நன்றாக இருந்து விடுமல்லவா? அப்படி, ஸ்த்ரீகள் தங்கள் தர்மத்தில் ஸரியாய் இருந்துவிட்டால் போதும், புருஷர்களும் அப்படி ஆகி, லோகமே தர்மத்தில் நிலைப் பட்டுவிடும். அதுதான் இப்போது கார்யம்.

இத்தனை ஆயிரம் வருஷங்களாக நம் தேசத்தில் பெண்மை என்று இருந்து வந்திருப்பதை எப்படியாவது நாம் ரக்ஷித்துத் தர வேண்டியதே கார்யம். அதை நாம் ரக்ஷித்துக் கொடுத்தால் அது நம்மை ரக்ஷிக்கும். *தர்மோ ரக்ஷதி ரக்ஷித:* - தர்மத்தை ஒருத்தன் ரக்ஷித்தால் அந்த தர்மம் அவனை ரக்ஷிக்கும் என்று மஹாபாரத வசனம். அப்படி தர்மம் என்று மநுஷ்ய ஜாதிக்குப் பொதுவாக இருப்பதில் குறிப்பாக ஸ்த்ரீ தர்மம் என்பதை இன்றைக்கு அந்த ஸ்த்ரீகள் ரக்ஷித்துக் கொடுத்தாலே புருஷ தர்மமும் தன்னாலேயே சீர்ப்பட ஆரம்பித்து எல்லா இடத்திலும் தர்மமும், அதோடு கைகோத்துக்கொண்டு வருகிற க்ஷேமமும் தழைக்கும்.

இதுதான் ஸமூஹம் முழுவதன் க்ஷேமத்தையும் உத்தேசித்து நான் பெண்களுக்குச் சொல்வது. 'உங்களுக்கு இல்லாத எந்தப் பெருமையும் புருஷர்களுக்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் உங்களுக்கே ஜாஸ்திப் பெருமை. அப்படி யிருக்கும்போது நீங்கள் ஏன் அவர்கள் மாதிரி ஆக வேண்டும்?



ஸ்த்ரீகள் தங்கள் தர்மத்தில் ஸரியாய்
இருந்துவிட்டால் போதும், புருஷர்களும் அப்படி
ஆகி, லோகமே தர்மத்தில் நிலைப்பட்டுவிடும்.

அப்படி உங்களைக் குறைத்துக் கொள்ளாமல் நீங்கள் நீங்களாகவே உசந்து நில்லுங்கள்' என்று சொல்கிறேன்.

இப்போது மற்ற விஷயங்கள் எப்படிப் போனாலும் அம்பாள் பக்தி வளர்ந்து வருகிறது. இப்படி ஸ்த்ரீ ரூபமாகப் பரமாத்மாவை பக்தி பண்ணுவதில் ஸ்த்ரீகள் விசேஷமாக ஈடுபட்டு வருகிறார்கள். அந்த அம்பிகைதான் ஸ்த்ரீகளுக்குத் தாங்கள் ஸ்த்ரீகளாகவே இருக்கவேண்டும் என்ற ப்ரஜ்ஞையையும், அதிலேயே பெருமித உணர்ச்சியையும் ஊட்டி சாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களால் இத்தனை காலம் சோபையுடன் வாழ்ந்து வந்த ஸ்த்ரீத்வத்துக்கு - பெண்மைக்கு - இக்காலத்திலும் எக்காலத்திலும் ரக்ஷணம் தர வேண்டும்.



பெரியவா சரணம்





ஸ்த்ரீகள் தங்கள் தர்மத்தில்
ஸரியாய் இருந்துவிட்டால் போதும்,
புருஷர்களும் அப்படி ஆகி,
லோகமே தர்மத்தில் நிலைப்பட்டுவிடும்.